BOI
SRI LANKA

# ஆண்டறிக்கை
# 2011

இலங்கை முதலீட்டுச் சபை

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

BOI
SRI LANKA

# ஆண்டறிக்கை
# 2011

## இலங்கை முதலீட்டுச் சபை

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

BOI

SRI LANKA

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| **தலைவரின் செய்தி** | **4** |
| **முதலீட்டுச் சபை பற்றிய முகக் குறிப்பு** | **6** |
| - தூர நோக்கும், பணிகளும் | 7 |
| - பணிப்பாளர் சபை | 8 |
| - முதலீட்டுச் சபையின் சிரேஷ்ட அலுவலர்கள் | 9 |
| **மேலார்ந்த நோக்கு** | **10** |
| - பிரதான நிகழ்வுகளும், முக்கியமானவையும் | 10 |
| - இலங்கை முதலீட்டுத தோற்றம் | 11 |
| - ஆர்வமூட்டும் பணிகள் | 13 |
| - முதலீட்டுச் செயற்பாடு | 17 |
| **நிதிச் செயற்பாடு பற்றிய குறிப்பேடு** | **20** |
| - பணிப்பாளர் நாயகத்தின் செயலகம் | 20 |
| - முதலீட்டு ஆர்வமூட்டல் | 20 |
| - முதலீட்டாளர் சேவைகள் | 26 |
| - சட்ட உதவி | 28 |
| - அடித்தள அபிவிருத்தியும் பிராந்திய வலயச் செயற்பாடுகளும் | 29 |
| - சுற்றாடல் முகாமைத்துவம் | 29 |
| - பொறியியல் அங்கீகாரங்களும், விசேட கருத்திட்டங்களும் | 31 |
| - கைத்தொழில் உறவுகள் | 33 |
| - ஊடகமும், வெளியீடும் | 35 |
| - நிருவாகம் | 35 |
| - மனித வளங்கள் முகாமை | 36 |
| - ஆராய்ச்சியும், கொள்கைக் கடைபிடிப்பும் | 41 |
| - தகவல் தொழில் நுட்பம் | 41 |
| - உள்ளகக் கணக்காய்வு | 43 |
| **நிதிச் செயற்பாடு** | **43** |

- செயற்பாட்டு நடவடிக்கை வருமானம் 44

- செயற்பாட்டு நடவடிக்கைச் செலவு 45

- பிரதான செலவு 45

- இலங்கை முதலீட்டுச் சபை
  31-12-2011 ல் முடிவடைந்த திகதியன்று உள்ளபடி நிதி நிலைமை பற்றிய குறிப்பு 46

- இலங்கை முதலீட்டுச் சபை
  31.12.2011-ல் முடிந்த காலத்துக்கான நிதிச் செயல் பற்றிய கூற்று 47

- இலங்கை முதலீட்டுச் சபை
  31.12.2011-ல் முடிவடைந்த காலப்பிரிவுக்கான நிதியோட்டக் கூற்று 48

- 31.12.2011 ல் இருந்த படி நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் 49

**கணக்காய்வு அறிக்கைகள்** 55

- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையிலுள்ள நோக்குகள்
  மீதான குறிப்பேடுகள் 81

- கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 103

**பின் இணைப்புகள்** 57

- பிரதான செயற்பாடுகள் 106

- முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17-ம் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட
  கருத்திட்டங்களின் சுருக்கம் 109

- முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16-ம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட
  கருத்திட்டங்களின் சுருக்கம் 110

**முதலீட்டுச் சபை அலுவலகங்களின் விபரக் கொத்து** 111

# தலைவரின் செய்தி



2011-ம் ஆண்டானது ஒரு குறிப்பிடத்தக்க ஆண்டாகும். காரணம், முதலீட்டுச் சபையின் வரலாற்றின் முதன் முதலாக இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீடு அமெரிக்க டொலர்கள் ஒரு பில்லியனைத் தாண்டியது. இதற்கு மேலாக இது வெளிநாட்டு நேரடி முதலீட்டைப் பொறுத்த வரை 2010-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 107மூ அதிகரிப்பைக் காட்டியது. முதலீட்டுக்கான ஓர் இடம் என்ற வகையில் இலங்கை கொண்டுள்ள வளர்ந்து வரும் நம்பிக்கையினை இது காட்டுகின்றது.

இம் முதலீடுகளில் பல, ஆசிய நாடுகளிலிருந்து வந்தவையாகும். இலங்கைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டைப் பொறுத்தவரை இந்நாடுகள் அதிக அளவில் தலைமை வகிக்கின்றன.

இவ்வெய்தலை அடைவதில் பல காரணிகள் குறிப்பிடத்தக்க பாகத்தை வகித்துள்ளன. இதற்குக் காரணம் முதலீட்டுச் சபையின் முயற்சிகளின் விளைவாகும். அத்துடன் விசேடமாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின், அரசாங்கத்தின் பிற முதலீடு நிறுவனங்களின் முயற்சியும் குறிப்பிடத்தக்கது.

பிரதான அதிகரிப்பு உற்பத்தித் துறையாகும். (2010 ல் இருந்த அமெரிக்க டொலர் 160 உடன் ஒப்பிடும் போது 2011 அமெரிக்க டொலர் 322 ஆக இருந்தது. அத்துடன் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்புத் துறை 2011ல் அமெரிக்க டொலர் 726 மில்லியன்களாக இருந்தது. (2010ல் இருந்த அமெரிக்க டொலர் 350 மில்லியனுடன் ஒப்பிடும் போது)

இக்கணக்குகள் 2011ல் நேரடி வெளிநாட்டு முதலீட்டில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டும் அதே வேளை பின்வரும் விடயத்தையும் சுட்டிகாட்டுவது ஒத்த வகையில் முக்கியமானதாகும். முக்கியமான துறைகள் பல மேம்பாடடையச் செய்யப்பட்டமையாலும், வெளிநாட்டு நேரடி முதலீடு தொடர்பான வற்றை மேம்படுத்தியமையும் வெற்றிக்குக் வாய்ப்பளித்தது.

அதாவது இத்துறைகள் நாட்டின் தேசிய அபிவிருத்தி எல்லைகளை அடைவதுடன், விவசாயமும் விவசாயப் பதனிடல்களும், உற்பத்தி, சுற்றுலா கல்வியுடன் திறன் அபிவிருத்தியும், தகவல் தொழில் நுட்ப / மற்றும் உட்கட்டமைப்புத் துறை என்பனவும் அடங்கும்.

முதலீட்டுச் சபை செயற்படும் இன்னொருதுறை இலங்கையின் பொருளாதார உறவுகளை நட்பான ஆசிய நாடுகளுடன் உறுதிப்படுத்துவதற்காகப் பணியாற்றுவதாகும். இதற்காக இருபக்க உறவுகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுவதுடன் இலங்கையை மேலும் முதலீட்டு நட்பு மிக்க நாடாக மாற்றும் நோக்கத்தில் பாதுகாப்பு ஒப்பந்தங்களும் செய்யப்படுகின்றன.

இலங்கைக்குத் தனது ஒப்பீட்டளவில் வாய்ப்பான அதிகரித்து வரும் முதலீட்டு வாய்ப்புகள், வசதியான முதலீட்டு கொள்கைகள், முக்கியமிக்க இட அமைப்பு, போதுமான அடிக்கட்டமைப்பு, உற்பத்தி திறன் மிக்க வேலையாளர்கள், உறுதியானதும், கவர்ச்சிகரமானதுமான வங்கி மற்றும் காப்புறுதித் துறைகள் என்பற்றிலும் கவனஞ் செலுத்துவது முக்கியமாகும்.

இலங்கை முக்கியமான பல கப்பல் போக்குவரத்து பாதைகளின் கேந்திர ஸ்தானத்தில் அமைந்து உள்ளதால், மத்திய பூகோள அமைப்பிலிருந்து பயன் பெறுவதற்குச் சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும். எனவே முதலீட்டு முயற்சிகள் நாட்டின் தொடர்புகள் பிராந்தியத்தில் பிரதான இடமாக மாற்றுவதற்காக இருத்தல் வேண்டும். உட்கட்டமைப்பு அபிவிருத்தியிலான முதலீடு மிக முக்கியமானதாகும். அது நாட்டின் பாதைகள், துறைமுகங்கள் மற்றும் உள்ளூர், மற்றும் சர்வதேச விமான நிலையங்களைக் கட்டியெழுப்ப அல்லது மேம்படுத்துவதற்கானவையாக அமைதல் வேண்டும்.

எனவே இலங்கையானது முன்னேறுவதும் மற்றும் வர்த்தக சினேக பூர்வத் தன்மை மிக்க நாடாகவும் உணரப்பட வேண்டியது முக்கியமானதாகும். அவ்வகையில், 2011-ம் ஆண்டில் சில வெற்றிகள் அடையப் பெற்றுள்ளன. இலங்கை உலகப் போட்டித் தன்மையில் 62-ம் இடத்திலிருந்து 52-ம் இடத்துக்கு முன்னேறியுள்ளது. இலங்கை வெளிநாட்டு நேரடி முதலீட்டில் பெரிய அளவை அடைய வேண்டுமென இருந்தால் உண்மையான முதலீட்டு நாட்பு மிக்க சூழ்நிலையினை ஏற்படுத்துவதற்காக, முதலீட்டுச் சபை மற்றும் ஏனைய முகவர் நிலையங்களைப் பொறுத்த வரை சீர்திருத்தங்களும், வசதிகளும் மேம்படுத்தப்படுதல் வேண்டும்.

உண்மையில் இப்போது உள்ள முதலீட்டாளர்கள் ஆகச் சிறந்த தூதுவர்களாகும். எனவே அவர்கள் இலங்கையில் செயற்படும் சட்ட எல்லைக்குள் நன்கு கவனிக்கப்படுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். பல விரிவாக்கப் பணிகள் நடைபெறுகின்றன எனும் விடயமானது, இலங்கை ஏற்கனவே இங்கு வந்துள்ளவர்களுக்கு ஒரு கவர்ச்சிகரமான முதலீட்டு இடமாகும் என்பது நிரூபணமாகின்றது.

2011 - ம் ஆண்டில் முதலீட்டு நிறுவனம் ஓரிடத்தில் நின்று பயன் பெறும் தன்மையை உறுதி செய்வதில் சில வெற்றிகளைக் கண்டுள்ளது. முதலீட்டு அங்கீகாரம் வழங்குதலில் தொடர்புள்ள காணி ஆணையாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்பு, மத்திய சூழல் அதிகார சபை மற்றும் ஏனைய தொடர்பான அதிகார சபைகளுடன் மிகவும் செயற்பாடான விதத்தில் செயற்பட்டுள்ளது.

2010 மே தொடக்கம் 2011 யூன் வரை தலைவர் / பணிப்பாளர் நாயமாகப் பணியாற்றிய திரு ஜே.டீ. பண்டாரநாயக்க இந்நிறுவனத்தை ஓர் உடன்பாடான நிறுவனமாக நடாத்திச் சென்றமைக்காகவும், 2011 யூலை தொடக்கம் 2012 ஏப்ரல் வரை சபையின் ஓர் உறுப்பினராகப் பெறுமதியான பங்களிப்புச் செய்தமைக்காகவும் நன்றி செலுத்துவதற்காக இவ்வாய்ப்பைப் பயன்படுத்துகின்றேன். சபையின் ஏனைய உறுப்பினர்களான திரு. எசான டி சில்வா, திரு சஞ்ஜீவா விக்ரமாநாயக்க, திரு. அனுர ஜயசிங்ஹ என்போருக்கும் அவர்களது ஒத்துழைப்புக்கும் பங்களிப்புக்கும் நன்றி செலத்துகினறேன். அத்துடன் நிறுவன அபிவிருத்தி அமைச்சு, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, உள்நாட்டு இறைவரி மற்றும் சுங்கம் என்பவற்றிற்கும் தொடர்பான களங்களில் அவர்களது ஒத்துழைப்புக்கும் சபையின் நோக்காளர்களுக்கும் நன்றி செலுத்துகின்றேன்.

இறுதியாக, வெளிநாட்டு நேரடி முதலீட்டில் இலங்கை ஒரு மில்லியன் அமேரிக்க டொலரை அடைவதன் மூலம் அதன் பிரஜைகளுக்கு வளர்ச்சியிலும், செல்வத்திலும், செழுமையிலும் ஒரு புது சகாப்தத்தை நோக்கிச் செல்வதாகக் கூறுவது சரியாகும். எனவே வெளிநாட்டு நேரடி முதலீட்டில் உயர்தரத்தை அடைவதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதபடுத்துவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

# முதலீட்டுச் சபையின் முகக் குறிப்பு

இலங்கை முதலீட்டுச் சபை (டீழுஐ) ஒரு சட்ட பூர்வப் பணியகமாக 1978-ம் ஆண்டு கூட்டுத்தாபனமாக்கப்பட்டுப் பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுவாகப் பெயரிடப்பட்டது. இதன் நோக்கம், இலங்கையில் குறிப்பிட்ட பிரதேசங்களில் கைத் தொழில் அபிவிருத்தியை மேம்படுத்துதல், கூட்டிணைத்தல் மற்றும் வசதிப்படுத்தலாகும். அபிவிருத்தியின் தொடக்க முறை, ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை உருவாக்குவதற்குக் குறிப்பிட்ட பிரதேசங்களை அடையாளப்படுத்தி அவற்றுக்காகச் சலுகைகளையும் ஏனைய வசதிகளையும் ஏற்படுத்தியளிப்பதாகும். இவ்வலயங்கள் தொடக்கத்தில் கட்டுநாயக்க மற்றும் பியகம பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. பின்னர் பல வலயங்கள் தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்டு 12 வலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு பாராளுமன்றத்ததில் நிறைவேற்றப்பட்ட ஓர் அதிகாரச்சட்டம் மூலம், 1992-ல் முதலீட்டுப் பணியகமாக மாற்றப்பட்டது அதன் மூலம் அதன் பரப்பளவு முழு நாட்டிலும் விஸ்தரிக்கப்பட்டது. இதற்கு முன்னர், அதன் அதிகார எல்லை கட்டுநாயக்க பியகம, மற்றும் கொக்கல பிரதேசங்களில் ஸ்தாபிக்கபட்ட ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்களின் குறிப்பிடப்பட்ட பகுதிகளில் அதன் அதிகாரம் கட்டுப்பட்டிருந்தது.

முதலீட்டுச் சபை தொடக்கத்தில் கைத்தெழில் ஏற்றுமதியில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டை மேம்படுத்தவும், கூட்டிணைக்கவும் வசதிப்படுத்தலுமான ஓர் தாபனமாகப் பிரதானமாகப் பொறுப்பாக இருந்தது. இப்போது அதன் வகி பாகச் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு என்பனவற்றிலும் மேம்படுத்துதல், கூட்டிணைப்பு மற்றும் முதலீட்டு வசதிகளை அளித்தல் என்பனவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

## எமது இலக்குகள்

முதலீட்டுச் சபையின் பிரதான இலக்குகள் பின்வருவனவற்றில் கவனஞ் செலுத்துகின்றன பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துதலும் உருவாக்குதலும், பொருளாதாரத்தின் அடிப்படையை விரிவாக்குதலும், உறுதிப்படுத்துதலும் உள்நாட்டு முதலீடுகளையும், வெளிநாட்டு முதலீடுகளையும் ஊக்குவித்தல், வெளிநாட்டு மூலதனச் சம்பாதிப்பு மூலங்களைத் திசை திருப்புதல் மற்றும் ஏற்றுமதிச் சம்பாதிப்புகளை அதிகரித்தல், புதுத் தொழில் நுட்பங்களைக் கண்டு பிடித்தலும் பின்பற்றுதலும், புதுத் தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல், அரசாங்க தனியார் துறை பங்காளர் அமைப்பு ஊடாக விசேஷமாக நாடு முழுவதிலும் முதலீட்டு ஊக்ககுவிப்பு வலயங்களை ஸ்தாபித்தல்.

## எமது பங்கு

அரசாங்கத்தின் முதலீட்டுக் கொள்கையினை அமுல் நடத்துவதற்கு முதலீடுகளை நோக்கிச் செயற்படவும் அவற்றைக் கவர்ந்தெடுக்கவும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் அளவைப் படிப்படியாக அதிகரிப்பதற்கும் அதன் மூலம் தேசிய வளர்ச்சி எல்லையினை அடைவதும், பங்களிப்புச் செய்வதுமாகும்.

முதலீட்டுச் சபையானது இலங்கையில் உற்பத்தி, உட்கட்டமைப்பு, சுற்றுலா விவசாயம், தகவல் தொழில் நுட்பம் தொடர்பான சேவைகள் அல்லது ஏனைய தெரிவு செய்யப்பட்ட துறைகளில் ஸ்தாபிக்க விரும்பும் முதலீட்டாளர்களுக்கு முதலில் தொடர்பு கொள்வதற்கான அமைப்பாக உள்ளது.

கருத்திட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட முன்னரே தகவலும், வழிகாட்டுதலும் வழங்கப்படுகின்றன. ஏனைய நிறுவனங்களிலிருந்து அங்கீகாரம் தேவைப்பட்ட போது முதலீட்டுச் சபையினால் இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தொடர்பான துறைகளில் முதலீட்டுக்கான விண்ணப்பங்கள் முதலீட்டுச் சபையினால் மதிப்பீடு செய்யப்பட்டு ஊக்குவிப்புகளில் சலுகைகளை வழங்குதல், மூலப்பொருட்களிலும் வரி விலக்குகளை அளித்தல், வெளி நாட்டவர்களின் பதவிகளுக்காக விசா வழங்குவதற்குக் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளுக்கு விதந்துரைகளை வழங்குவது போன்றன.

கருத்திட்டம் தொடங்கப்படுவது முதல் செயற்படுத்துதல் மற்றும் வெற்றிகரமாகச் செயற்பட வைத்தல் வரை முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுச் சபை உதவியளிக்கின்றது. இறக்குமதி / ஏற்றுமதி தொடர்பான விடயங்களில் ஈடுபடுதல், பாரிய பொருட்களையும், மூலப் பொருட்களையும் இறக்குமதி செய்வதற்கான சுங்க வசதிகளையேற்படுத்துதல், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்தல்.

முதலீட்டுச் சபை முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களின் அபிவிருத்தியில் முதலீடு செய்கின்றது. எல்லா அடித்தள வசதிகளையும் முதலீட்டாளர்களுக்குக் கருத்திட்டங்களை அமுல் நடத்துவதற்கான பொருத்தமான இடங்களை வழங்குவதன் மூலம் முழுமையான முதலீட்டைத் துரிதமாக விரிவுபடுத்துதல் மற்றும் ஏற்றுமதிச் சம்பாதிப்புகளை விரிவு படுத்துதல்.

# தூர நோக்கு

பொருளாதாரச் செழிப்பு ஊடாக இலங்கையின் எல்லா மக்களினதும் நலனை நிச்சயப் படுத்திக் கொள்ளுதல்



# பணி

தேசிய அபிவிருத்திக்காக அரசாங்கத்தின் பண மற்றும் நிதி எல்லைகளுடன் ஒருங்கிணைந்த விதத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறைகளின் முதலீடுகளைப் பெறுதல்.

# பணிப்பாளர்கள் சபை



திரு. எம்.எம்.சீ பேர்டினாந்து - தலைவர் / பணிப்பாளர் நாயகம்



திரு.ஜே.டீ. பண்டாரநாயக
உறுப்பினர்



திரு.ஜே.டீ. பண்டாரநாயக
உறுப்பினர்



திரு. சஞ்சீவ விக்ரமநாயக
உறுப்பினர்



திரு. அனுர ஜயசிங்ஹ
உறுப்பினர்

# முதலீட்டுச் சபையின் சிரேʻட அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| திரு. எம்.எம்.சீ பேர்டினாந்து | - | தலைவர் / பணிப்பாளர் நாயகம் |
| திரு. ஏ.எம்.சீ குலசேகர | - | பிரதிப் பணிப்பாளர் நாயகம் |
| கலாநிதி. ஐ.என். சமரப்புலி | - | நிறைவேற்றுப் பணிப்பாளர் (ஆராய்ச்சியும், கொள்கையும்) |
| திரு. ஆர். ஏம் கருணாரத்ன | - | நிறைவேற்றுப் பணிப்பாள் (மேற்பர்வை) |
| திரு. சிவான் - டீ. சில்வா | - | நிறைவேற்றுப் பணிப்பாளர் மேம்படுத்தலும் பாரிய கருத்திட்டங்களும் |
| திருமதி. சீ.பீ மத்தாயஸ் | - | நிறைவேற்றுப் பணிப்பாளர் (நிதியும் பீ பீ பீஅலகின் முதல்வரும்) |
| திரு. டீ. பீ ஆரியசிங்ஹ | - | நிறைவேற்றுப் பணிப்பாளர் (முதலீட்டு ஊக்குவிப்பு) |
| திரு.எஸ்.பீ.எப் டீ. சில்வா | - | நிறைவேற்றுப் பணிப்பாளர் (தொழில் நுட்பச் சேவைகள்) |
| திரு. டபிள்யூ. ஏ. எச், ஆர். பெர்ணாந்து | - | நிறைவேற்றுப் பணிப்பாளர் (பொறியில் அங்கீகாரங்களும், விசேட கருத்திட்டங்களும்) |
| திருமதி. பீ.கே வல்கம | - | நிறைவேற்றுப் பணிப்பாளர் (சட்டம்) |
| திருமதி. வை. ஜீ ராஜபக்ஷ | - | பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர் (முதலீடு) |
| திரு. கே. தஹநாயக | - | பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர் (ஆளணி மற்றும் நிர்வாகம்) |

# முதலீட்டுச் சபையின் பணிப்பாளர்கள்

| | | |
|---|---|---|
| திரு. கே.பீ.வீ.டீ பெர்ணாந்து | - | பணிப்பாளர் (பெரும் கருத்திட்டங்கள் அலகு) |
| திரு. ஆர். ஜே பனாபிடிய | - | பணிப்பாளர் (பொறியியல் அங்கீகாரங்களும் விசேட கருத்திட்டங்களும்) |
| திரு. யூ. ஸிரிகம்பொல | | பணிப்பாளர் (வலயம்) கட்டுநாயக ஏற்றுமதி நடவடிக்கை வலயம் |
| திரு. டீ.எஸ் சமரசிங்ஹ | - | பணிப்பாளர் (ஊடகம்) |
| திருமதி. என் .வீரசேகர | - | பணிப்பாளர் ( முதலீட்டாளர் சேவைகள் ) |
| திருமதி. சீ பீ மலல்கொட | - | பணிப்பாளர் (ஆராய்ச்சியும் கொள்கையும்) |
| திரு. எச் எம் ஜயசுந்தர | - | பணிப்பாளர் மத்திய பிராந்திய அலுலகம் |
| திரு. யூ. ஜே வீரசிங்ஹ | - | பணிப்பாளர் (வடமேற்குப் பிராந்திய அலுவலகம்) |
| திருமதி. எம்.ஏ. எஸ் பெரேரா | - | பணிப்பாளர் (சுற்றாடல்) |
| திரு. எம். கே கருசிங்ஹ | - | பணிப்பாளர் (புது வலயங்கள்) |
| திருமதி. ஆர். எம் வீரகோன் | - | பணிப்பாளர் (செயலகம்) |
| திருமதி. என். டீ சில்வா | - | பணிப்பாளர் - பிரிவுக் குழு 02 (கல்வித்துறை) |
| திருமதி டீ.எம்.ஆர் லியனகே | - | பணிப்பாளர் (நிருவாகம்) |
| திரு. ஜே.பீ.சீ ஜயலத் | - | பணிப்பாளர் (தகவல் தொழில் நுட்பம்) |
| திருமதி. எஸ்.பீ.த.எஸ். முதுகுமாரண | - | பணிப்பாளர் (நிதி) |
| திரு. ஏ.கே ஜயசிங்ஹ | - | பணிப்பாளர் (சீதாவக ஏற்றுமதி உற்பத்தி வலயம்) |
| திருமதி. எம். எஸ் சீ சமரகோன் | - | பணிப்பாளர் (சட்டம்-அசாங்க தனியார் பங்கேற்பு அலகு) |
| திரு. டயபிள்யூ ஏ.எப் ஜயசிரி | - | பணிப்பாளர் (தொழில் உறவுகள்) |
| திருமதி. எம்.கே. டீ லோரன்ஸ் | - | பணிப்பாளர் (வலயம் பியகம உற்பத்தி அலகு) |
| திரு. ஜே. குணசேகர | - | பதில் பணிப்பாளர் (கொக்கல ஏற்றுமதி உற்பத்தி அலகு) |
| திரு. பீ.ஏ பெரேரா | - | பதில் பணிப்பாளர் (தகவல் தொழில் நுட்ப உதவியும்- பிரதான திட்டங்களும்) |

# மேல் நோக்கு

## பிரதான நிகழ்வுகளும், முக்கியமானவையும்

- முதலீட்டுச் சபை அதன் அதியுயர் வெளிநாட்டு நேரடி முதலீடான அமெரிக்க டொலர் 1-பில்லியனை மீறிய தொகையினை அதன் வரலாற்றில் முதன் முதலாக எய்தியது. வேளிநாட்டு நேரடி முதலீட்டின் சுமார் 43மூ உட்கட்டமைப்புத் துறை பெற்றுக் கொடுத்தது. அத்துடன் 30மூ உற்பத்தித் துறையிலிருந்து கிடைத்தது. சேவைகள் துறையிலிருந்து 25மூ மும், விவசாயத்துறையிலிருந்து 2மூ மும் கிடைத்தது.

- முதலீட்டுச் சபை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகளின் பெறுமதி 2011-ம் ஆண்டில் அமெரிக்க டொலர் 6386 மில்லியன்களை எட்டியது. 2010-உடன் ஒப்பிட்ட போது இது 22மூ அதிகரிப்பைக் காட்டுகின்றது. இது 2011-ல் இலங்கையின் ஏற்றுமதியின் பெரும்பங்கைக் காட்டுகின்றது.

- இலங்கை உலக வர்த்தக வரிசையில் 89ம் . இடத்திலிருந்து 98-ம் இடத்துக்கு முன்னேறியது. இது ஐகுஊ யாலும் உலக வங்கியினாலும் 2012 வெளியிடப்பட்ட இலகுவாக வர்த்தக அறிக்கை செய்தல் எனும் அறிக்கையின் கண்டுபிடிப்புகளின் படியாகும். தெரிவு செய்யப்பட்ட காட்டிகள் தொடர்பாக நடைமுறைகள் துரிதப்படுத்தப்பட்டதன் காரணமாக தொழிலதிபர்களுக்கு ஒரு நல்ல சூழ்நிலையினை உருவாக்குவதற்காக இது அடையப் பெற்றது.

- தொடர்பான அமைச்சுகளுக்கும், அரசாங்க நிறுவனங்களுக்கும் நெருங்கிய அடிப்படையில் செயற்படுவதற்காக முன்னுரிமை வழங்கி அறிமுகப்படுத்தப்பட்ட மாதாந்த ஓரிடக் கூட்டங்கள் கூட்டப்பட்டதனால் கருத்திட்டங்களை அமுல் நடத்துவதிலும், இயக்குவதிலும் முதலீட்டாளர்களினால் முகங்கொடுக்கப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய நிலையிலிருந்தது.

- பிரதானமான அபிவருத்தி கருத்திட்டங்கள் அதிகாரச்சட்டத்தின் கீழ் (ஊயசைெ டுயமெய ரீசளையவந) டுைஅவவைநன நிறுவனத்துக்கு பின்வரும் விடயங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. எண்ணெய் அகழ்தல், கொழும்பு சர்வதேச ஊழவெயைநெச வநசஅiயெடள லிமிடெட்டினால் ளுழரவா ஊழவெயைநெச அபிவிருத்திக்கான திட்டம், ஒரு உல்லாச ஹோட்டல் கட்டுவதற்காக ஞாயபெசடைய ஹோட்டல் மட்டுப்படுத்தப்பட்ட நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் என்பன நாட்டின் நிலத் தோற்றத்தை மாற்றுவதுடன், இலங்கைக்குப் பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களை ஏற்படுத்தும்.

- முதலீட்டுச் சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் திரு.ஏ.எம்.சீ. குலசேகர மாஸ் லங்கா பாராட்டு வைபவத்தில் பிரதமர் டி.எம். ஜயரத்ன வினால் பாராட்டப்பட்டார். அவர் ஆற்றிய சேவைகளுக்காகவும், வர்த்தக, தொழிற்துறை மேம்பாடு விருத்தி மற்றும் நாட்டினுள் முதலீடு செய்யப்பட வசதியளித்தமை என்பனவற்றுக்காக இது நடைபெற்றது.

# இலங்கை முதலீட்டு நோக்கு

- 2010-ம் ஆண்டின் அமெரிக்க டொலர் 516 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011-ம் ஆண்டில் முதன்முதலாக இலங்கை அமெரிக்க டொலர் 1 பில்லியனைக் கவர்ந்து எடுத்தது. இது 107% அதிகரிப்பாகும்.

வெ.மு 2011 அமெரிக்க டொலர் 1 பில்லியனைத் தாண்டியது

- உற்பத்தித் துறையில் முதலீடு 2011-ல் அமெரிக்க டொலர் 322 மில்லியனாக இருந்தது. 2010-ம் ஆண்டின் அமெரிக்க டொலர் 160 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 101% அதிகரிப்பைக் காட்டுகின்றது.

- சேவைகள் / உற்பத்தித்துறையில் முதலீடுகள் 2011-ம் ஆண்டில் அமெரிக்க டொலர் 726 மில்லியனாக இருந்தது. 2010 ஆண்டில் அமெரிக்க டொலர் 350 மில்லியனிலிருந்து இது 107% அதிகரிப்பைக் காட்டுகின்றது.

- எதிர்கால வெளிநாட்டு நேரடி முதலீட்டு இலக்குகளை நிறைவேறச் செய்யவும், நாட்டின் தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் அரசாங்கத்தின் கொள்கையுடன் இணைந்து முதலீட்டுச் சபை முன்னுரிமைத் துறைகளை அடையாளங் கண்டுள்ளது. இவ்வகையில் முதலீட்டுச் சபை, இலங்கை சில குறிப்பிட்ட துறைகளில் முதலீட்டுக்குரிய கவர்ச்சியான இடமாகத் தொடர்ந்து இருப்பதை நிச்சயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இத்துறைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியவையாகும். விவசாயம் விவசாய உற்பத்திகள், உற்பத்தித்துறை உல்லாசப் பிரயாணம், தகவல் தொழில் நுட்பம் / BPO கல்வி, மற்றும் திறன் அபிவிருத்தி உட்கட்டமைப்பு. தேசிய இலக்குகள் முன்னறிந்த இலக்குகலாகும்.

தேசிய இலக்குகளும் முன்னுரிமைத் துரைகளும்

- இலங்கை நிறுவனங்கள் வர்த்தக முயற்சிகளை வெறிநாடுகளிலும் மேற்கொள்ளும் ஒரு பதிய பரவலான நிலை காணப்படுகின்றது. இதன் நோக்கம் புதிய மற்றும் பெரிய சந்தைகளைப் பெற்றுக் கொள்ளுவதும், மூலப் பொருட்ககளுக்கான வாய்ப்புகளைப் பெறுவதும் அதன் மூலம் செலவுகளைக் குறைப்பதுமாகும். இந்நிலை தொடரும் என்றும் அதன் மூலம் இலங்கை நிறுவனங்கள் பிராந்திய மற்றும், உலகளாவிய விநியோகத் தொடர்புகளுடன் சேர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் படி முதலீட்டுச் சபை வெளிவாரியிலான முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமா என ஒரு தெளிவான கொள்கை தேவைப்படுகின்றது. வெளிநோக்கிய முதலீடுகள்

வெளி முதலீடுகள்

- இலங்கை ஆசிய பிராந்தியத்தின் நாடுகளுடன் இருபக்க முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் தொடர்பாக தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடத்தியது.

இருபக்க முதலீட்டு ஒப்பந்தங்கள்

- இலங்கை தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க அளவு வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்ந்தெடுக்கக்கூடிய தன்மையில் உள்ளது. காரணம், அதன் வாய்ப்பான முதலீட்டு நிலைமைகள் சுதந்திரமான முதலீட்டுக் கொள்கைகள், கேந்திர அமைப்பிடம், போதுமான உட்கட்டமைப்பு, உற்பத்தித் திறனுள்ள வேலையாட்கள், உறுதியானதும் நிலையானதும் மீளும் தன்மையுள்ளதுமான வங்கி மற்றும் காப்புறுதித் துறைகள், இந்நிலையினை ஏற்படுத்தியது. இரு பக்க முதலீட்டு ஊக்குவிப்பு பாதுகாப்பு ஒப்பந்தங்கள்.

போட்டி இலக்குகள்

- முதலீட்டுச் சபையானது ஓரிடத்தில் நின்று பொருட்களை வாங்குவது எனும் நடவடிக்கையினை இரு வேறு இடங்களில் மீள் அறிமுகஞ் செய்துள்ளது. அவையாவன வர்த்தக நடவடிக்கைகளைத் தொடங்குவது வரையான கருத்திட்டங்கள் மற்றும் ஏற்கனவே நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ள வர்த்தக நடவடிக்கைகள். இதன் நோக்கம் இக்கருத்திட்டங்கள் தொடர்பாக உள்ள பிரச்சினைகளைத் திறமையான முறையில் தீர்ப்பதாகும்.

வாய்ப்பான நடவடிக்கைகள்

- வீதிகள், கடல் மற்றும் விமான நிலையங்கள் தொடர்பாடல்கள் என்பவற்றின் தொடர்ச்சியான அபிவிருத்திகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டமையினால் இலங்கை ஒரு வாய்ப்பான முதலீட்டு இடமாக மாறியது.

- இதற்கு மேலதிகமாக உள்நாட்டு முதலீடுகளை முன்னேற்றும் நோக்கத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் வர்த்தக கூட்டிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் அரசாங்கம் தொடர்ச்சியாக வேண்க்கொண்டது.

உலகப்போட்டியில் 10 இடங்களை தாண்டி முதலீட்டில் முன்வந்துள்ளது.

- உலக பொருளாளதார மையத்தினால் கணிக்கப்பட்ட உலக பொருளாதாரச் சுட்டெண்ணின்படி 2011 – 2012 இடையில் இலங்கை 10 இடங்களை தான்டி, 142 நாடுகளின் இடையில் 62 ம் இடத்தில் இருந்து 52ம் இடத்திற்கு வந்துள்ளது. 2011 ல் இலங்கை 79 இடத்தில் இருந்து 27 இடங்களை தாண்டி 52 ம் இடத்திற்கு வந்துள்ளது.

- இப்போட்டித் தன்மை, நிறுவனங்கள் கொள்கைகள் மற்றும் நாட்டின் உற்பத்தியை கணிக்கும் கொள்கைகளை அடிப்படையாக கொண்டது. "முதலீட்டுக்கு பிரதிபலன்" எனும் அடிப்படையில் நாட்டின் வளர்ச்சியை இது தீர்மானிக்கின்றது.

வர்தகத்தில் 89 ம் இடத்திற்கு உயர்ந்தமை

- 2011 ம் ஆண்டில் உலக போட்டித் தன்மையில் 183 நாடுகளின் இலங்கை வர்த்தகம் செய்வதற்குறிய மிகச் சிறந்த இடங்களில் ஒன்றாக 89 ம் இடத்திற்கு வந்தது. இவ்வரிக்கை வர்த்தகம் செய்வது பற்றி உலக வங்கியனாலும் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தினாலும் கணிக்கப்பட்டது. கட்டிட அனுமதிப்பத்திரங்கள், முதலீட்டாளர்களை பாதுகாத்தல் கடல் கடந்த ரீதியில் வர்த்தகம் செய்தல் என்பன தொடர்பாக குறிப்பிடத்தக்க அதிகரிப்பை காட்டியது. சொத்தை பதிவு செய்தல், கடன் பெறுதல் மற்றும் வர்த்தகத்தை தொடங்குதல் தொடர்பாக மேலும் விருத்தி அடையக்கூடிய பல துரைகள் ஏராளமாக உள்ளன.

மீள் முதலீடுகள்

- இப்போது இருக்ககூடிய வெளிநாட்டு நிறுவனங்கள் தமது முதலீடுகளை மீளமுதலீடு செய்வதற்காக விரிவாக்கள்களையும் ஏனைய துரைகளுக்கு மாற்றம் செய்வதிலும் அக்கறை கொண்டுள்ளன.

சிறந்த கூட்டிணைப்பு

- இலங்கை பொருளாதாரத்தில் நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் முக்கித்துவத்தை பொருத்தவரையில் இலங்கை முதலீட்டுச் சபை ஏனைய அமைச்சுகளுடனும் தனியார் துரைகளுடனும் மிகவும் நெருக்கமாக செயற்பட்டு நாட்டில் வர்த்தக நிலையினை மேலும் விருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்கின்றது.

ஒரே இடத்தில் நின்று செயற்படுதல்

- சுற்றுலாத்துறையில் முதலீட்டை மேம்படுத்துவதற்காக "ஓரிடத்தில் பொருட்களை வாங்குதல் எனும் கருதுகோள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய நிலையம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிறுவனத்தில், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச் சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, வன பாது உயிர்ப் பாதுகாப்பு திணைக்களம் கரையோரப் பாதுகாப்புச் சபை திணைக்களம், உள்ளுராட்சி மன்றங்கள், மத்திய சூழல் அதிகார சபை மற்றும் இலங்கை முதீட்டுச் சபையுடன் இணைந்து செயற்படுகின்றது.

- இலங்கை முதலீட்டுச் சபை "ஓரிடத்தில்" தங்கி செயற்படுதல் என்பதனை இரு வித்தியாசமான நிலையில் செயற்படுத்துகின்றது அதாவது வர்த்தக முயற்சிகளை தொடங்கும் கருத்திட்டங்கள் மற்றது ஏற்கனவே வர்த்தகம் தொடங்கியுள்ள நிறுவனங்கள் என்பன. இதன் நோக்கம் இவை தொடர்பான பிரச்சினைகளை சிறப்பான முறையில் செயற்படுத்துவதாகும்.

# மேம்பாட்டுப் பணிகள்

மீளாய்வுக்குரிய ஆண்டில், முதலீட்டுச் சபை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தனது மேம்பாட்டுப் பணிகளைத் தொடர்ந்தது. அது உள்நாட்டுக்கு வந்த 11 தூதுக் குழுக்களைச் சந்தித்துடன் 03 வெளிநாட்டுத் தூதுக்குழுக்களில் பங்குபற்றியது.

இந்நிகழ்ச்சித் திட்டங்கள் உள்நாட்டு வர்த்தகச் சமூகங்கள், வர்த்தக சம்மேளனங்கள் என்பவற்றின் பங்கேற்புடன் வர்த்தகத் தூதுக் குழுக்களின் பிரதானமாகத் தெரிவு செய்யப்பட்ட துறைகளையும் முன்னேற்றுவதற்கனவாக அமைந்திருந்தன.

## உள்நாட்டுக்கு வந்த தூதுக்குழுக்கள்

| நாடு | நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|
| தாய்லாந்து | 40 உறுப்பினர்களைகக் கொண்ட தாய்லாந்து தூதுக் குழுவினர்களுக்கான ஒரு முதலீட்டுப் பேரவையின் தலைவரின் கீழ் முதலீட்டுச் சபையில் நடைபெற்றது. இதில் உள்ளூர் நிர்மாணத்துறை மற்றும் இலங்கை நிர்மாணத்துறைப் பேரவையும் பங்கு பற்றியது. இலங்கை மற்றும் தாய்லாந்து கட்டிட மற்றும் பொறியியல் சங்கங்களின் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படுவதை முதலீட்டுச் சபை வசதியாக்கியது. |
| சிங்கப்பூர் | சிங்கப்பூர் Banyan Tree Group இன் ஒரு தூதுக்குழு முதலீட்டுச் சபையின் தலைவர் / பணிப்பாளர் நாயகத்துடன் உல்லாசப் பிரயாணத் தொழிலில் முதலீட்டு வாய்ப்புகளைப் பற்றிக் கலந்துரையாடியதுடன் பொருத்தமான இடங்களை அடையாளங் காண்பதற்காகக் கிழக்கு மற்றும் தெற்குப் பிரதேசங்களுக்குப் பயணஞ் செய்தது.<br><br>இலங்கைக்கான சிங்கப்பூர் தூதுவர் மேன்மை தங்கிய Chay Wai Chuen இன் தலைமயிலான 15 உறுப்பினர்களைக் கொண்ட சிங்கப்பூர் வர்த்தக மற்றும் முதலீட்டு ஆணைக்குழுவுக்கு முதலீட்டுச் சபை, இலங்கை அரசாங்கத்தினால் குறிப்பிடப்பட்ட தகவல் தொழில் நுட்பம் கல்வி சுகாதாரம் மற்றும் மீன்பிடித்துறைகள் தொடர்பாக வழங்கப்படும் ஊக்குவிப்புகள், மற்றும் வசதிகள் பற்றி ஒரு விளக்கம் வழங்கப்படுவதை முதலீட்டுச் சபை வசதிப்படுத்தியது.<br><br>இலங்கை அரசாங்கத்தினால் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புகள் மற்றும் வசதிகள் பற்றிய ஒரு முதலீட்டுச் சபை விளக்கம் 15 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சிங்கப்பூர் வர்த்தக மற்றும் முதலீட்டுத் தூதுக் குழுவுக்கு வழங்கப்பட்டது. இத்தூதுக் குழு சிங்கப்பூர் வர்த்தகச் சம்மேளனம் மற்றும் சிங்கப்பூர்,இந்திய வர்த்தக மற்றும், கைத்தொழில் பேரவையின் தலைமையின் கீழ் வந்திருந்தது. |
| மலேசியா | மலேசிய உற்பத்தியாளர்கள் பேரவையின் 7 உறுப்பினர்களைக் கொண்ட தூதுக் குழுவுக்கு முதலீட்டுச் சபையினால் ஒர விளக்கக் கூட்டம் நடத்தப்பட்டது. மலேசிய, இலங்கை நிறுவனங்களின் கூட்டமைப்பிலிருந்து இரு சந்தர்ப்பங்களில் இலங்கை வந்திருந்த ஒரு தூதுக் குழுவுக்கு வாசரளவ துறைகளில் முதலீட்டு வாய்ப்புகள் பற்றி ஒரு விளக்கம் வழங்கப்பட்டது. |
| வியட்நாம் | வியட்நாம் ஜனாதிபதி மேன்மை தங்கிய Truong Tan Sang உடன் வந்த ஒரு வியட்நாம் வர்த்தகத்தூதுக் குழுவை வரவேற்றது. இவ்விஜயத்தின் போது முதலீட்டுச் சபைக்கும், வியட்நாம் வெளிநாட்டு முதலீட்டுப் பணியகத்துக்கும் இடையில் வெளிநாட்டு முதலீட்டுப் பணியகத்துக்கும் இடையில் இரு பக்க முதலீட்டு மேம்பாட்டு ஒத்துழைப்புக்கான ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. |
| இந்தியா | கேரள அரசிலிருந்து வந்திருந்த ஒரு 29 உறுப்பினர்களைக் கொண்ட C11 பேராளர் குழுவுக்கு முதலீட்டு வாய்ப்புகள் பற்றிய ஒரு விளக்கம் வழங்கப்பட்டது. |

| நாடு | நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|
| கட்டார் | முதலீடு செய்வது பற்றிய வாய்ப்புகளைக் கண்டறிவதற்குக் கட்டார் முதலீட்டு அதிகார சபையிலிருந்து வந்த ஒரு தூதுக் குழுவை வரவேற்றதுடன், முதலீட்டுச் சபையுடன் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. |
| சீனா | திரு. Wengliqi தலைமையில் CPPC ஷங்ஹாயிலிருந்து வந்த 05 உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழுவுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இத்தூதுக் குழு புதிய முதலீட்டுக் கொள்கைகளையும், முதலீட்டுக்கான வாய்ப்புகளையும் அறிவதற்கான ஒரு விடயம் அறியும் குழுவாக இருந்தது.<br><br>இலங்கையில் துணிகள் நெசவு செய்யும் பெரும் ஆலையொன்றைத் தாபிப்பதில் அக்கறை கொண்ட சீனாவின் Tianjin Textile Group (Holdings) Co டுவன இன் 05 உறுப்பினர் தூதுக் குழு வரவேற்கப்பட்டது மத்தேகமவில் மூடப்பட்ட காபூல் லேஸ் (தனியார்) நிறுவனத்தைக் கையேற்பதற்கான விஜயங்களும், காணி கிடைப்பதை ஆராய்ந்து பார்பதற்கான ஹொரன Perth Estate க்கு விஜயங்களும் மேற்கொள்ளப்பட்டன.<br><br>மேல் மாகாண ஆளுநரின் அழைப்பின் பேரில் சீனாவின் CCIE (சர்வதேசப் பொருளாதாரப் பரிவர்த்தனை நிலையத்தின் சீன நிலயம்) யிலிருந்து ஒரு 24 உறுப்பினர் தூதுக்குழு வந்தது. முதலீட்டு வாய்ப்புகளை அறிவதற்கும், முதலீட்டுச் சபையின் புதிய கொள்கைப் பிரமாணங்களையும் அறிவதற்கான ஒரு தகவல் அறியும் விஜயமாக இரு இருந்தது.<br><br>சீன கெஷங்டொங் சர்வதேச பொருளாதார மற்றும் தொழில் நுட்பக் கூட்டுத்தாபனத்திலிருந்து ஒரு 06 உறுப்பினர் தூதுக்குழு, கொழும்பு-கண்டி கடுகதிப்பாதைக் கருத்திட்டத்தைப் பொறுப்பேற்பதற்கான வாய்ப்புகளை அறியவும் வீதியபிவிருத்தி அிதிகார சபையுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வந்த போது வசதியளிக்கப்பட்டது.<br><br>Chengdu மாநகர வர்த்தகப் பணியகத்தின் ஒரு 07 உறுப்பினர் தூதுக்குழு திரு நிஹால் அலுவிஹாரவுடன் ஒரு விசேஷட பொருளாதார வலயத்தைத் தாபிக்கும் அபிவிருத்திக்கு வாய்ப்பான இடங்களையும் அடையாளங்காண வந்த போது வசதியளிப்பட்டது.<br><br>ஓரியெ செய்தி நிறுவனத்தின் கொழும்பு அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு COOEC சர்வதேச பொறியியல் தாபனத்தினால் (எண்ணெய் அகழ்வதற்கான சீனாவின் மூன்றாவது மிகப் பெரிய நிறுவனம்) நிறைவேற்றுப் பிரதிப்பொது முகாமையாளர் தலைமையில் தன்னியக்க உற்பத்தி உட்கட்டமைப்புத் துறைகள் மற்றும் எண்ணெய்ச் சுத்திகரிப்பு/ அகழ்வுப் பணிகளுக்காக வந்த போது வரவேற்கப்பட்டது. இது ஐந்து உறுப்பினர்களை கொண்ட தூதுக்குழுவாகும்.<br><br>Guangxi முதலீட்டு நிறுவனத்திலிருந்து வந்த 06 சிரேஷ்டஉறுப்பினர்களைக் கொண்ட சீன அபிவிருத்தி வங்கிக்கூட்டுத்தாபனத்தின் (இலங்கை வதிவிடத்தினர்) வரவேற்கப்பட்டனர்.<br><br>CHD power plant operation Co Ltd (புத்தளம் நிலக்கரி வலுத் தொகுதியின் இயக்கம் மற்றும் பேணுதலுக்கு பொறுப்பானது ) இதிலிருந்து வந்த 06 உறுப்பினர் தூதுக் குழு வரவேற்க்கப்பட்டது சுற்றுலா அகழ்வு மற்றும் விவாசாயத் துறைகளில் முதலீட்டு வாய்ப்புகள் பற்றிக் கலந்துரையாட இது வந்தது.<br><br>பீஜிங் Dynamic Power Technology கூட்டுத் தாபனத்திலிருந்து வந்த ஒரு 06 உறுப்பினர் தூதுக் குழுக்கு வசதியளிக்கபட்டது. முதலீட்டுக்காக உள்ள வாய்ப்புகளை ஆராய்வதற்காக இது வந்தது.<br><br>பொருட்களைக் கட்டுவதற்குப் பயன்படும் அலுமினியம் தாள்களை உற்பத்தி செய்யும் சீனாவின் ர்நயெெ மாகாணத்தின் Henan Yipp Industry Ccompany முதலீட்டுச் சபைக்கு வருகை தந்தது. online தொடர்புகள் ஊடாக கொள்கைகளைப் பற்றி அறிந்ததன் பின்னர் இவ்வாறு வந்தது.<br><br>சீனாவின் Guandona Foshan, Youngdong Hair Products நிறுவனத்தின் 04 உறுப்பினர்கள் தூதுக் குழு முடிப்பொருட்கள் உற்பத்தி பற்றிய ஒரு கருத்திட்டத்துக்காக கொள்கைகளைப் பற்றி online தொடர்பாடல் மூலமாக அறிந்ததன் பின்னர் வந்த போது வரவேற்கப்பட்டது |

| நாடு | நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|
| ஹொங்கொங் | இலங்கையில் துணிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கு அக்கறையுள்ள Court Taulds நூற் கம்பெனியின் அலுவலா்களுடன், ஹொங்கொங்கின் ஆயளெரஅ ஆடைத் தொழிற்சாலை நிறுவனத்தின் சிரேஷ்ட அலுவா்களைக் கொண்ட 04 உறுப்பினா் தூதுக் குழுவொன்றைச் சந்தித்தமை |
| ஜப்பான் | எஸ்.ஏ.எம். சா்வதேச கம்பெனியின் 04 உறுப்பினா்களைக் கொண்ட ஜப்பானியத் தூதுக்குழுவைச் சந்தித்தமை insulator தாள்களை உற்பத்தி செய்யும் இயந்திரத் தொகுதியொன்றை அமைப்பதற்கான வாய்ப்புகளை ஆராய்வதற்காக, கவாகாமி,நரிட்டாசி, ஜே.ஆர்.டீ கம்பெனியிலிலுருந்து வந்த 04 உறுப்பினா் தூதுக்குழுவுக்கு வசதியளித்தமை<br><br>உட்கட்டமைப்புத் துறையில் உள்ள முதலீட்டு வாய்ப்புகளை அறிவதற்கு இலங்கைக்கு விடயம் அறிய வந்த ஆவைளரஎ கம்பெனியின் 07 உறுப்பினா் தூதுக்குழுவைச் சந்தித்தமை.<br><br>இலங்கையின் முதலீட்டு வாய்ப்புளை அறிவதற்கு வந்த பின்வரும் தூதுக்குழுக்களைச் சந்தித்தமை.<br><br>நகோயாவின் இன்டர் புரோகிரஸ் INC இன் 04 உறுப்பினா் தூதுக்குழு, மிட்சுபிசி, யூ எப் ஜே வங்கியின் 03 உறுப்பினா் தூதுக்குழு, எரிபொருள், எண்ணெய், மற்றும் எரிவாயு ஆராய்ச்சியில் உள்ள யப்பானின் மறுபெனி நிறுவனத்தின் 05 உறுப்பினா் தூதுக்குழு, ஜயிக்காவின் 03 மூன்று உறுப்பினா் தூதுக்குழு |
| ஐரோப்பிய ஒன்றியம் (நுரு) | புது டில்லியில் அமைந்துள்ள ஆஸ்திரிய வா்த்தக ஆணைக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 06 உறுப்பினா்களைச் கொண்ட ஆஸ்திரிய வா்த்தகச் சம்மேளனத்தின் உதவியுடன் சந்தித்தமை.<br><br>இலங்கயிலுள்ள பிரான்ஸ் தூதுவரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தெற்காசியவிலுள்ள பத்து பிரெஞ்சு நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட வா்த்தக தூதுக்குழு வசதியளித்தமை.<br><br>செக்கோஸ்லவேக்கியக் குடியரசின் 30 உறுப்பினா்களைக் கொண்ட ஒரு வா்த்தக தூதுக் குழு இலங்கையிலுள்ள ஐரோப்பிய வா்த்தக அமைப்பினால் (ECCISL) ஏற்பாடு செய்யப்பட்டு, கைத்தொழில் மற்றும் வா்த்தக அமைச்சின் தலைமையில் வந்த போது வரவேற்கப்பட்டது.<br><br>இத்தாலியின் INCANTO Fashion Group உடன் (Alpha Retail Group) ஹொங்கொங்) இலங்கைக்கு வந்த போது சந்தித்தமை. அவா்களது முதலீடுகளில் இலங்கையில் இறுதிக் கட்டமாகச் செய்வதற்கு முதலீட்டுச் சபையுடன் ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட தொடா்புகளின் விளைவாக இது நடைபெற்றது. |
| கொரியா: பின்வரும் தூதுக் குழுக்களைச் சந்தித்தமை | Woori முதலீட்டு மற்றும் பாதுகாப்புகள் ஆசியா எனும் நிறுவனத்திலிருந்து விடயமறிவதற்காக வந்த 3 உறுப்பினா் குழு ஹோட்டல் கருத்திட்டம் ஒன்றிற்காக EUI இலிருந்து வந்த 4 உறுப்பினா் குழு KAB JEO JEE யுளளழஉயைவநள நிறுவனத்திலிருந்து வீடமைப்புத் திட்டமொன்றுக்கான 3 உறுப்பினா் குழு, மத்திய தர வகுப்பு வீடமைப்பு அலகுகளைக் கொண்ட ஆநுவுசுழ யுடுஜர்யு நிறுவனத் தூதுக்குழு, MONO RAIL கருத்திட்டமொன்றுக்கான கலந்துரையாடலுக்காக புசயஅ ளியஉந கூட்டமைப்பிலிருந்து 10 உறுப்பினா் தூதுக்குழு ஒரு வீடமைப்புக்குழு திட்டத்துக்காக டீழுழு நிறுவனத்திலிருந்து 4 உறுப்பினா் தூதுக்குழு, Kotra விலிருந்து 3 உறுப்பினா் தூதுக்குழு |

## வெளிநாடு சென்ற தூதுக்குழுக்கள்

| நாடு | நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|
| சிங்கப்பூர் | சிங்கப்பூர் சர்வதேச நிறுவனத்துடன் (ஐநு) இணைந்து, சிங்கப்பூரில் நடத்தப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்புக் கருத்தரங்கில் இலங்கையிலுள்ள முதலீட்டு வாய்ப்புகள் பற்றியொரு விளக்கம் அளிக்கப்பட்டது.<br><br>இந்நிகழ்வின் போது சிங்கப்பூரின் தொடர்பானவர்களுடன் நேரடி வர்த்தக் கூட்டங்கள் நடைபெற்றன. |
| ஜப்பான் | ஜப்பானின் டோக்கியோவில் ஜப்பான் சிறிலங்கா வர்த்தக ஒத்துழைப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முதலீட்டாளர் கூட்டமொன்றில் பங்கேற்றமை.<br><br>UNIDO வின் உதவியுடன், முதலீடு செய்யக் கூடியவர்களுடன் நேரடி கூட்டங்கள் நடைபெற்றன. |
| கொரியா | கொரியா சியோலில் கொரிய வர்த்தக சம்மேளனத்தினால் ஏற்பாட செய்யபட்ட முதலீட்டாளர் கூட்டமொன்றில் பங்கேற்றமை<br><br>முழவசய மற்றும் கொரியாவிலுள்ள இலங்கை தூதரகத்தின் உதவியுடன் முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்களுடன் நேரடிக் கூட்டங்கள் நடந்தமை. |

# முதலீட்டுச் செயற்பாடு

## ஓர் மேல் நோக்கு

2011-ம் ஆண்டில் வெளிநாட்டு நேரடி முதலீடு ஆகக்கூடிய தொகையினையடைந்தது இது அமெரிக்க டொலர் 1066 மில்லியனாக இருந்தது. கடந்தகால அமெரிக்க டொலர் 516 அதிகரிப்பைக் காட்டுகின்றது. 2011-ம் வழங்கப்பட்ட மொத்த அங்கீகாரங்களின் எண்ணிக்கை 157 ஆகும். கணக்கிடப்பட்ட மொத்த முதலீடு முதலீடு அமெரிக்க டொலர் 4503 மில்லியன்களாகும். (ரூபா 497,866 மில்லியன்கள்) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 121மூ அதிகரிப்பைக் காட்டுகின்றது. 2011ல் கைச்சாத்திடப்பட்ட முதலீட்டு சபையுடனான ஒப்பந்தங்கள் 161 ஆக இருந்தது. பெறுமதி அமெரிக்க டொலர் 3359 மில்லியன்களாகும். (ரூபா 371383 மில்லியன்கள் ) இந்த மதிப்பிடப்பட்ட முதலீடு 2010-ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 170மூ அதிகரிப்பைக் காட்டுகின்றது. 2011ம் ஆண்டில் 66 கருத்திட்டங்கள் அமுலாக்கத்தைத் தொடங்கியதுடன் 73 கருத்திட்டங்கள் வர்த்தக ரீதியிலான இயக்கத்தைத் தொடங்கின. அமுல் நடத்துதல் தொடங்கிய கருத்திட்டங்களின் மொத்தமாக மாறிய முதலீடு அமெரிக்க டொலர் 1002 மில்லியன்களாக இருந்தது. (ரூபா. 110755 மில்லியன்) வர்த்தக ரீதியாக இயக்கம் தொடங்கிய கருத்திட்டங்களின் மாறிய மொத்த முதலீடு அமெரிக்க டொலர் 135 மில்லியன்காளகும். (ரூபா.14,905 மில்லியன்)

செயற்பாடு - 2011

| | கருத்திட்டங்களின எண்ணிக்கை | முதலீடு (US$) மில்லியன் | |
|---|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்கள் | 157 | 4503 | (மதிப்பீடு) |
| கையொப்பமிடப்பட்ட கருத்திட்ட ஒப்பந்தம் | 161 | 3359 | (மதிப்பீடு) |
| செயற்பாடு தொடங்கிய கருத்திட்டங்கள் | 66 | 1002 | (மதிப்பீடு) |
| வர்த்தகச் செயற்பாடு தொடங்கிய கருத்திட்டங்கள் | 73 | 135 | உண்மையானது |

## கவர்ந்தெடுத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (2011-)

2011-ல் கிடைத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI) இதுவரை கிடைத்த ஆகக்கூடிய வெளிநாட்டு நேரடி முதலீடாகும். தொகை அமெரிக்க டொலர் 1066 மில்லியன். 2011-ல் கிடைத்த மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் உற்பத்தித் துறை ஆகக்கூடிய தொகையான அமெரிக்க டொலர் 322 மில்லியன் (30%) ஆகும். அதில் புடவை மற்றும் ஆடையணித்துறைக்கு ருளுகூ 95 மில்லியனாக (9%) இருந்தது. ஹோட்டல் மற்றும் உணவகத்துறை இரண்டாவது ஆகக்கூடிய அமெரிக்க டொலர் 216 மில்லியன் (20%) அதனைத் தொடர்ந்து தொலைபேசி மற்றும் தொலைத் தொடர்புகள் துறை அமெரிக்க டொலர் 197 மில்லியனாக இருந்தது. (18%) மேலும் 2011-ல் இலங்கை பெற்றோலியம் தொடர்பான கருத்திட்டங்களுக்கு அமெரிக்க டொலர் 109 மில்லியன், நேரடி வெளிநாட்டு முதலீட்டை (10%) பெற்றுள்ளது. அத்துடன் வீடமைப்பு கடை / அலுவலகத் தொகுதிகளுக்கு அமெரிக்க டொலர் 91.5 மில்லியன் (9%) கிடைத்தது.

## 2011-ல் துறை சார்ந்த அமைப்பு வெளிநாட்டு நேரடி முதலீடு



## வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பிரதான மூலங்கள்




2011-ல் மொரீஷியஸ் ஆகப் பெரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மூல இடமாக இருந்தது. அமெரிக்க டொலர் 253 மில்லியன் இந்தியா, அமெரிக்க டொலர் 147 மில்லியன், ஹொங்கொங் அமெரிக்க டொலர் 139 மில்லியன், மலேசியா அமெரிக்க டொலர் 89.5 மில்லியன், பிரித்தானிய கன்னித் தீவு அமெரிக்க டொலர் 53.5 மில்லியன், சிங்கப்பூரும் ஐக்கிய அரபு இராச்சியமும் அமெரிக்க டொலர் 53 மில்லியன் ஐக்கிய இராச்சியம் அமெரிக்க டொலர் 52 மில்லியன், நெதர்லாந்து அமெரிக்க டொலர் 51 மில்லியன் யப்பான் அமெரிக்க டொலர் 27 மில்லியன், லக்ஸம்பேர்க் அமெரிக்க டொலர் 25.6 மில்லியன், ஸ்விட்ஸலாந்து அமெரிக்க டொலர் 21 மில்லியன். 2011-ம் ஆண்டில் கிடைத்த மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் 90.5% பங்கு இந்த 12 நாடுகளிலிருந்தும் கிடைத்தது.

## மாறிய முதலீடு (மொத்தம்)

தேறிய மொத்த முதலீடு 2011-ம் ஆண்டின் இறுதியில் அமெரிக்க டொலர் 9339 மில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 23% அதிகரிப்பைக் காட்டியது. தேறிய 9339 அமெரிக்க டொலர் மில்லியன் முதலீட்டில், 64% அமெரிக்க டொலர் 5948 மில்லியன் வெளிநாட்டு முதலீட்டையும் எஞ்சிய 36மூ அமெரிக்க டொலர் 3391 மில்லியன் உள்நாட்டுத் தனியார் முதலீடுகளையும் காட்டியது.

தேறிய மொத்த முதலீட்டில் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகள் துறை 71% வீதமாக இருந்தது. எஞ்சிய 29% ஆடைகள் உட்பட உற்பத்தித் துறையைக் குறிப்பதாக இருந்தது.

## 2011-ல் வர்த்தக நடவடிக்கைகளைத் தொடங்கிய கருத்திட்டங்கள்.

2011-ல் 73 கருத்திட்டங்கள் வர்த்தக நடவடிக்கைகளைத் தொடங்கியதுடன் அவற்றில் 70 புதுக் கருத்திட்டங்களாக இருந்தன. அவற்றில் 3 ஏற்கனவே உள்ள கருத்திட்டங்களின் விரிவாக்கங்களாக இருந்தன.

2011-ல் வர்த்தக நடவடிக்கை தொடங்கிய கருத்திட்டங்களில் தேறிய மொத்த முதலீடு அமெரிக்க டொலர் 135 மில்லியனாக இருந்தது. மொத்தத் தேறிய முதலீட்டிலிருந்து 54% அமெரிக்க டொலர் 73 மில்லியன் வெளிநாட்டு மூலங்களிலிருந்து வந்தது.




## தேறிய முதலீடுகளில் துறை சார்ந்த பங்கீடு

2011-ல் வர்த்தக நடவடிக்கை தொடங்கிய கருத்திட்டங்களிலிருந்து தேறிய மொத்த முதலீகளில் (ஆடையணிகள் மற்றும் புடவை உட்பட) உற்பத்தித்துறை 51% ஆகக்கூடிய பங்களிப்பைச் செய்தது. ஹோட்டல் துறை 27% ஆகவும் மின்வலுத்துறை 17% ஆகவும் இருந்தது.

## தொழில் உருவாக்கம்

2011-ல் இயங்கத் தொடங்கிய வர்த்தக கருத்திட்டங்கள் 6555 புதுத் தொழில் வாய்ப்புகளை உருவாக்கியன. உருவாக்கப்பட்ட மொத்தத் தொழில் வாய்ப்புகளில் 35% (2300) ஆடையணிகள் மற்றும் புடவை வகைகளும் 35% (2322) ஹோட்டல் துறையிலும் இருந்தது. உற்பத்தித்துறை (ஆடையணிகள் மற்றும் புடவை தவிர) 1399 (21%) தொழில் வாய்ப்புகளை இவ்வருடத்தில் உருவாக்கியுள்ளன.



# திணைக்களச் செயற்பாடுகள்

## பணிப்பாளர் நாயகத்தின் செயலகம்

பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்தின் செயலகத்தினால் கூட்டிணைக்கப்படுகின்றன.

2011-ல் முதலீட்டுச் சபைத் தலைவர் / பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியின் விளைவாக அரசாங்க நிறுவனங்களிடையிலான தொடர்புகள் மேலும் முன்னேற்றமடைந்தன. முதலீட்டாளர்களினால் கருத்திட்டங்களைத் துரிதமாக அமுல் நடத்துவதற்குத ˙தேவையான அங்கீகாரங்களைத், தொடர்பான அமைச்சுக்கள் மற்றும் முகவர் நிலையங்களின் அலுவலர்களது பங்கேற்புடன் ஓரிடத்தில் கூடச் செய்வதே அதுவாகும்.

முதலீட்டுச் சபையின் புதுக்கருத்திட்டங்களுக்கான ஓரிடச் செயற்பாட்டுக் கூட்டம் 2011 ஆகஸ்டில் தொடங்கியதுடன் மீளாய்வுக்குரிய ஆண்டில் 4 கூட்டங்கள் நடைபெற்றன. கூட்டங்கள் கூட்டுவதையும், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களைப் பின் தொடர்வதும் செயலகத்தினால் கூட்டிணைக்கப்படுகின்றது. 23 கருத்திட்டங்கள் தொடர்பாக, காணிக் குத்தகைகளைத் துரிதப் படுத்துதல் அபிவிருத்தி அனுமதிகளை வழங்குதல், சுற்றாடல் அனுமதிகள், தர உறுதிச் சான்றிதழ்களை வழங்குதல், உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் என்பன கலந்துரையாடப்பட்டன. அத்துடன் மீளாய்வுக்குரிய ஆண்டில் நடைபெற்ற கூட்டங்களில் 12 விடயங்கள் உடனடியாகத் தீர்க்கப்பட்டன.

செயலகம் பின்வரும் பணிகளைக் கொண்டது. பணிப்பாளர் சபையின் மாதமிருமுறைக் கூட்டங்களைக் கூட்டுதல், கூட்ட அறிக்கைகளைத் தயாரித்து சபை உறுப்பினர்களுக்கு வழங்குதலும் அத்துடன் சபையின் தீர்மானங்களைத் தொடர்பான திணைக்களங்களுக்கு அறியச் செய்தல். 2011-ம் ஆண்டில் 21 சபைக் கூட்டங்களும் மூன்று விசேட சபைக் கூட்டங்களும் நடைபெற்றன. செயலகமானது முகாமைத்துவ விடயங்களையும், கொள்கை விடயங்களையும் கலந்துரையாவதற்காக மாதமிருமுறை முகாமைத்துவக் குழுக் கூட்டங்களைக் கூட்டுவதற்கும் பொறுப்பானது. அத்துடன் அது தொடர்பான ஆவணப்படுத்தல்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக நடவடிக்கைகளைக் கண்காணித்தலும் உள்ளடக்கும். 2011-ல் ஐந்து முகாமைக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் இன்னொரு பணி நிறுவனத்தினுள் பல்வேறு நடவடிக்கைகளின் பகுதிகளைக் கூட்டிணைப்புச் செய்வதும், அத்துடன் வெளி முகவர் நிலையங்கள் மற்றும் தலைவர் / முகாமைப் பணிப்பாளருக்குத் தேவையான உதவிகளை வழங்கும் தனியார் நிறுவனங்களிடையில் கூட்டிணைப்பை ஏற்படுத்துவதாகும். ஆண்டறிக்கையினை வெளியிடுவதற்காகக் குறிப்பிட்ட திணைக்களங்களிலிருந்து தகவல்களைக் கோருவதும், அவற்றை ஒப்பிட்டுத் திரட்டுவதும் அதன் பொறுப்பாகும்.

உள்ளகத் திணைக்களங்களிலிருந்து கிடைத்த தகவல்களை ஒன்று திரட்டுவதும் பாராளுமன்றக் கேள்விகளுக்கும், பாராளுமன்ற இணைப்புக் குழுக்களின் கேள்விகளுக்கும், வெளி நிறுவனங்களிலிருந்து கிடைத்த ஏனைய கேள்விகளுக்கும் சரியான நேரத்தில் பதில்களைச் சமர்ப்பிப்பதும் செயலகத்தின் பொறுப்பாகும். அது பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் தொடர்புபட்டுச் செயலாற்றுவதற்கான தொடர்பு நிலையமாகவும் செயற்படுகின்றது. அமைச்சரவைப் பத்திரங்களை வரைதல், மற்றும் கொள்கைப் பத்திரங்களை / அறிக்கைகளை வரைதல், கருத்திட்டங்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முதலீட்டாளர்களைச் சந்திப்பதிலும் அது ஈடுபடுகின்றது.

## முதலீட்டு மேம்பாடுகள் மேலாக்கம்

மூன்று முக்கியமான திணைக்களங்களை ஒன்று சேர்ப்பதும் 2011-ல் நடைபெற்றது. அவையாவன முதலீட்டு மேம்பாடு, முதலீட்டு மதிப்பீடு, மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையினால் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புசீரமைப்புகளை மேற்பார்வை செய்வதுமாகும். குறிப்பிடப்பட்ட திணைக்களங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு மூன்று விரிவான துறைக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டன. இதன் நோக்கம் முதலீட்டுச் சபைப்

பணிகளை மேம்படுத்துவதும் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் சேவையின் தரத்தை மேலோங்கச் செய்வதுமாகும்.

விரிவான மூன்று துறைக் குழுக்களும் மூன்று உப துறைக் குழுக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 1-ம் துறைக்குழு உல்லாசப் பிரயாணம் மற்றும் ஓய்வு, விவசாயமும் தகவல் தொழில் நுட்பம் / அறிவு. 2-ம் துறைக்குழு உட்கட்டமைப்பு, பயன்பாடுகள், துறைமுகங்கள், கல்வி மற்றும் 16-ம் பிரிவுக் கருத்திட்டங்கள் என்பன. 3-ம் துறைக்குழு ஆடையணிகள் உற்பத்தி, பிராந்திய நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்தல்.

துறைசார்ந்த குழுக்களினால் இவ்வாறு துறைசார்ந்த ரீதியில் நோக்குவது தேவையான எல்லா வசதிகளையும் முதலீட்டாளர்களுக்குத் தொடக்கக் கட்டத்திலிருந்து கருத்திட்டக் காலம் முழுவதிலும் செய்து கொடுப்பதாகும்.

இக்குழுக்கள் தொடர்பான அமைச்சுக்களுடன் சேர்ந்து முதலீட்டு முன்னுரிமைகளை அடையாளம் கண்டு, முதலீட்டு வாய்புகளைச் சாதகமான முறையில் மேம்படுத்துவதாகும். முதலீட்டாளர்கள் ஒரு துறையில் முதலிடுவதற்குத் தீர்மானித்தவுடன், இக்குழுக்கள் தமது துறைகளில் எல்லா முதலீட்டாளர்களுக்கும் உறவு முகாமையாளர்களாகச் செயற்படுவார்கள். கருத்திட்ட மதிப்பீடு தொடக்கம் அமுல் நடத்துதல் வரையும், முதலீட்டுக்குப் பின்னரான கவனிப்பு உட்பட அதன் மூலமாக ஆழமான உறவுகளை ஏற்படுத்தித் துறைசார்ந்த பரவலான அறிவைப் பெறுவர்.

## துறைக்குழு -1

மீளாய்வுக்குரிய ஆண்டில், முதலீட்டு வாய்ப்புகளை கண்டறிவதற்கு வரும் பிரதான கம்பனிகளுக்கும் / குழுக்களுக்கும் இக் குழு தனது விடயங்கள் தொடர்பாக வசதிகளையேற்படுத்தியது.

இவை பின்வரும் குழுக்களைக் உள்ளடக்கிக் கொண்டிருந்தது. Banyan Tree Group சிங்கப்பூர், Avic International (CATIC) சீனா, Accord Hotel குழு சுவிட்சலாந்து சுலனபுநள ஹோட்டல் / Resort அவுஸ்திரேலியா, ஆ-கயச ஹோட்டல் / Resot லிமிடெட், ஓமான் / இந்தியா, Bank of America, Merryl Lynch, ஹொங்கொங் கட்டார் னுயைச முதலீட்டுக் கம்பனி கட்டார், Laguna Resort & Hotel தாய்லாந்து, Sun Inetrnatinal (Sun City Group) தென் ஆபிரிக்கா, T Panorama Developemnt Uttama, பாலி / இந்தோனேசியா, ITC Group இந்தியா மற்றும் மலேசியா, Maccau Enterprises Centre, மலேசியா, இவை சுற்றுலாத்துறையிலாகும். இந்தியாவின் Vijanagar Sugar Pvt டுவன விவசாயத்துறையில் கந்தளாய் சீனிக் கருத்திட்டத்திற்கான மனுக் கோரலில் பங்குபற்றியது. சிங்கபூர், தகவல் தொழில் நுட்ப / அறிவுத் துறையில் அம்பாந்தோட்டை உயர் தொழில் நுட்ப நகர் அபிவிருத்தி தொடர்பாக வாய்ப்புகளை ஆராய்ந்து கொண்டிருக்கின்றது.

SDP **அதிகாரச் சட்டத்தின் கீழ் தவிர (2011 ஜனவரி - டிசம்பர்) கிடைத்த கருத்திட்ட விண்ணப்பங்களின் விவரங்கள்.**

| விவரம் | சுற்றுலா | விவசாயம் | தகவல் தொழில் நுட்பம் / அறிவு சேவைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| புது விண்ணப்பங்கள் கிடைத்தவை | 35 | 05 | 04 | 44 |
| விரிவாக்கலுடன் வழங்கப்பட்ட கருத்திட்ட அங்கீகாரங்கள் | 26 | 02 | 02 | 30 |
| கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் | 18 | 05 | 03 | 26 |
| நடவடிக்கை தொடங்கியவை | 17 | 06 | 06 | 29 |



Anilana
Passikudha

## பேச்சுவார்த்தை நடாத்தப்பட்ட / அங்கீகரிக்கப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

1-ம் இலக்கத் துறைக்கு குழு 2008-ம் ஆண்டின் 14-ம் இலக்க முக்கியமான அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டத்தின் கீழ் பிரதான கருத்திட்டங்களுக்குச் சலுகைகள் வழங்குதல் மற்றும் பேச்சுவார்த்தை நடத்துவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. இது கருத்திட்டங்களுக்கு வரிகளில் இருந்தும் அறவீடுகளில் இருந்து பெரும் விதிவிலக்குகளை அளிக்கின்றது.

இதன் பிரகாரம், Shangrilla Hotels Lanka நிறுவனத்துக்கு முக்கியமான அபிவிருத்திக் கருத்திட்ட நிறுவனம் இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. உயர்தரம் வாய்ந்த வாசஸ்தலங்கள், உயரமான கடைத் தொகுதிகள் என்பனவற்றைக் கொழும்பு காலிமுகத்திடலில் அமெரிக்க டொலர் 408 மில்லியன் முதலீட்டுடன் நிர்மாணித்து இயக்குவதற்கு ஒரு உல்லாச ஹோட்டல் அமைப்பதற்கு வழங்கப்பட்டது.

அவ்வாறே Shangrilla Investments Lanka (Pvt) நிறுவனத்துக்கு பிரதான அபிவிருத்திக் கருத்திட்ட நிலை, ஹம்பாந்தோட்டையில் அமெரிக்க டொலர் 120 மில்லியன் முதலீட்டுடன், உயர்தரமான வாசஸ்தலங்கள், கடைத் தொகுதி மற்றும் கால்ப் மைதானம் உட்பட 1 உல்லாச ஹோட்டலை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

சீனாவிலிருந்தும் இந்தியாவிலிருந்து உல்லாசப் பிரயாணம் தொடர்பான கருத்திட்டங்களுக்கு அங்கீகாரம் கோரி, அமெரிக்க டொலர் 90 மில்லியன் அமெரிக்க டொலர் 335 மில்லியன் இடையிலான 4 பிரதான முதலீட்டு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. அத்துடன் பிரதான அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டத்தின் கீழ், தகவல் தொழில் நுட்ப / அறிவுச் சேவைகள் துறையில் ஹம்பாந்தோட்டையில் ஒரு உயர்தர தொழில் நுட்ப நகரைத் தாபிப்பதற்கு முன்மொழிவும் குழுவினால் மீளாய்வுக்குரிய ஆண்டில் வசதியளிக்கப்பட்டுள்ளது.

விவசாயம் / பால் உற்பத்தி, கோழி வளர்ப்புத் துறை என்பவற்றின் கீழ் ஆறு பிரதான ஆலோசனைகளுக்கும் வசதியளிக்கப்பட்டது. அவற்றில் இரண்டு சீனித் தொழிற்சாலை, மற்றும் பண்ணை அமைப்பதற்கும், இரண்டு கோழிப் பண்ணை அமைப்பதற்கும், மற்றும் முதலீடுகள் அமெரிக்க டொலர் 3.8 மில்லியனிலிருந்து அமெரிக்க டொலர் 110 மில்லியன் வரை.

## ஏனைய முதலீட்டு மேம்பாட்டுச் செயற்பாடுகள்

முதலீட்டுச் சபையின் புதிய இணையதளத்தை மீள ஸ்தாபித்தல் - www.investsrilanka.com

2011-ம் ஆண்டில் துறை நோக்கிய அடைவின் கீழ் முதலீட்டுச் சபையின் பிரதான மீளமைப்பு திட்டம் அமுல் நடத்தப்பட்டதன் பின்னர், முதலீட்டுச் சபையின், இணையத்தளம் நாட்டைப் பற்றி ஒரு உடன்பாடான, பாரிய தோற்றத்தை ஏற்படுத்துவதற்காகச் சீரமைக்கப்பட்டது. இதன் நோக்கம் உயர்ந்தளவிலான முதலீட்டைக் கவர்ந்தெடுப்பதாகும். இதன்படி 1-ம் குழுவிலிருந்து ஒரு குழுவின் முதலீட்டுச் சபையின் இணையத்தளத்தையும் அதன் உள்ளடங்கல்களையும் மறுசீரமைப்பதில் ஈடுபட்டது. இதன் நோக்கம்

முதலீட்டாளர்களுக்குப் பிரதான தகவல்களை வழங்குவதும், முதலீட்டாளர்களுக்குச் சினேகபூர்வமான முறையில் செயற்படுவதுமாகும். முன்னைய இணையத் தளத்தின் சிறந்த தன்மைகளைத் தக்க வைத்துக் கொண்டு இத்தளம் அபிவிருத்தி செய்யப்பட்டது. அத்துடன் அயர்லாந்து, துருக்கி, மலேசிய மற்றும் தாய்லாந்து எனும் நாடுகளின் IPA இணையத்தளங்களுடன் benchmark பேணப்பட்டது.

திணைக்களத் தலைவர் (துணைக்குழு 1), IT/BPO நாட்டுப் போட்டிக் கற்கையில் முக்கியமான உறுப்பினராகக் கடமையாற்றினார். இலங்கை மேலைத்தேயத் தரத் தரங்கள் எனும் ஐஊவுயு யினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அறிக்கை 2012ல் வெளியிடப்படவுள்ளது.

சுற்றுலாத் துறைக் குழுவின் பிரதான அலுவலர்கள் திறைசேரியில் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற சுற்றுலா கூட்டமைப்புக் கூட்டங்களில் கிரமமாகக் கலந்து கொண்டார்.

மேலும், இலங்கை (சுற்றுலா) உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்தி அதிகார சபையில் நடைபெற்ற ஓரிட மாதாந்தக் கூட்டங்களில் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர். இதன் நோக்கம் அமுல் நடத்தும் நிலையில் உள்ள உல்லாசப் பிரயாணக் கருத்திட்டங்களைத் துரிதமாகக் கண்காணிப்பதாகும்.

## துறைக்குழு-2

மீளாய்வுக்குரிய ஆண்டில் இத்துறைக்குழு இக்குழுவின் எல்லையினுள் வரும் முதலீட்டு விடயங்களின் எதிர்கால முதலீட்டு வாய்ப்புகளை அறிவதற்காக இலங்கை வந்த பிரதான நிறுவனங்களுக்கு / குழுக்களுக்கு வசதியளித்தது. இவை பின்வரும் விடயங்களை உள்ளடக்கி இருந்தன.

**இவை பின்வரும் நிறுவனங்களிருந்து வந்த தூதுக் குழுக்களாகும்.**

Mitsui & Co Ltd, Japan, South City Projects (Kolkata) Ltd, India, Supalai Public Company Ltd, Thailand, Infinity Infotech Parks Ltd, India, Sunway City Berhard, Malaysia, Keangnam Eterprises Ltd, South Korea, IVRCL Assets & Holdings Ltd, India, Samsung C & T Corporation , Korea, Global Orion Pte Ltd, Singapore, Crown Limited, Australia, Dragon Asia Fertilizer Limited, Hong Kong, Malaysia Petroleum Resource Corporation, Malaysia, China Shandong Int'l Economic & Technical Cor. Group Ltd, China, and Boo Young Co (Underserved Resettlement Construction), Korea amongst others in the Infrastructure Sector; R & A Telecommunication , SDN BHD, Malaysia, Green Pulse ,Belgium, CG Solar , China, Weihai China Gloass Solar Col Ltd, China, Samsung C & T India , India, Oziland Services, Malaysia, and Bhilwara Energy Ltd, India in the Utilities and Ports Sector and UK Universities of Central Lancashire, Hertfordshire, Staffordshire, Ulster and Laureate International Universities of USA in the Education Sector.

.

2011 **ஜனவரி - டிசம்பர் வரை கிடைத்த கருத்திட்ட விண்ணப்பங்களின் விபரங்கள், மூலோபாய அபிவிருத்தி கருத்திட்டங்கள்** (SDP ACT) **கீழான கருத்திட்டங்கள் தவிர.**

| விவரணம் | உட்கட்டமைப்பு | துறை முகங்களும் பயன்பாடுகளும் | கல்வி | 16-ம் பிரிவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கிடைத்த புது விண்ணப்பங்கள் | 30 | 11 | 04 | 28 | 73 |
| வழங்கப்பட்ட கருத்திட்ட அங்கீகாரங்கள் | 27 | 11 | 03 | 15 | 56 |
| விரிவாக்கத்துடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் | 22 | 20 | 01 | ஏற்புடையதல்ல | 43 |
| நடவடிக்கை தொடங்கியது | 0 | 04 | 0 | 10 | 14 |



Cairn Lanka (Pvt) Ltd.

## கலந்துரையாடப்பட்ட / அங்கீகரிக்கப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

கருத்திட்டங்களுக்கு வரிகளிலிருந்தும் அறவீடுகளிலிருந்தும் பெரும் விதிவிலக்குகளை வழங்கும் 2008-ம் ஆண்டின் 14-ம் இலக்க (திருத்தப்பட்ட) பிரதான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அதிகாரச் சட்டத்தின் கீழ் பிரதான கருத்திட்டங்களுக்கு சலுகைகளை அங்கீகரிப்பதற்கும் கலந்துரையாடுவதற்கும் துறைக்குழு 2 மும்முரமாக ஈடுபட்டது.

கொழும்பு International Container Terminals நிறுவனத்துக்கு South Container Terminal ஐ அபிவிருத்தி செய்வதற்கு பிரதான அபிவிருத்தி கருத்திட்ட நிலை, கொழும்புத் துறைமுக விரிவாக்கத் திட்டத்தின் கீழ் கட்டிச் செயற்படுத்தி மற்றும் (BOT) அடிப்படையில் அமெரிக்க டொலர் 500 மில்லியன் முதலீட்டின் மீது வழங்கப்பட்டது.

அவ்வாறே Asian Resorts and consortium நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவொன்றுக்குப் பிரதான அபிவிருத்திக் கருத்திட்ட நிலையினை வழங்குவதற்குப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. பாரிய அளவிலான ஒன்றிணைக்கப்பட்ட ஓர் உல்லாசப் பிரயாண நகரை கட்டாணையில் அமைப்பது இதன் திட்டமாகும். இதில் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் 04, கண்காட்சி மற்றும் கூட்ட மண்டபம் / நிலையம் இரு கடைத் தொகுதிகள் Theme Park களிப்பு வசதிகள், Recreation வலயங்கள, உணவகங்கள் SPA (ஆரோக்கிய இடம்), சுகாதார நிலையம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைப்பு நிலையம், சகல உள்ளக உட்கட்டமைப்பு வசதிகளுடன் வெளிநாட்டு நேரடி முதலீடு அமெரிக்க டொலர் 1.5 billion ஆகும்.

Mitchell consortium இனால் திருகோணமலையில் ஒரு பாரிய தொழில் வலயத்தை வெளிநாட்டு நேரடி முதலீடாக அமெரிக்க டொலர் 700 மில்லியன் முதலீட்டு கருத்திட்டத்தின் முதலாம் பகுதியைத் தொடங்குவதற்கான ஒரு முதலீட்டுத்திட்டம். இதில் உழமந பொதித் தொகுதி, Iron ore Paliatizing பொறி வுசயளொனி க்காக மூலப் பொருட்களைக் கலத்தல் காபன் மற்றும் சக்தி என்பன பற்றி விசேட ஆராய்ச்சி திருகோணமலை சாம்பூரில் தொடங்கப்படுவதற்காக துறைக் குழுவினால் பிரதான அபிவருத்திக் கருத்திட்ட அந்தஸ்து பெறப்பட வசதி செய்யப்பட்டுகின்றது.

Sithe Global Power Ventures LLC அடுத்த பிரதான கருத்திட்ட உட்கட்டமைப்பின் ஆலோசனைகளை முன்வைத்துள்ளது. இதன் நோக்கம் LNG பொறி வசதிகளை ஏற்படுத்துவது. இது ஒரு uploading terminal ஐ அபிவிருத்தி செய்தல், நிதியளித்தல், நிர்மாணித்தல், உரிமையும் இயக்குதலும், களஞ்சியப்படுத்தலும், குழாய்த் தொகுதி 520 மெகாவட் LNG நிலையத்தை அப்பாந்தோட்டையில் நிறுவுதல், முதலீடு அமெரிக்க டொலர் 1 பில்லியன் இதற்காக முன்னேற்பாட்டுக் கற்கைகள், தொடர்பான நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.

கல்வித் துயையினால், மத்திய லன்காஷயர் பல்கலைக் கழகத்தினால் அமெரிக்க டொலர் 40 மில்லியன் செலவில் பல்கலைக்கழக வளாகம் ஒன்றைத் தொடங்குவதற்கும் மீளாய்வுக்குரிய ஆண்டில் வசதிகள் மேற்கொள்ளப்பட்டன.

## துறைக் குழு -03

மீளாய்வுக்குரிய ஆண்டில் இத்துறைக் குழு, தனது எல்லைக்குள் வரும் முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பாக ஆராய்வதற்கு இலங்கைக்கு வரும் பிரதான நிறுவனங்களுக்கும் / குழுக்களுக்கும் வசதியளித்தது.

இவை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் "கிழக்கின் வசந்தம்" மற்றும் "வடக்கின் வசந்தம்"; நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் பின்வரும் நிறுவனங்களுக்கு ஆடைக் கருத்திட்டங்களைப் பிரதான அளவில் வழங்குவதற்கு வசதியளித்தது.

இந்த நிறுவனங்கள் அமெரிக்க டொலர் 42 மில்லியனுக்கு அதிகமாக முதலிட்டதுடன் 3500 ஆட்களுக்கு மேல் தொழில் வாய்ப்புகளை உருவாக்கியது.

இத்துறைக்குழு பிராந்திய நிகழ்ச்சித் திட்டங்களையும் சேவைகள் ஏற்றுமதித் துறையிலும் கருத்திட்டங்களுக்கு வசதியளித்தது. அதாவது 300 நிறுவனங்களின் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களுக்காகப் பிராந்திய அபிவிருத்திக் கருத்து பற்றிய ஏற்றுமதித் துறைச் சேவைகள்.

இத்துறைக் குழுவினால் மீளாய்வுக்குரிய ஆண்டில் பிரதான கருத்திட்ட விரிவாக்கங்கள் அங்கீகரிக்கப்பட்டன. அவை பின்வருவனவற்றையும் உள்ளடக்கி இருந்தன. அமெரிக்க டொலர் 30 மில்லியன் முதலீட்டுடன் Prima Ceylon Ltd இன் திறமை விரிவாக்கம் அமெரிக்க டொலர் 35 மில்லியனுக்கு மேல் Holcim Lanka Pvt Ltd ன் திறமை விரிவாக்கம் அமெரிக்க டொலர் 15 மில்லியன் முதலீட்டுடன் Ansel Lanka Ltd இன் திறமை விரிவாக்கம்.

## 3-ம் துறையின் முழுமையான செயற்பாடு

### துறையின் அமுலாக்குக் கட்டம் (புதுக் கருத்திட்டங்கள்)

| நிலை | ஆடையணி | பிராந்திய மற்றும் சேவைகள் ஏற்றுமதி | உற்பத்தி | துறை மொத்தம் | மொத்த முதலீட்டுச் சபை கருத் திட்டம் | துறை நிலை |
|---|---|---|---|---|---|---|
| அங்கீகாரம் கிடைக்க வேண்டியவை | 02 | 02 | 22 | 26 | 83 | 31% |
| அங்கீகரிக்கப்பட்டு ஒப்பந்தம் கிடைக்கும் வரை | 07 | 09 | 13 | 29 | 112 | 26% |
| அமுல் நடத்தவுள்ளவரை | 11 | 55 | 30 | 96 | 224 | 43% |
| வர்த்தக நடவடிக்கை தொடர்புள்ளவை | 07 | 53 | 21 | 81 | 249 | 33% |
| வர்த்தக நடவடிக்கை தொடங்கும் வரை காத்திருக்க வேண்டியவை | 333 | 189 | 377 | 899 | 1583 | 57% |
| மொத்தம் | 360 * | 308 | 463 | 1131 | 2251 | 50%** |

* 200 ஆடைத் தொழிற்சாலைக் கருத்திட்டத்தின் கீழ் 152 கருத்திட்டங்கள் சேர்க்கப்படுதல் வேண்டும்.

** இயங்குகின்ற மொத்தக் கருத்திட்டங்களில் 1583 கருத்திட்டங்கள் மேற்கூறப்பட்ட 3 துறைகளின் கீழ் வருகின்றன. இவை மூலதனச் சபையின் கீழான கருத்திட்டங்களில் 57% மாகும்.



Colombo International Container Terminals Ltd.

## பிரதான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அதிகாரச் சட்டத்தின் கீழ் கலந்தரையாடப்பட்ட / அங்கீகரிக்கப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

3-ம் துறைக் குழு 2008-ம் ஆண்டின் 14-ம் இலக்க முக்கிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அதிகாரச் சட்டத்தின் கீழ் (திருத்தப்பட்டது) பிரதான கருத்திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல் மற்றும் சலுகைகளைக் கலந்துரையாடுதல் என்பற்றில் மும்மரமாக ஈடுபட்டு இருந்தது. இச்சட்டம் கருத்திட்டங்களுக்கு வரிகளிலிருந்தும், அறவீடுகளிலிருந்தும் பெருமளவு விதிவிலக்குகள் அளிக்கின்றது.

இதன் பிரகாரம் இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்திற்கு அதுருகிரியவில் அமெரிக்க டொலர் 80 மில்லியன் முதலீட்டுடன் 05 இயந்திர அமைப்புகளை நிறுவுவதற்குப் பிரதான அபிவிருத்திக் கருத்திட்ட நிலை வழங்கப்பட்டது.

## முதலீட்டாளர் சேவைகள்

முதலீட்டாளர் சேவைகள் திணைக்களம் முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17-ம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் இறக்குமதி/ஏற்றுமதி அனுமதிகளுக்குப் பொறுப்பானது. அத்துடன் பினவருமாறு குறிப்பிடப்பட்ட முதலீட்டாளர் தொடர்பான செயற்பாடுகளையும் வழங்கும்.

- ★ இறக்குமதி/ஏற்றுமதிச் சரக்குகளை நேரடியகப் பரிசோதனை செய்தல்
- ★ உப ஒப்பந்தங்கள், இடமாற்றங்கள், மீள இறக்குமதி மற்றும் மீள ஏற்றுமதி என்பவற்றைக் கண்காணித்தல்.
- ★ ஆடைகள் ஏற்றுமதி தொடர்பாக ஐரோப்பிய யூனியனுக்கு முலச் சான்றிதழ்களை வழங்குதல்.
- ★ முதலீட்டுச் சபைக் கருத்திட்டங்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பாகப் புள்ளி விபரத் தரவுகளைத் தயாரித்தல்.
- ★ இறக்குமதி ஏற்றுமதிகளில் அரசாங்கத்தின் வரிகளைச் சேகரித்தல்.
- ★ (வலய நிறுவனங்கள் தொடர்பாக) வெளி நாட்டவர் விசாக்களை அளிப்பது தொடர்பாக விதந்துரைகள் வழங்குதல்.

இத்திணைக்களம் கொழும்பு, கட்டுநாயக்க, பியகம, கொக்கல, மற்றும் பள்ளேகல எனும் ஐந்து ஆவண நிலையங்களைக் கொண்டுள்ளது. இங்கு (CUSDECS) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி என்பன முதலீட்டுச்சபை அலுவலர்களினால் அங்கீகரிக்கப்படுகின்றன. எவ்வாறெனினும் முதலீட்டுச் சபை நிறுவனங்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்கள் நேரடியாகப் பரிசோதனை செய்யப்படக் கூடிய 12 சோதனை நிலையங்கள் நாடு முழுவதிலும் உள்ளன.

மேலும், கூட்டுத்தாபனத் திட்டத்தின் கீழ் 2011-க்கான திட்டமிடப்பட்ட ஏற்றுமதிச் சம்பாதிப்பு அமெரிக்க

டொலர் 5800 மில்லியனாகும். உண்மையான ஏற்றுமதிக் கணக்கு அமெரிக்க டொலர் 6386 மில்லியன் ஆகும். எனவே கணிக்கப்பட்ட மற்றும் உண்மையான ஏற்றுமதிக் கணக்கிடையில் 10% அதிகரிப்பு உள்ளது.

**பதனிடப்பட்ட கஸ்டெக்ஸ்களின் எண்ணிக்கை**




**சுங்கப் பிரகடனங்கள்**

| | 2010 | 2011 | வேறுபாடு | வளர்ச்சி % |
|---|---|---|---|---|
| இறக்குமதி | 160114 | 167163 | 7049 | 4.22 |
| ஏற்றுமதி | 275934 | 289187 | 13253 | 4.58 |




**இறக்குமதிகள் மற்றும் ஏற்மதிகளின் பெறுமதி (ரூபா. மில்லியன்)**

| | 2010 | 2011 | வேறுபாடு | வளர்ச்சி% |
|---|---|---|---|---|
| இறக்குமதி | 379,833.00 | 486,495.00 | 106,662.00 | 21.92 |
| ஏற்றுமதி | 569,305.00 | 711,558.00 | 142,253.00 | 19.99 |

## முதலீட்டுச் சபை நிறுவனங்களுக்கான கொள்கலனில் நிரப்பப்பட்ட சரக்குகள் (இறக்குமதி/ஏற்றுமதி)

முதலீட்டுச் சபைக்கான கொள்கலன் இடப்பட்ட
பொருட்கள் (இறக்குமதி ஏற்றுமதி)




| | 2010 | 2011 | வேறுபாடு | வளர்ச்சி% |
|---|---|---|---|---|
| இறக்குமதி | 58829 | 69533 | 10704 | 15.39 |
| ஏற்றுமதி | 75678 | 90826 | 15148 | 16.68 |

## சட்ட உதவி

முதலீட்டுச் சபையின் சட்டத்திணைக்களம் சபைக்கும் முதலீட்டாளர்களுக்கும் உயர் தொழில் ஆலோசனை / சேவைகளை வழங்குவதற்குப் பொறுப்பானது. பிரதான பங்கு, முதலீடுகள் தொடர்பான சட்ட நிலை பற்றி முதலீட்டாளர் சேவைகளாகும். அத்துடன் முதலீட்டுச் சபை சட்டத்தின் 17-ம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்காக முதலீட்டு ஒப்பந்தங்களை வசதிப்படுத்துவதுமாகும். இத்திணைக்களம் முதலீட்டுச் சபைக்கு எதிரான நிறுவன வழக்குகளில் கூட்டுத்தாபனச் சட்ட விடயங்களில் தனது கடமைகளில் ஈடுபடுகின்ற அத்துடன் முதலீட்டுச் சபையின் சார்பாக அதன் சட்ட அக்கறைகளைப் பாதுகாக்கின்றது.

முதலீட்டாளர்களுக்குச் சட்டச் சேவைகள் வசதியளித்தல் ஆலோசனைத் தன்மை வாய்ந்தது. இவை பின்வருவனவற்றை உள்ளடக்கியது. முதலீட்டுச் சபை சட்டத்தின் 17ம் பிரிவின் கீழ் கருத்திட்டங்களைத் தாபித்தவுடன் தொடர்பாக இலங்கைச் சட்ட நிலைமை பற்றிய தகவல்களை வழங்குதல். (அத்துடன் பிரதான அபிவிருத்திக் கருத்திட்ட அதிகாரச் சட்டத்தின் கீழ்) மற்றும் இலங்கையில் கருத்திட்டங்களை தாபிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தின் சட்ட விதிகளைக் கவனித்தலும், அங்கீகரித்தலும்.

மீளாய்வுக்குரிய காலப் பகுதியில் முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17-ம் பிரிவின் கீழ் முதலீட்டுச் சபை 125 ஒப்பந்தங்களை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் புது வர்த்தக நிறுவனங்களைத் தாபிப்பதற்காகும். இது 2008-ம் ஆண்டின் திருத்தப்பட்ட 14-ம் இலக்க பிரதான அபிவிருத்திக் கருத்திட்ட அதிகாரச் சட்டத்தின் கீழ் 05 கருத்திட்டங்களையும் உள்ளடக்கியது. இந்த 05 கருத்திட்டங்களும் பின்வருமாறு:

(1) Shangri-la Investments Lanka (Pvt) Ltd;

(2) Shangri-la Hotels Lanka (Pvt) Ltd;

(3) Colombo International Container Terminals Ltd;

(4) Ceylon Heavy Industries and Consultancy Co. Ltd; and

(5) Cairn Lanka (Pvt) Ltd.

மீளாய்வுக்குரிய ஆண்டில் இத்திணைக்களம் தனக்கு விதிக்கப்பட்டிருந்த எல்லைகளைக் கடந்து செயற்பட முடியுமாக இருந்ததனால், இன்று 125 ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டமை ஒரு பெரும் சாதனையாகக் கொள்ளப்படலாம். இதற்கு மேலதிகமாக, ஏற்கனவே இருக்கக்கூடிய முதலீட்டுச் சபைக் கருத்திட்டங்களுடன் 221 துணை ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டன. இவை மேலும் முதலீடு செய்தல், ஏற்கனவே உள்ள வர்த்தகத்தை விரிவாக்கல், வர்த்தக அளவை விஸ்தரித்தல், கருத்திட்டங்களை இடமாற்றியமைத்தல், செயலிழந்த கைத்தொழில்களைக் கையேற்றுதலும், மீளமைத்தலும் போன்றன.

மேற்குறிப்பிட்டதற்கு மேலதிகமாகச் சட்டத் திணைக்களம் தனது முதலீட்டாளர் தொடர்பான சேவைகளை விரிவுபடுத்திச் செல்கின்றது. நிறுவனங்களைத் தாபிக்கும் முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுச் சபையின் காணிகளை வழங்குகின்றது.

## உட்கட்டமைப்பு அபிவிருத்தியும் பிராந்திய வலய நடவடிக்கைகளும்

ஏற்கனவே இருக்கக்கூடிய 12 ஏற்றுமதி உற்பத்தி வலயங்களில் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை முழுமையாகக் கூட்டிணைத்தல், இடங்களை அடையாளங்காணுதல், பொருத்தத் தன்மையினை மதிப்பிடுதல், புதிய முதலீட்டு மேம்பாட்டு வலயங்களைத் தாபித்தல் என்பன தொழில் நுட்பச் சேவைகள் திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும்.

12 ஏற்றுமதி உற்பத்தி வலயங்கள் பின்வரும் இடங்களில் தாபிக்கப்பட்டுள்ளன. அவை கட்டுநாயக்க, பியகம, கொக்கல, கண்டி, சீதாவக, மீரிகம, மல்வத்த, வதுபிடிவல, ஹொரண, பொல்காவல, மாவதகம, மற்றும் மிரிஜ்ஜவில. 2011-ன் இறுதியில் 276 தொழிற்சாலைகள் ஏற்றுமதி உற்பத்தி வலயங்களில் இயங்கியதுடன் சுமார் 126000 தொழில்களை ஏற்படுத்தியிருந்தது.

முதலீட்டுச் சபையின் இப்போது இருக்கக்கூடிய ஏற்றுமதி உற்பத்தி வலயங்களைத் தரமுயர்த்துவதற்குச் சபை 2010ல் தீர்மானித்தது. மாதிரிக் கைத்தொழில் வலயங்களாகப் பிற நாடுகளின் சர்வதேசக் கைத்தொழில் வலயங்ககளில் பிரசித்தப்படுத்துவது இதன் நோக்கமாகும். இதன்படி வலயங்களில் பிரதான மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2011-ம் ஆண்டில் உட்கட்டமைப்பு மேம்பாடுகள் நவீனமயப்படுத்தல், மற்றும் பெரிதாக்குவதற்காக ரூபா. 291.33 மில்லியன் செலவிடப்பட்டது.

சாம்பூரில் ஒரு பெரும் கைத்தொழில் வலயத்தைத் தாபிப்பதற்கான தொடக்க நடவடிக்கைகளை முதலீட்டுச் சபை 2011 ல் தொடங்கியது. புத்தளம் முதலீட்டு மேம்பாட்டு வலயத்தை அமுல் நடத்துதலுடன் தொடருவதற்கு ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டகளப்பில் புது முதலீட்டு மேம்பாட்டு வலயங்களை 2011-ல் தாபிப்பதற்கு இடங்கள் அடையாளங் காணப்பட்டன.

விசேடமாக புடவை உற்பத்தியில் மேலும் முதலீட்டுக் கருத்திட்டங்களைக் கவர்வதற்கும் வசதிப்படுத்துவதற்குமான நோக்கத்துக்காக (விசேடமாகப் புடவை உற்பத்தியில் ) சபை வலயத்துக்குத் தேவயைான இடத்திற்கு அப்பாடற்பட்ட உட்கட்டமைப்புகளை நிர்மாணிப்பதற்குச் சபை தீர்மானித்தது.

## சுற்றாடல் முகாமை

திணைக்களத்தின் பிரதான நடவடிக்கைகளின் சுருக்கம் பின்வருமாறு.

- மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சம்மதத்துடன், முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ம் பிரிவின் கீழ் இயங்கும் கருத்திட்டங்களுக்கு வர்த்தகச் சான்றிதழ்களை வழங்குதல். மத்திய சுற்றாடல் அதிகார சபை

  தேசிய சுற்றாடல் (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான நடைமுறை) பிரமாணங்களின் படி சுற்றாடல் விளைவு மதிப்பீட்டுச் செயல்முறை தேவையான கருத்திட்டங்களைப் பொறுத்தவரை இது தொடர்பாக நடைபெற்ற கூட்டங்களில் பங்குபற்றியதுடன் அதன் மூலம் அங்கீகரிப்பு நடைமுறையை வசதிப் படுத்தியது.

  மத்திய சூழல் அதிகார சபை, முதலீட்டுச் சபையினை அவ்வாறு நியமித்தால் கருத்திட்ட அங்கீகரிப்பு முகவராகவும் செயற்படுகின்றது. (கருத்திட்ட அங்கீகார முவர்)

- மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சம்மதத்துடன் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை வழங்கியது.

- ❑ தொலைத் தொடர்புக் கம்பங்களை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்ட இடங்களைப் பொறுத்த வரை சுற்றாடல் விதந்துரைகளைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவுக்கு வழங்குதல்.

- ❑ சுற்றாடல் விடயங்கள் தொடர்பாகப் பொது மக்களால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளை விசாரித்தலும் தேவையான அழுக்கடைதல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஆலோசனை கூறுதல்.

- ❑ ஏற்றுமதி உற்பத்தி வலயங்களின் வெளியிடப்பட்ட கைத்தொழில் கழிவுகளைக் கவனித்தல்.

மேற்குறிப்பிடப்பட்ட பணிகளின் சுருக்கம் பின்வருமாறு

| பணி | எண்ணிக்கை |
|---|---|
| 1. கருத்திட்ட அங்கீகார நிலையமாகச் செயற்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 02 |
| 2. (அ) கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட சுற்றாடல் அனுமதிகள் | 86 |
| (ஆ) விரிவாக்கல்களுக்கும் / இடமாற்றப்பட்டமைக்கும் வழங்கப்பட்ட சுற்றாடல் அனுமதிகள் | 24 |
| 3. வழங்கப்பட்ட/ புதுப்பிக்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிகள் | 614 |
| 4. தொலைத் தொடர்புக் கம்பங்களை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்ட இடங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட சுற்றாடல் விதந்துரைகள் | 497 |
| 5. கவனிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 9 |
| 6. சுற்றாடல் மேற்பார்பை | |
| (அ) கைத்தொழில்களிலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவு மாதிரிகளின் எண்ணிக்கை<br>(ஆ) பொதுக்கழிவு சுத்திகரிக்கப்படும் இயந்திரத்திலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவு மாதிரிகள் | 881 |
| (இ) தண்ணீர் மாதிரிகளின் எண்ணிக்கை | 100 |

- ❑ மேற்குறிப்பிடப்பட்டதற்கு மேலதிகமாக சுற்றாடல் மாற்றம் இயற்கை வளங்கள் அமைச்சுடன் கலந்தாலோசித்தது முதலீட்டுச் சபைக் கருத்திட்டங்கள் சுற்றாடல் பற்றிய சர்வதேச மரபுரிமைகளுக்கமைய இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டமை. இவ்வுறுப்புரிமைகள் தொடர்பாகப் பின்வரும் விடயங்களில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது. Trans boundary movement of hazardous waste ஓசோன் படலக் குறைவுப் பொருட்கள் தொடர்பான Montreal protocol. Persistent organic pollutants பற்றிய stock holm மரபுரிமை.

## பல்வேறு செயற்பாடுகள

- ❑ உத்தேச புத்தளம் முதலீட்டு மேம்பாட்டு வலயம் தொடர்பாகச் சுற்றாடல் விளைவு அளவீட்டு அறிக்கையைத் தயாரிப்பதற்காகக் கைத்தொழில் தொழில் நுட்ப நிலையத்துக்கு உதவியமை.

  இந்தச் சுற்றாடல் விளைவு மதிப்பீட்டு அறிக்கை இப்போது வடமேல் மாகாணப் பிரதேச சபையின் மாகாணச் சுற்றாடல் அதிகார சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் கிடைக்கும் வரை காத்திருக்கின்றோம்.( வடமேல் மாகாண சபை)

- ❑ கட்டுநாயக்க வலயத்தில் அமைக்கப்பட்டுள்ள இரு ஐந்து நடசத்திர ஹோட்டல் கருத்திட்டம் தொடர்பாக 1993- ம் ஆண்டின் 1-ம் இலக்கத் தேசிய சுற்றாடல் (கருத்திட்டல்களுக்கான அங்கீகாரம் பற்றிய நடைமுறை) பிரமாணங்களின் படி முதலீட்டுச் சபையின் கருத்திட்டங்களை அங்கீகரிக்கும் முகவராக மத்திய சுற்றாடல் அதிகார சபை நியமித்துள்ளது. இதன்படி சுற்றாடல் விளைவுகள் மதிப்பீட்டு நடைமுறை பின்பற்றப்பட்டதன் பின்னர் இவ்விரு கருத்திட்டங்களுக்கும் சுற்றாடல் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

- ❑ சுற்றாடல் அமைச்சினால் நடாத்தப்பட்ட "ஹரித லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்ட செயற்பாடுகளில் பங்கேற்றமை

  இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய பச்சை அறிக்கையிலும் முறையில் எனப்படும் கைத்தொழில்களுக்கு அமைச்சு ஒரு புதுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இது கைத்தொழில்களுக்குத் தமது செயற்பாட்டு தொடர்ச்சி பற்றியச் சர்வதேச சமூகத்துக்கு அறிக்கையிடுவதற்காகும். இதன் கீழ் பொருளாதாரமும் சமூகமும் மேற்பார்வை செய்யப்படுகின்றன.

இது சிறந்த ஒரு சந்தைப்படுத்தற் கருவியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களுக்கு இம்முறையில் சேர்ந்து கொள்ள வசதியளிக்கபட்டது.

## பொறியியல் அங்கீகாரங்களும் விசேட கருத்திட்டங்களும்

**பொறியியல் அங்கீகாரங்கள் மற்றும் விசேட கருத்திட்டங்கள் திணைக்களத்தின் பிரதான பொறுப்புகள் பின்வருமாறு**

1) தொடர்பான முதலீட்டாளர்களினால் விரும்பப்பட்டபடி தேவையான போது முதலீட்டுச் சபையின் கீழ் எல்லாக் கருத்திட்டல்களுக்கும் அரச காணிகளை அடையாளம் காண்பதற்கும், பெறுவதற்கும் உதவுதல், எல்லாக் கருத்திட்டங்களுக்கும் வசதியளித்தல்.

2) ஒப்பந்தல்கள் கைச்சாத்திடமுன்னர், முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17-ம் பிரிவின் கீழ் எல்லா முதலீட்டுச்சபைக் கருத்திட்டங்களுக்கும் பொறியியல் இட அங்கீகாரங்களை வழங்குதல்.

3) ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் அமுல்நடத்தப்படும் எல்லா முதலீட்டு சபைக் கருத்திட்டங்களுக்கும் வரியற்ற நிர்மாணப் பொருட்களை வழங்குதல்.

4) முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வழிகாட்டல்களின் படி, முதலீட்டுச் சபைக் கருத்திட்டங்களின் கட்டிடத் திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல்.

5) ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்களின் விசேட கருத்திட்டங்களுக்குப் பொருத்தமான காணித்துண்டுகளை அடையாளங் காணுதல்.

6) வடக்கு கிழக்கு மாகாணங்களின் கருத்திட்டங்களுக்காக அரச காணிகளை ஒதுக்கி, அவற்றுக்காகப் பிரதேசச் செயலாளர்களிடமிருந்து அங்கீகாரங்களைப் பெற்று அமுல் நடத்துதளைத் துரிதப்படுத்துதல்.

### அ) முதலீட்டுச் சபைக் கருத்திட்டங்களுக்குகாக அரச காணிகளைப் பெறுவதற்கு வசதியளித்தல்.

நாடு முழுவதிலும் முதலீட்டுச் சபையின் கீழ் வரும் வெவ்வேறு கருத்திட்டங்களுக்காக முதலீட்டுச் சபைக்குச் சொந்தமான அல்லது அரச காணிகளை உள்ளனவா எனப் பார்ப்பதற்கு இத்திணைக்களம் பொறுப்பானது. இது காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபை, இலங்கைக் காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம்,இலங்கைத் துறைமுக அதிகார சபை, காணிச் சீர்திருத்த ஆணைக் குழு, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், நெற்சந்தைப்படுத்தல் சபை, மகாவலி அதிகார சபை மற்றும் பல்வேறு அரசாங்கத் திணைக்களங்களுடன் கூட்டிணைந்து செயற்படுவதைக் குறிக்கின்றது. காணி அளித்தல் தேவையான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துதல், கருத்திட்டங்களினால் பல்வேறு அமைப்புகளுடன் முன்னோக்கப்படும் நெருக்கடிகளைத் தீர்த்தல் இதனைத் தொடர்ந்து அத்தகைய காணிகளுக்காக காணிக் குத்தகை ஒப்பந்தங்களை நிறைவேற்றுதல் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் பிரகாரம், அரச காணிகள் தொடர்பான பணிகள் பின்வருமாறு விளக்கபடலாம்.

i) காணிக் குத்தகையினைத் துரிதப்படுத்துதல், அத்துடன் முதலீட்டாளர்களினால் எதிர்பார்க்கப்படும் தொடர்பான காணிகளை அடையாளங் காணுதலும், எல்லா நெருக்கடிகளையும் தீர்ப்பதை வசதிப்படுத்துதலும்.

ii) தொடர்பான அரச நிறுவனங்களுடனும்,ஏனைய அமைச்சுகளுடனும்

கூட்டிணைந்து முதலீட்டாளர்களுக்குத் தமது கருத்திட்டங்களைத் தொடருதல் அத்துடன் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் பெறுதல்.

iii) விடயத்தைப் பொறுத்த வரை நாம் சில முதலீட்டுச் சபைக் கருத்திட்டங்களுக்காகக் காணிகளைச் சுவீகரித்தலும் பெற்றுக் கொள்ளுதலும்.

iv) நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் வித்தியாசமான காணிகளைத் தெரிவு செய்தலை இலகுவாக்குதல். ஒரு விசேடமான கணனி மயப்படுத்தப்பட்ட காணி வங்கி எம்மால் பேணப்பட்டு வருகின்றதுடன், தனியார் மற்றும் அரச காணிகள் சரியான நேரத்தில் எம்மால் இற்றைப்படுத்தப்படுகிறது. எந்த உத்தேச முதலீட்டாளரும் எமது முதலீட்டு இணையத்தளத்தில் அதனை அணுக முடியும்.

## 2011ல் அடைந்த முன்னேற்றங்கள்

1. எமது திணைக்களத்தின் காணிப் பிரிவினால் கையாளப்பட்ட "வடக்கின் வசந்தம்" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தின் சில மாவட்டங்களில் அரச/காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுக் காணிகள் குத்தகைக்கு விடப்பட்டதுடன், கீழ் விவரிக்கப்பட்டவாறு சில கருத்திட்டங்கள் செயற்பாடுகளைத் தொடங்கின.

**வவுனியா மாவட்டமும் கிளிநொச்சி மாவட்டமும்**

i. உத்தேச 1000 தொழில் வாய்ப்புகளைக் கொண்ட ஓர் விரிவாக்கக் கருத்திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் Omega Line (Pvt) Ltd., க்கு 22 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டது. இதற்கான முதலீடு அமெரிக்க டொலர் 20 மில்லியன் ஆகும். அந்நிறுவனம் இப்போது தொழிற்சாலைக் கட்டிடப் பணியில் ஈடுப்பட்டுள்ளது.

ii. கிளிநொச்சி மாவட்டத்தில் அறவியல் நகரில் 14 ஏக்கர் அரச காணி ஆயள யுஉவளைந (தனியார்) நிறுவனத்துக்கு 500 உத்தேச தொழில் வாய்ப்புகளுடன் அமெரிக்க டொலர் 04 மில்லியன் முதலீட்டுடன் வழங்கப்பட்டது. இந்நிறுவனம் 2011ல் காணி நிரப்புதலைத் தொடங்கியதுடன் நிர்மாணப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

iii. உத்தேச 600 தொழில் வாய்ப்புகளுடன் மற்றும் அமெரிக்க டொலர் 06 மில்லியன் முதலீட்டுடனும் Mas Intimate (தனியார் நிறுவனத்துக்கு கிளிநொச்சி மாவட்டத்தின் அறவியல் நகரில் ஒரு விரிவாக்கத் திட்டதிற்காக 15 ஏக்கர் அரச காணி ஒதுக்கப்பட்டது.

iv. மன்னார் மாவட்டத்தில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழ் உத்தேச விரிவாக்கக் கருத்திட்டங்களுக்காக Timex Garments (தனியார்) நிறுவனத்துக்கும், Fergasm Garments Industries (தனியார்) நிறுவனத்துக்கும் மன்னார் கைத்தொழில் பேட்டையில் காணிச் சீர்திருத்த ஆணைக் குழுக் காணிகள் வழங்கப்பட்டன.

2. புத்தளம் மாவட்டத்தில் உத்தேச விசேடப் பொருளாதார வலயம்

புத்தளம் கல்லடியில் அடையாளங் காணப்பட்ட 205 ஏக்கர் காணியைப் பெறுவதற்குக் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்துடன் கூட்டிணைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது அரச வழங்குதலின் கீழ் கட்டணமின்றி இலவசமாக முதலீட்டுச் சபைக்கு வழங்கப்படவுள்ளது. உத்தேச காணியில் வசிக்கும் குடும்பங்களை வெளியேற்றி வேறிடங்களுக்கு மாற்றுவதற்கும், மாற்று வீடுகளை வழங்குவதற்கும் புத்தளம் பிரதேசச் செயலாளருடன் பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட்டன. அரச வழங்குதல் மூலமாக இலவசமாகக் காணி வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கும் வரை காத்திருக்கப்படுகின்றது.

3. உத்தேச விசேட ஏற்றுமதி வலயத்தை அம்பாந்தோட்டையில் தாபிப்பது தொடர்பான பணிகள் தொடருகின்றன.

4. முன்னைய 50 மற்றும் 200 மூடப்பட்ட ஆடைத்தொழிற்சாலைகளில் பின்வருவன மீண்டும் செயற்படுத்தப்பட்டன.

- ❑ ஊருகஸ்மங்ஹந்தியவில் முன்னைய Prime Collection (தனியார்) நிறுவனம் (50 ஆடைத்தொழிற்சாலைகள் திட்டம்) DSL Lanka (Pvt) நிறுவனத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டது.
- ❑ கலேவெலயில் மூடப்பட்டிருந்த Heenatigala Garments (தனியார்) நிறுவனம் (200 ஆடைத்தொழிற்சாலைகள் திட்டம்), காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினூடாக CIC Agri Business (தனியார்) நிறுவனத்துக்குக் குத்தகைக்கு விடப்படும் நிலையில் இருந்தது.
- ❑ ரம்புக்கனவில் முன்னைய P.T.K Enterprices தனியார் நிறுவனம் (200 ஆடைத்தொழிற்சாலைகள் திட்டம்) பெரும்பாலும் Brandix Lanka (தனியார்) நிறுவனத்துக்கு குத்தகைக்கு விடப்பட்டது.
- ❑ வீரகெட்டியவில் முன்னைய Redheart Fashion (தனியார்) நிறுவனம் (50 ஆடைத் தொழிற்சாலைகள் திட்டம்) முதலீட்டுச் சபையில்லாத ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்குக் குத்தகைக்கு விடப்பட்டது.

- ❑ இபலோகமவில் Vino Lanka (தனியார்) நிறுவனம் (200 ஆடைத்தொழிற்சாலைகள் திட்டம்) முதலீட்டுச் சபையின் Rainbow Fashion (தனியார்) நிறுவனத்துக்குக் குத்தகைக்கு விடப்பட்டது.

### (ஆ) பொறியியல் அங்கீகாரங்கள்

பொறியியல் அங்கீகாரப் பிரிவு, 17ம் பிரிவின் எந்தவொரு கருத்திட்டத்தினதும் கருத்திட்ட அமுல் நடத்துவதில் முக்கிய பங்குகளைச் செயற்படுத்துகின்றது. அவையாவன இட அங்கீகாரம் வழங்குதல், கட்டிடத்திட்ட அங்கீகாரம் வழங்குதல்,அளவுத் தரங்கள் மற்றும் தரச்சான்றிதழ் வழங்குதல்.

1. இட அங்கீகாரக் கடிதம், 17ம் பிரிவின் கீழ் முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடும் எந்த ஒரு முதலீட்டாளருக்கும் தேவையான முதற்தேவைப்பாடாகும். பொறியியல் அங்கீகாரப் பிரிவு இக்கடிதத்தை உத்தேச கருத்திட்டத்தின் இயக்கம் மற்றும் இடம் பற்றி அறிந்து கொண்டதன் பின்னர் வழங்கப்படும். பொறியியல் அங்கீகாரப் பிரிவு 2011ம் ஆண்டில் 101 இட அங்கீகாரங்களை வழங்கியுள்ளது.
2. முதலீட்டாளர்கள் கட்டிட நிர்மாணம் தொடங்க முன் தனது கட்டிடத்திட்டங்களுக்காக அங்கீகாரம் பெறுதல் வேண்டும் தொடர்பான பிரமாணங்கள் மற்றும் வழிகாட்டல்கள் என்பன திட்டத்துடன் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் அங்கீகாரம் வழங்கப்படும். 2011ம் ஆண்டில் 181 கட்டிடத் திட்ட அங்கீகாரங்களை வழங்கியுள்ளது.
3. 17ம் பிரிவின் கீழான கருத்திட்டங்கள் தமது உத்தேச நிர்மாணப் பணிகளுக்காக வரியற்ற அடிப்படையில் கட்டிடப் பொருட்களை இறக்குமதி செய்ய உரித்துடையவை. தேவையான பொருட்களின் அளவைக் கணக்கிட்டுப் பணிப்பாளருக்கு / திணைக்களத்திற்கு விதந்துரைகளை அனுப்புவது பொறியியல் அங்கீகாரப் பிரிவின் பணியாகும். பொறியியல் அங்கீகாரப்பிரிவு 2011 ம் ஆண்டில் 1024 எண்ணிக்கையான சான்றிதழ்களை வழங்கியுள்ளது.
4. நிர்மாணப்பணிகள் முடிந்ததும் வர்த்தக நடவடிக்கைகள் தொடங்க முன்னர், முதலீட்டாளர்கள் தரச் உறுதிச்சான்றிழ் பெற்றக்கொள்ளுதல் வேண்டும். இத்திணைக்களத்தின் அலுவலர்கள், கட்டிட இடத்தை மேற்பார்வை செய்து கட்டிட வேலைகள் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் படி முடிக்கப்பட்டுள்ளனவா என்றும் வரிச் சலுகை வசதிகளைப் பயன்படுத்தி இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் கட்டிடப் பணிகளுக்காக முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்றும் கவனிப்பார்கள். பொறியியல் அங்கீகாரப் பிரிவு 2011ம் ஆண்டில் 29 தரச்சான்றிதழ்களை வழங்கியுள்ளது.

## கைத்தொழில் உறவுகள்

முதலீட்டுச் சபையின் தைத்தொழில் உறவுகள் திணைக்களம், முதலீட்டு சபை நிறுவனங்களில் உயர்வான திறமை மற்றும் உற்பத்தித் திறனை நிச்சயித்துக் கொள்வதற்குரிய உறுதியான கைத்தொழில் உறவுகளைப் பேணுவதில் மிக பிரதானமான இடத்தை வகிக்கின்றது. கூறப்பட்ட இலக்கை அடைவதற்காகக் கைத்தொழில் உறவுகள் திணைக்களம் பின்வரும் கருத்திட்டங்களைக் கையாழ்கின்றது.

- ❑ முதலீட்டுச் சபையின் எல்லையினுள் வரும் நிறுவனங்களில் தொழில் முகாமை ஒத்துழைப்பையும், தொழில் அமைதி, இணக்கம் மற்றும் உயர் உற்பத்தி என்பவற்றை மேம்படுத்துதல், வசதிப் படுத்துதல் மற்றும் பேணுதல்.
- ❑ தேவையான போது முதலீட்டுச் சபை நிறுவனங்களின் தொழில் வழங்குனர்களுக்கும், ஊழியர்களுக்கும் ஆலோசனைச் சேவைகளையும், வழிகாட்டுதலையும் வழங்குதல்.
- ❑ ஏற்றுமதி மேம்பாட்டு வலயங்களில் செயற்படும் முதலீட்டுச் சபை தொழில் சேவைகள் அலகுகள், தொழில் வங்கி, இணையத்தளம் என்பதனூடாக மனித வலுத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முதலீட்டாளர்களுக்கு உதவுதல் மற்றும் ஆட்சேர்ப்பதற்கான உதவித் திட்டங்களை ஏற்பாடு செய்தலும்.

2011ம் ஆண்டில் கைத்தொழில் உறவுகள் திணைக்களம் பின்வரும் முன்னேற்றங்களை எய்தியது.

- **தொழில் தரங்களைப் பேணுதல்**

முதலீட்டுச் சபையின் வலயங்களிலும், தலைமையகத்திலும் பணியாற்றும் தொழில் உறவுகள் அலுவலர்களினால் முதலீட்டுச் சபை நிறுவனங்களில் காலத்துக்கு காலம் தொழில் மேற்பார்வைப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் நோக்கம் முதலீட்டுச் சபையின் தொழில் தரங்கள் மற்றும் தொழில் உறவுகள் கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் தரங்களைப் பேணுவதுமாகும்.

2011ம் ஆண்டில் முதலீட்டுச் சபையின் வலய நிறுவனங்களிலும் வெளி வலயங்களிலும் 565 முதலீட்டுச் சபை நிறுவனங்களில் தொழில் மேற்பார்வைகள் நடாத்தப்பட்டுள்ளன. மேற் கூறப்பட்ட மேற்பார்வைகளின் போது கண்டுப்பிடிக்கப்பட்ட குறைபாடுகளையு

- **தொழில் முகாமை ஒத்துழைப்பை மேம்படுத்துதல்**

முதலீட்டுச் சபைகளின் நிறுவனங்களில் தொழில் முகாமை ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் ஊழியர் சபைகள் பிரதான கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. தொழிற் சங்கங்கள் ஆர்வமூட்டப்பட்டு அவற்றுடன் கூட்டிணங்கிச் செயற்படுவதுடன் முதலீட்டுச் சபை நிறுவனங்களில் தொழில் முகாமை ஒத்துழைப்பில் ஊழியர்கள் பரந்த அளவில் பங்கேற்பதை மேம்படுத்தும் நோக்கில் ஊழியர் சபைகள் வழிகாட்டப்படுகின்றன.

2011ம் ஆண்டில் தொழில் உறவுகள் திணைக்களம் 141 ஊழியர் சபைகள் அமைப்பதிலும் இயங்குவதிலும் வசதியளித்தது.

தொழிற் சங்க உறுப்பினர்களுக்குத் தொடர்பான சந்திக்க தேவையான தொழிலாளர்களைச் சந்திப்பதற்கு கட்டுநாயக்க, பியகம மற்றும் கொக்கல பிரதான வலயங்களில் வசதிப்படுத்தும் நிலையங்கள் முறை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக முதலீட்டுச் சபை நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் முகாமை அலுவலர்களுக்கும் 2011ம் ஆண்டில் 71 அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. சமூகத் தொடர்புகள் பொதுவாக அறிந்த நிலைமை, தொழில் ஒத்துழைப்பு, முறையான தொழிற் பயிற்சிகள் சுகாதாரமும் பாதுகாப்பும் என்பன தொடர்பான அரசாங்க முகவர்களுடன் இணைந்து இவை நடாத்தப்பட்டுள்ளன.

- **மத்தியஸ்தம் / தொழிற் பிணக்குகளைத் தீர்த்து வைத்தல்**

முதலீட்டுச் சபை நிறுவனங்களில் தொழில் சமாதானத்தையும் அமைதியையும் பேணுவதில் தொழில் உறவுகள் அதிகாரிகள், முதலீட்டு நிறுவனங்களில் ஏற்படும், எந்தவொரு தொழில் பிணக்குகளையும் தீர்த்து வைப்பதில் தலையிட்டுச் சுமுகமாகச் செயற்படுகின்றார்கள். 2011ம் ஆண்டில் 18 தொழில் பிணக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

- **ஆட்சேர்ப்பு உதவித் திட்டம்**

முதலீட்டுச் சபையின் தொழில் வங்கி இணையத்தளம் (www.boijobbank.com) முதலீட்டுச் சபை நிறுவனங்களுக்கும், தொழில் தேடும் இளைஞர்களுக்கும் இடையில் தொடர்பை வசதியாக்குகிறது. இச் சேவை முதலீட்டுச் சபை நிறுவனங்களில் உள்ள தொழில் வாய்ப்புகளைப் பற்றிப் பொது மக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது.

2011ம் ஆண்டு ஏற்றுமதி உற்பத்தி வலயங்களில் தொழிலாளர் சேவைகள் அலகுகளில் 60,463 தொழில் தேடுபவர்கள் பதிவுசெய்யப்பட்டனர். இவர்களில் 59,929 பேர் ஆட்சேர்த்துக்கொள்ளும் நேர்முகப் பரீட்சைகளுக்காக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக தொழில் உறவுகள் திணைக்களமும் ஏனைய தொடர்பான முகவர்கள் நிலையங்களுடன் கூட்டிணைந்து தொழிற் சந்தைகளை ஏற்பாடு செய்வதில் வசதியளிக்கின்றது. இதன் நோக்கம் அதிகமான தொழில் தேடுபவர்களுக்கு, முதலீட்டுச் சபை நிறுவனங்களில் உள்ள தொழில் வாய்ப்புகளைக் கவரச்செய்வதாகும். 2011ம் ஆண்டில் நாடெங்கிலும் 18 தொழிற் சந்தைகள் நடாத்தப்பட்டுள்ளன.

## ஊடகமும் பிரசாரமும்

முதலீட்டுச் சபையின் ஊடகத் திணைக்களம், வெளிவாரியான தொடர்பாடல்களுக்குப் பொறுப்பானது. இலங்கையிலுள்ள முதலீட்டு வாய்ப்புகள் நாட்டின் வர்த்தக நிலைமை, நிறுவனத்தின் வெற்றிகள் என்பன பற்றி, வித்தியாசமான கேட்பவர்களுக்கு பல வகையான ஊடகங்கள் மூலம் அறிவிப்பதற்கு முதலீட்டு சபை 2011ம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொண்டது.

2011ல் முதலீட்டுச் சபை, பல்வேறு வகையான ஊடகங்களைப் பயன்படுத்தி பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டது. மேலும் அச்சிடப்பட்ட மேம்பாட்டு பணிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. வெளியீடுகளில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. பரவலாகக் கேட்பவர்களுக்குத் தமது தகவலை தெரிவிப்பதற்காக முதலீட்டுச் சபையினால் தகவல் திரைப்படங்கள் வெளியிடப்பட்டன.

முதலீட்டுச் சபையின் ஊடகத் திணைக்களத்தின் பிரதான பணிகள் 2011ம் ஆண்டில் பின்வருவனவாகும்

- ஊடக வெளியீடுகள்
- "இலங்கையில் முதலீடு செய்யவும்" எனும் புதிய மேம்பாட்டு வெளியீட்டை விருத்தி செய்து வெளியிட்டமை
- புதினப் பத்திரிகை வெளியீடுகளை விருத்தி செய்து வெளியிட்டமை.

### நிகழ்வுகளை நடத்தியமை :

- மொனராகலை, புத்தளையில் நடைபெற்ற தேசத்தின் மகுடம் தேசிய கண்காட்சியில் பங்குப்பற்றியமை
- முதலீட்டு சபையின் ஊடகத் திணைக்களம், தொழில் உறவுகள் மற்றும் உற்பத்தி மேம்பாட்டு அமைச்சுடன் இணைந்து 10-12-2011ம் ஆண்டில் வெள்ளவாய மகிந்த ராஜபக்ஷ மா நாட்டு மண்டபத்தில் ஒரு தொழிற்சந்தையை ஏற்பாடு செய்தது. இந்த தொழிற்சந்தை, தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சியுடன் இணையாக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. இந்தத் தொழிற்சந்தை, வெள்ளவாய, புத்தள மற்றும் மொனராகலை பிரதேசங்களில் தொழில் இல்லாத இளைஞர்களுக்குப் பொறுத்தமான தொழில் வாய்ப்புகளைத் தேடிக்கொள்வதற்குச் சிறந்த சந்தர்ப்பங்களை உருவாக்கியது. பிரபலமான 26 க்கும் மேற்பட்ட மூலதனச் சபை நிறுவனங்கள், பணியாளர்களைத் தொழிலில் அமர்த்துவதற்கு எதிர்பார்த்திருந்ததுடன், அத்துடன் சுமார் 1000 தொழில் தேடுவோர்க்கு, கம்பெனிப் பிரதி நிதிகளைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. இது உண்மையில் பிரதேசத்தின் இளைஞர்களுக்குப் புது அனுபவத்தை வழங்கியது. இது தொடர்பாக ஊடகத் திணைக்களம், பத்திரிகை விளம்பரங்கள், சுலோகங்கள், துண்டுப் பிரசுரங்கள், நேரடித் தபால் போன்றன நிகழ்வைப் பற்றிப் பகிரங்கப் படுத்துவதற்குப் பயன்படுத்தியுள்ளது. இக்கருத்திட்டம் தொடர்பாக, ஊடகத் திணைக்களம் தொழில் உறவுகள் திணைக்களத்துடன் நெருக்கமாகச் செயலாற்றியது.

### முதலீட்டுச் சபை இணையத்தளத்தின் முகாமை :

மறுசீரமைக்கப்பட்ட முதலீட்டுச் சபையின் இணையத்தளம் www.investsrilanka.com 2011ம் ஆண்டு 7 இலட்சத்துக்கும் அதிகமான அழைப்புகளைப் பெற்றது.

## நிருவாகம்

நிருவாகத் திணைக்களம், முதலீட்டுச் சபையின் சுமுகமான செயற்பாட்டுக்கு அடிப்படை உதவியை வழங்குகிறது. இது தனது வாடிக்கையாளர் திணைக்களங்களுக்கும் 14 வலய அலுவலகங்களுக்கும் அதியுயர் சேவைகளை வழங்குகின்றது. இத்திணைக்களம், ஏனைய திணைக்களங்களிலும் வலயங்களிலும் வேலை எல்லைகளை அடைவதற்கு வசதியாளர் எனும் பதிவியை வகிக்கின்றது. போக்குவரத்து பொருட்கள், உட்கட்டமைப்பு வசதிகள் தேவைப்பாடுகள் என்பன நேரத்துக்கு வழங்கப்படுகின்றன.

**நிருவாகத்திணைக்களம் பின்வரும் உப அலகுகள் அடங்கியுள்ளன**

- களஞ்சியமும் விநியோக அலகும்
- போக்குவரத்து அலகு
- கட்டிடப் பேணுதல்
- பொது நிருவாகம்
- தபாற் பிரிவு

### 2011- ம் ஆண்டில் அடையைப்பெற்ற முன்னேற்றங்கள் - நிருவாகத் திணைக்களம்

2011ம் ஆண்டில், நிருவாகத் திணைக்களம், முதலீட்டுச் சபையின் திணைக்களங்களை மீளமைப்புச் செய்வதில் காத்திரமாக ஈடுபட்டது. சேர் பாரொன் ஜயதிலக மாவத்தையில் உள்ள முதலீட்டுச் சபைக் கட்டிடத்தின் 5-ம் மாடியை, வெளிநாட்டமைச்சுக்குக் குத்தகைக்கு விடுவதன் மூலம், மேலதிக வருமானத்தை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

முதலீட்டுச் சபையின் பாதைக்கு பயனற்ற வாகனங்களை அடையாளங் கண்டு எதிர்காலத்தில் அவற்றை ஒதுக்கிவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**வழங்குதல் அலகு**

வழங்குதல் அலகினால் 2011-ம் ஆண்டில் கையாளப்பட்ட பொருட்களினதும் சேவைகளினதும் பெறுமதி ரூபா 73,290,089.24 ஆகும்.

Asyworld முறையினை அமுல் நடத்துவதற்குத் தேவையான156 கணனிகள் மற்றும் 156 UPS என்பன வெற்றிகரமாக முடிக்கப்பட்டதுடன், பயன்படுத்தும் திணைக்களத்தின் தேவைப்படி நிறைவேற்றப்பட்டது.

## மனித வளங்கள் முகாமை

### ஆளணிகள் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள்

சபையின் மொத்த மானிட வளங்களை முகாமை செய்யும் பொறுப்பு உள்ள பிரதான திணைக்களம் ஆளணிகள் திணைக்களமாகும். அதன் பிரதான பணிகள் பின்வருமாறு

- **மனித வளத்திட்டமிடுதல்**
  - தற்கால மற்றும் எதிர்கால மனித வளங்கள் தேவைப்பாடுகளை மதிப்பிடுதல்
  - மேற்குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளைத் திருப்தி செய்வதற்காக ஆளெடுப்பு மற்றும் தெரிவு செய்தல் நடடிவக்கைகளை அமுல் நடத்துதல்.
- **செயற்பாட்டு மதிப்பீடு**
  - ஆண்டுதோறும் ஊழியர்களின் செயற்பாடுகள் மீள்பார்வை செய்யப்பட்டு, மதிப்பிடப்படும்
  - ஊழியர்களின் செயற்பாட்டின் மீது ஆண்டுச் சம்பள உயர்வுகள் வழங்கப்படும்.
  - ஊழியர்களின் செயற்பாடுகள், தகைமைகள் மற்றும் அனுபவத்தின் மீது அவர்களை உயர் தரங்களுக்குப் பதவியேற்றச் செய்தல்.
- **ஒழுக்கம் பேணுதல்**
  - ஊழியர்களின் ஒழுக்கத்தைப் பேணுவதற்கும் மேம்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
  - தொழில் நியாய மன்றுகள், தொழிற் திணைக்களம், மனித உரிமைகள் மன்று, மற்றும் நீதி மன்றங்கள் போன்ற வெளி நிறுவனங்களில் தொழிலாளர் பிரச்சினைகளைக் கையாளுதல்
- **வரவு மற்றும் விடுமுறைகளைப் பேணுதல்**
- **ஊழியர் நலன்புரி சேவைகள்**
  - பல்வேறு வகையான கடன் திட்டங்களை அமுல் நடத்துதல், முழுமையான ஆயுள் மற்றும் இயலாமைக் காப்புறுதி, மருத்துவ வசதிகள், மரண உதவித் திட்டங்கள் அலுவலகப் பேரூந்துப் போக்கு வரத்துச் சேவைகள் போக்குவரத்து உதவு நிதி, வரவு ஊக்கத்திட்டங்கள் போன்றன.

**அடைவுகள் / செயற்பாடு** 2011

- பயிற்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பு ஊழியர் பயன்கள் அமைப்பு – புதிய மானிட வள முறை (HCM மானிட மூலதன முகாமை) என்பன அமுல் நடத்தப்பட்டன. செயற்திட்ட முகாமை அமைப்பு இறுதிக்கட்டம் வரை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.
- மூன்று (03) நிறைவேற்றுனர்கள், ஆறு (06) எழுதுவினைஞர்கள் மற்றும் தொடர்பான ஊழியர்கள், மற்றும் எட்டுப் (08) பொதுச் சேவை ஊழியர்கள் சபையின் சேவையில் புதிதாகச் சேர்க்கப்படமை.
- பதின்மூன்று (13) அமைய ஊழியர்கள், ஒரு (01) ஒப்பந்த ஊழியரும் ஒரு (01) முகாமைப் பயிற்சியாளர், நிரந்தர ஊழியர் சேவைக்குச் சேர்க்கப்பட்டனர்.
- இருபத்திரண்டு (22) நிறைவேற்றுனர்கள் மற்றும் எட்டு (08) எழுதுவினைஞர்கள் மற்றும் தொடர்பான பணியாளர்கள் உயர் தரங்களுக்குப் பதவியுயர்த்தப்பட்டனர்.
- முப்பத்து மூன்று (33) ஆட்கள் நிதியும் கணக்கும், மானிட வள முகாமை, தகவல் தொழில் நுட்பம், கனணி பிரயோகம், சுருக்கெழுத்து, செயலாளர் பயிற்சி, தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் கணக்காய்வு எனும் துறைகளில் தொழிலினுள் பயிற்சி அளிக்கப்பட்டனர்.
- 1094 ஊழியர்களுக்கு மருந்துவ வசதிகள் அளிக்கப்பட்டன, மரண உதவித் திட்டத்தின் கீழ் 96 ஊழியர்கள் பயன்பெற்றன. 912 சம்பளக் கடன்கள் வழங்கப்பட்டன 150 வாகனக் கடன்கள், 55 வீடமைப்புக் கடன்கள் (வட்டி மீளக் கொடுக்கப்பட்டமை) 34 துவிச்சக்கர வண்டிக் கடன்கள், 875 ஊழியர்களுக்குப் பெருநாள் / விசேட முற்பணங்கள் வழங்கப்பட்டன.

  98 ஊழியர்களுக்குப் பெருநாள் வவுச்சர்கள் வழங்கப்பட்டன. மற்றும் 2011ல் அலுவலகப் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படுவதற்காக 19 பேரூந்து வண்டிகள் நலன்கள் சேவைகளுக்காக ஒதுக்கப்பட்டன.

**உயர்தொழில் ரீதியாக தகுதி பெற்ற பதவியாளர்கள்**

| | |
|---|---|
| உளவியல் கலா நிதி | 01 |
| மாஸ்டர் பட்டம் பெற்றோர் | 51 |
| சட்டத்தரணிகள் | 12 |
| கணக்கு உயர் ஊழியர் | 04 |
| பொறியியல் உயர் ஊழியர் | 11 |
| நகரத் திட்டமிடுபவர் | 01 |
| மானிட வளங்கள், கண்ணியத் தொழில் ஊழியர் | 03 |
| தகவல் தொழிநுட்ப கண்ணிய ஊழியர் | 04 |
| பட்டதாரிகள் | 232 |
| | 319 |

**மொத்த ஊழியர்கள**

31-12-2011 முதலீட்டுச் சபையின் ஊழியர் தொகை 1099 ஆகும்.

**முதலீட்டுச் சபை ஊழியர் சுருக்கம்** 2011




**பிரதான செயற்பாட்டுப் பகுதிகளின் ஒப்பிடு** 2010-2011



**திணைக்களப் பிரதான விடயங்கள்**

- மானிட மூலதன முகாமையில் பயிற்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பு உருவாக்கப்பட்டு, அமுல் நடாத்தப்பட்டது.

**நிகவுழ்கள்**

- அமுல் நடாத்துவதற்காக ஓர் ஆண்டு பயிற்சித் திட்டம் தயாரிக்கப்பட்டமை
- உள்ளகப் பயற்சித் திட்டங்கள், திட்ட அமைப்பும் நடாத்தப்பட்டமை
- பதவியாளர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்படுவதற்காக ஏனைய பயிற்சி நிறுவனங்களுடனும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டமை
- அமைச்சு மற்றும் வெளி வளங்கள் திணைக்களம் மற்றும் ஏனைய வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து கிடைத்த வாய்புகளுக்காக அலுவர்களைப் பெயர் குறிப்பது தொடர்பான பணிகளுக்காக இணைந்து செயற்படுத்துதல்
- உள்ளூர் மற்றும் வெளி முகவர் நிலையங்களினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அலுவலர்களின் பெயர் குறித்தல்
- பயிற்சித் திட்டத்தில் உட்படுத்தப்டுவதற்காக அலுவலர்களின் பயிற்சித் தேவைகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்காகப் பயிற்சி தேவையான பகுப்பாய்வுகளை நடாத்துதல்
- முகாமையினால் குறிக்கப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி பற்றிய ஏனைய பிற விடயங்கள

**2011ம் ஆண்டில் பதவியாளர் பயிற்சி சுருக்கம்**

| | நிறைவேற்றுனர்கள | எழுதுவினைஞர் மற்றும் தொடர்பான | சிற்றூழியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| வெளிநாட்டுப் பயிற்சி வாய்புகள் | 14 | - | - | 14 |
| முதுமாணி நிகழ்ச்சி திட்டங்கள் | 2 | - | - | 2 |
| உள்ளூர் பயிற்சி (மென்மையான திறன்கள்) | 286 | 75 | 2 | 363 |
| உள்ளாந்த பயிற்சி திட்டங்கள் | 271 | 173 | 23 | 467 |
| மொத்தம் | 573 | 248 | 25 | 846 |

**அடையப் பெற்றவை**

- மானிட மூலதன முகாமை பற்றிய பயிற்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பு உருவாக்கப்பட்டு அமுல் நடாத்தப்பட்டது.
- சபையின் 467 அலுவலர்களுக்காக 2011ம் ஆண்டில் ஏழு உள்ளகப் பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- முதலீட்டுச் சபை அலுவலர்களுக்காக 14 வெளிநாட்டு பயிற்சி வகுப்புகள் வழங்கப்பட்டன.
- 2011ம் ஆண்டில் ரூபா 5,907,615.00 செலவிடப்பட்டது.

## 2011ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட புது ஆட்சேர்ப்புகள்

| பதவி | சேர்க்கப்பட்ட |
|---|---|
| **நிறைவேற்று அலுவலர்** | **ஊழியர்களின் எண்ணிக்கை** |
| உதவிப் பணிப்பாளர் (1 நிரந்தரம் 1 ஒப்பந்தம்) | 02 |
| கூட்டிணைப்பாளர் (ஒப்பந்தம்) | 01 |
| மொத்தப் புதுச்சேர்ப்புகள் - நிறைவேற்றுனர்கள் | 03 |
| **எழுது விளைஞர்களும், தொடர்பான பதவியாளர்களும்** | |
| முகாமை உதவியாளர் (05 நிரந்தரம் 1 ஒப்பந்தம்) | 06 |
| மொத்தம் புது ஆட்சேர்ப்புகள் - எழுது விளைஞர்களும் தொடர்பானவர்களும். | 06 |
| **பொதுச் சேவை பதவியாளர்கள்** | |
| சாரதி (நிரந்தரம் 01 அமய 01 | 02 |
| மின் தொழிலாளர் அமய 01 | 01 |
| அலுவலக உதவியாளர்கள் (ஒப்பந்தம்) | 02 |
| தொழிலாளர் (அமய) | 03 |
| மொத்தப் புதுச் சேர்ப்பு பொதுச் சேவை | 08 |
| 2010 மொத்தம் புதுச் சேர்ப்புகள் | 17 |



## இலங்கை முதலீட்டுச் சபை - நிறுவன அமைப்பு (31-122011)




✷ இப்பதவிகள் விரைவில் அகற்றப்படும்.

**பதவிகள்**

| | |
|---|---|
| ப. நா | பணிப்பாளர் நாயகம் |
| பி. ப. நா | பிரதிப் பணிப்பாளர் நாயகம் |
| நி. பு | நிர்வாகப் பணிப்பாளர் |
| ப | பணிப்பாளர் |
| மு. மு | முத்த முகாமையாளர் |

**இடங்கள்**

| | |
|---|---|
| வா.பொ.இ | வான் பொதி இடம் |
| பி. ஏ. வ | பியகம ஏற்றுமதி வலயம் |
| ம.பி.அ.க.மு.வ | மத்திய பிரதேச அலுவலகமும் கண்டி முதலீட்டு வலயமும் |
| ச.ச | சரக்கு சரிபார்க்குமிடம் |
| ஹொ. ஏ. வ | ஹொரண ஏற்றுமதி வலயம் |
| யா.பி.அ | யாழ்ப்பாணம் பிரதேச அலுவலகம் |
| க.ஏ.வ | கட்டுநாயக்க ஏற்றுமதி வலயம் |
| ம.ஏ.வ | மல்வத்த ஏற்றுமதி வலயம் |
| மீ. ஏ. வ | மீரிகம ஏற்றுமதி வலயம் |
| மா.ஏ.வ | மாவத்தகம ஏற்றுமதி வலயம் |
| வ.பி.அ | வடமேல் பிரதேச அலுவலகம் |
| பொ. ஏ. வ | பொல்காவெல ஏற்றுமதி வலயம் |
| சே.பா.ஜ.மா.அ | சேர் பாரோன் ஜயதிலக்க மாவத்த அலுவலகம் |
| சீ. ஏ. வ | சீத்தாவக ஏற்றுமதி வலயம் |
| தெ. பி. ஆல. கோ. ஏ. வ | தென் பிராந்திய அலுவலகமும் கொக்கல ஏற்றுமதி வலயமும் |
| வ. ஏ. வ | வத்துபிட்டிவல ஏற்றுமதி வலயம் |
| உ.வ.நி.அ | உலக வர்த்தக நிலைய அலுவலகம் |

[dashed box] - வெற்றிடம்

## ஆராய்ச்சியும் கொள்கைக் கடைப்பிடிப்பும்

ஆராயச்சி மற்றும் கொள்கைக் கடைப்பிடிப்புத் திணைக்களம் இலங்கை முதலீட்டுச் சபைக்கு முதலீடு தொடர்பான விடயங்களில் மற்றும் கொள்கைக் கடைப்பிடிப்பு விடயமாக ஆராய்ச்சி பகுப்பாய்வு சேவைகளைப் புரிகின்றது. இதன் நோக்கம் முதலீடுகளை மேம் படுத்துவதாகும். சா்வதேசப் போட்டியாளா்களுடன் இலங்கை தொடா்பாகப் பிரசாரப் படுத்துவதற்கு ஆராய்ச்சிகளை நடாத்துகின்றது. கொள்கை கடைப்பிடிப்புப் பணியில் அது தொடா்பான தேசிய மற்றும் சா்வதேச நிறுவனங்களுடன் மிக நெருக்கமான ஒத்துழைப்புடன் செயற்படுகின்றது. திணைக்களத்திற்கு முழு நேர உயா் தொழில் பதவியாளா்கள் மற்றும், உதவிச் சேவைகள் உள்ளன. சில சமயங்களில் அது இருபக்க மற்றும் பிராந்திய முதலீட்டு ஒப்பந்தங்கள் மற்றும் உற்பத்தி வலயங்களைச் செழிப்பாக்குவது தொடா்பாக வெளியிடுகிறது. வளவாளா்களின் நிபுணத்துவத்தை நாடும், இதன் நோக்கம் தொழில் நுட்ப ஒத்துழைப்பைப் பெறுவதாகும்.

இவ்வாண்டில் ஆராய்ச்சி மற்றும் கொள்கைக் கடைப்பிடிப்புத் திணைக்களம் 30 உள்ளக மற்றும் வெளியக் கற்கைகளை நிறைவேற்ற முடிந்தது. அவற்றில் பல, நாட்டின் சூழ் நிலையினை முன்னேற்றுவதிலும் துறை சாா்ந்த மற்றும் பிராந்திய வளம் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளது.

எமது பிரதான கவனம் இறக்குமதிக்குப் பதிலான தொழில்களில் கொள்கைப் பத்திரங்களைத் தயாரிப்பதில் ஈடுப்படுவதற்கும் மருந்து வகை, சீமெந்து, கோதுமை மாவு மற்றும் உல்லாச பிரயாணம், உணவு பதனிடல் உருக்கு புதுப்படுத்தும் சக்தி தனியாா் உயா்கல்வி, சீனி, மற்றும் கைத்தொழில் துறைச் செலவு, வரியறவிடுதல் மற்றும் கட்டண வரியமைப்பு, போன்ற விசேட துறைகளுமாகும். இத் துறைகளின் குறிப்பான தேவைகளைத் தீா்ப்பதற்கு பொருத்தமான கொள்கைச் சீா்திருத்தங்கள் அறிமுகப்படுத்துவதன் மூலம் உடன்பாடான பயன்கள் அடையப் பெற முடியும் என்பதை மேற்கொள்ளப்பட்ட கற்கைகள் வெளிக்காட்டியுள்ளன. புதிய சூதாட்டச் சட்டங்கள் தொடா்பாக ஓா் ஆராய்ச்சிப் பத்திரத்தை இலங்கையின் சூதாட்டச் சட்டங்கள் பற்றி நாம் சமா்ப்பித்துள்ளோம்.

செயற்திட்டங்களையும் கொள்கை மாற்றங்களையும் மேம்படுத்துவதற்காகப் பல்வேறு கட்டங்களில் அதிகாரிகளுடனும், முகவா்களுடனும் தொடா்புகளைத் தாபிக்கவும் தொடரவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏனையவற்றுக்கு மத்தியில் இந்நடவடிக்கைகள் பின்வருனவற்றை உள்ளடக்கியிருந்தன. பேச்சுவாா்த்தைகளை நடத்துதல், பல்வேறு நிலைகளில் உள்ள தீா்மானம் மேற்கொள்பவா்களுக்குச் சமா்ப்பிப்புகள் வழங்குதல். அரசாங்க மற்றும் ஏனைய தொடா்பான நிறுவனங்களுக்கிடையில் கூட்டிணைக்கப்பட்ட முயற்சிகள் கொள்கைச் சீா்திருத்தங்கள் தொடா்பாக அவா்களது கவனத்தைக் கோருதல் கொள்கை மற்றும் நிகழ்ச்சித் திட்ட அபிவிருத்தி தொடா்பாக பின்தொடா் நடவடிக்கைகள் தொடருகின்றன.

2011-ம் ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் கொள்கைக் கடைப்பிடிப்புத் திணைக்களம் கட்டாா் மற்றும் வங்களாதேசம் போன்ற நாடுகளுடன் இருபக்க முதலீட்டு மேம்பாட்டு மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்களை வரைவதிலும், பேச்சுவாா்த்தை நடத்துவதிலும் ஈடுபட்டுள்ளது. தொடா்பான முகவா்களுடன் முதலீட்டு மேம்பாட்டு உடன்படிக்கைகள் தொடா்பாகப் புரிந்துணா்வு உடன் படிக்கைகள் வரையப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஆராய்ச்சி மற்றும், கொள்கைக் கடைப்பிடிப்புத் திணைக்களம் ஆராய்ச்சிக் குழுவின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது அதன் கவனம் உட்செலுத்தப் படுவனவற்றை விட விளைவுகளைப் பற்றியே செலுத்தப்படுகின்றது அத்துடன் நல்ல ஒரு குழுவாகப் பணியாற்றுவதில் தலையீடுகளுக்கு இடம் வைப்பதில்லை.

## தகவல் தொழில் நுட்பம்

1. **திணைக்களத்தின் பணிகளின் சுருக்கம்**

- முதலீட்டுச் சபைக்குத் தகவல் தொழில் நுட்பம் தொடா்பாக அடையாளங்கண்டு மதிப்பீடு செய்து நடைமுறைப்படுத்துவதற்கு ஆலோசனையும் தொழில் நுட்ப உதவியும் வழங்குதல்
- முதலீட்டுச் சபையின் மூலத்தைப் பற்றித் திட்டமிடுதல், விதந்துரைத்தல், கூட்டிணைத்தல், தொடங்குதல் மற்றும் பேணுதல்
- கூட்டுதாபனப் பணிகள் மற்றும் தரவு வரிமாற்ற வசதிகளை விரிவுபடுத்துதலும், முகாமைப்படுத்தலும்.
- கூட்டுத்தாபனப் பணிகள் மற்றும் தரவு பரிமாற்ற வசதிகளை விரிவுபடுத்துதலும்,

முகாமைப்படுத்துதலும் முதலீட்டுச் சபைக்குத் தேவையான மென்பொருள் பிரயோக முறைகளை அமைத்து விருத்தி செய்து அமுல் நடத்திப் பேணிவருதல்

- கனப்பொருட்கள்,மென்பொருட்கள்,தொடர்பாடல்,வலயப்பணிகள்,மின்னஞ்சல், வைரஸ் பிரச்சினைகள் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதில் பாவனையாளர்களுக்கு உதவுதல்.
- வர்த்தகப் பொறியியல் முயற்சிகளில் தகவல் தொழில் நுட்ப்பத்தின் பயன்பாட்டில் ஏனைய திணைக்களங்களுக்கு உதவுதல்.
- கூட்டுத்தாபனத் தரவு அகராதி, தரவு மையம் மற்றும் தொடர்பான முறை ஆவணப்படுத்துதல் என்பனவற்றை விருத்தி செய்து, பேணுதல்.

## 2. 2011 முடிக்கப்பட்ட கருத்திட்டங்கள்

### 2.1 2011 ம் ஆண்டில் தகவல் தொழில் நுட்ப உட்கட்டமைப்பை விரிவாக்கியமை

- உலக வர்த்தக நிலைய அலுவலகத்தின் 19ம் 24ம் மற்றும் 26-ம் கட்டத்தின் வலையமைப்புகள் புதுத் துறைகளின் தேவைகளைச் சமாளிப்பதற்காகப் புதுத் தொழில் நுட்பத்துடன் மீளவமைக்கப்பட்டுத் தொடங்கப்பட்டது.
- ACV அலுவலகத்துக்கு வழங்கப்பட்ட குத்தகை விடயத்தின் பாகமாக 64 KBPS இலிருந்து 128 KBPS க்கு அதிகரிக்கப்பட்டது. நோக்கம் தொடர்பான பிரயோகங்களின் செயற்பாட்டை மேம்படுத்துவதாகும்.
- 36 புதிய பயன்பாட்டாளர் கணக்குகளை உருவாக்குவதன் மூலம் மின்னஞ்சல் பாவனையாளர்களின் எண்ணிக்கை 502 ஆக அதிகரிக்கப்பட்டது
- முதலீட்டுச்சபையில் இப்போது இருக்கக்கூடிய சம்பள முறையினை அதன் செயற்பாட்டை மேம்படுத்துவதற்காகவும், புதிய சம்பள முறையினை அமுல் நடத்துவதற்காகவும் ஒரு புதுச் சேவை பெறப்பட்டது.
- 04 உயர் ரகக் கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டு, வலயப் பிரயோகம் மற்றும் DNS, SQL மின்னஞசல் சேவைகளின் சேமிப்புத் தீர்புகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது.
- 138 புதிய தனிக் கணனிகள், 04 மடிக்கணனிகள் 57 புதிய அச்சுப் பொறிகள் வாங்கப்பட்டன. இதன் நோக்கம் ஒரு புதிய வேலை நிலைமையினையும் விரிவுப்படுத்தப்பட்ட தகவல் தொழில் நுட்ப உட்கட்டமைப்பையும் நிறுவனத்தினுள் பாவிப்பாளர்களுக்கு வழங்குவதாகும்.
- மிகப் புதிய தொழில் நுட்ப்பத்தின் தொடர்பாக 08 அலுவலர்களின் அறிவையும், திறன்களையும் விரிபுபடுத்துவதற்காக உள்ளூர்ப் பயிற்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

### 2.2 2011ல் மென்பொருள் அபிவிருத்தி

- கருத்திட்ட முகாமைத்தகவல் முறைமை (Mis) யுடன் தொடர்புபட்ட தரவுப் பிடிப்பு அமைப்புகள் விரிவுபடுத்தப்பட்டன. இதன் நோக்கம் மாதாந்தத் தொழில் தரவுகள் மற்றும் ஆண்டிற்கு இரு முறைச் செயற்பாடுகளை (முதலீட்டுச் சபைக் கருத்திட்டங்களின்) துரிதப்படுத்துவதாகும்.
- புதுத் துறைக் கருத்துகளை உட்படுத்துவதற்காக MIS மற்றும் கருத்திட்டம் தொடர்பான முறைமைகள் திருத்தப்பட்டன.
- புதிய அம்சங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் இருக்கக்கூடிய நுழையும் அனுமதி வழங்கும் திட்டம் (இணையத்தளம் பிரயோகமும், பின் அலுவலக முறையும்) மேன்மைப்படுத்தப்பட்டது.
- முதலீட்டாளர் சேவைகள் திணைக்களத்தின் உப ஒப்பந்த மேற்பார்வை முறை விருத்தி செய்யப்பட்டு தொடர்பான சேவை நிலையங்களில் அமுல்நடத்தப்பட்டது.
- பிரதான அபிவிருத்திக் கருத்திட்டங்களின் உப ஒப்பந்தகாரர்களை உட்படுத்திக் கொள்வதற்காக முதலீட்டாளர் சேவைகள் திணைக்களத்தைப் பயன்படுத்தி TIN முறைமையினை விரிவாக்கியமை.

## உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வின் பிரதான கவனம் முதலீட்டுச் சபையின் பணிகளுக்குப் பெறுமதி சேர்த்து அதன் நடவடிக்கைகளை மேம்படுத்தி நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதாகும். உள்ளகக்கட்டுப்பாடுகள் மற்றும் நிறுவன முகாமையின் செயற்பாட்டுத்தன்மையை முறையான ஒழுக்கமான அடையாள மூலமாக மதிப்பிட்டு மேம்படுத்துவதாகும்.

நிறுவனத்தின் முழுமையான முறையில் கவரும் வகையில் காலத்துக்காலம் கணக்காய்வுகள், உள்ளகக் கட்டுப்பாடுகள், கொள்கைகள், நடைமுறைகள், சட்டவிதித் தேவைப்பாடுகள் என்பவற்றை நிறுவனச் செயற்பாடுகளின் ஆபத்து வெளிப்படுத்தலைக் குறைக்கும் நோக்குடன் இவை மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் உள்ளகக்கணக்காய்வுத் திணைக்களம் சர்வதேச தர அமைப்பின் 9001 -2008 தர முகாமைத்திட்ட முறைப்படி (QMS) இலங்கை முதலீட்டுச் சபையின் கணக்காய்வு முகாமையினை பிரதானமாக செயற்படுத்துகிறது. சர்வதேச தரத்திட்டத்தின் “முகாமை பிரதிநிதித்துவப் பதவியை வகிக்கும் உள்ளக கணக்காய்வு தரக்கட்டுப்பாட்டுக்குத் தேவையான செயற்திட்டத்தைத் தாபித்தது. நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்பாட்டைப் பற்றியும் அபிவிருத்திப் பற்றியும் உயர் முகாமைக்கு அறிக்கை விடுக்கின்றது. இலங்கைத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட வருடாந்த மேற்பார்வை கணக்காய்வின் பின்னர் தரமுகாமைத்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதிவாளரான உள்ளகக் கணக்காய்வு பிரிவின் தரக்கட்டுப்பாடுகளை நிச்சயித்துக் கொள்வதற்காக உயர் தர கண்காய்வை நடத்தியது.

இதற்கு மேலதிகமாகப் பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரைகளின் படி உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் பதிவேடுகள் முகாமைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அது தொடர்ச்சியாக நடத்தப்படுவதுடன் அங்கீகரிக்கப்பட்ட வேலைத் திட்டத்தின் எல்லைகளை அடைவதற்காகத் தொடர்ச்சியாகச் செயற்படுத்தப்படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளைப் புரியும் அதே வேளை, உள்ளக் கணக்காய்வுப் பிரிவு தலைவர் பணிப்பாளர் நாயகத்துக்கு நேரடியாக அறிக்கை செய்வதன் மூலமும் கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகளுடன் தொடர்ச்சியாகக் கூட்டிணைப்புச் செய்ததன் மூலமும் அதன் தரத்தைப் பேணியது.

## நிதிச் செயற்பாடு

### நிதி மேல் நோக்கு - 2011

| | ரூபா மில்லியன் |
|---|---|
| இயக்க வருமானம் | 2148.82 |
| இயக்க செலவு | 1998.83 |
| வரிக்கு முன் இயக்கச்செயற்பாடுகளிலிருந்து மேலதிகம் | 149.99 |
| வட்டி வருமானம் மீதான வரி | 32.94 |
| வரிக்குபின் இயக்கச் செயற்பாடுகளில் மிச்சம் | 117.05 |
| இயக்கமல்லாச் செலவு | (33.45) |
| **தேறிய மிச்சம்** | **83.60** |

2010 இலிருந்து 2011 வரை இயக்க வருமானம் 2,148.82 மில்லியனிலிருந்து 0.67% இனால் அதிகரித்துள்ளது.

இயக்கச் செலவு 2010 ஐ விட ரூபா 1998.83 மில்லியன் வரை 2.41% இனால் அதிகரித்துள்ளது.

2011 க்காக ரூபா 149.99 மில்லியன் இயக்க அதிகரிப்பு பதிவு செய்யபட்டுள்ளது. இது 2010 ஐ விட 17.90 % குறைவானது.

31.12.2011 –ல் முடிவடைந்த ஆண்டுக்கான ரூபா 86.60 மில்லியன் தேறிய மிகுதி உள்ளது. இது 2010 இலிருந்து 41.41% குறைவாகி 2010 உடன் ஒப்பிடும் போது தேறிய மிகுதி ரூபா 59.07 மில்லியனிலிருந்து குறைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட குறைவுக்குக் காரணம் Dutch Lanka Accessory (சீபரி லங்கா நிறுவனத்துக்குச் செலுத்தப்பட்ட வழக்குத் தீர்ப்பாகும்)

## இயக்க வருமானம்

நில வாடகை, வருடாந்தக் கட்டணங்கள் இறக்குமதி / ஏற்றுமதிச் சேவைகள் நீர் விநியோகம், நுழைவுச் சீட்டுக்கள் என்பனவற்றின் வருமானத்திலிருந்து சிறு அதிகரிப்புக் காணப்பட்டது. அத்துடன் 2010 இலிருந்து 2011 வரை காணிப் பெறுமதியில் 13 % அதிகரிப்புக் காணப்பட்டது.

காணிப் பெறுமதியில் 2011- ம் ஆண்டில் அதிகரிப்பு ஏற்படக் காரணம் கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் பியகம ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம், KEPZ, BEPZ, KIP, MEPP மற்றும் N.I.P யில் காணி குத்தகைக்கு விடப்பட்டமையாகும்.

ஆகக் கூடிய உதவு தொகை ரூபா 580 மில்லியன் இறக்குமதி / ஏற்றுமதிச் சேவைக் கட்டணங்களான 27 % இயக்க வருமானமாகும்.

2010 **தொடக்கம்** 2011 **வரை பின்வரும் வருமான மூலங்கள் குறைந்துள்ளன.**

| | குறைவின் % |
|---|---|
| வட்டி வருமானம் | 6 |
| ஒப்பந்த/ செயற்படுத்தும் கட்டணம் | 42 |

2010 உடன் ஒப்பிடும் போது வட்டி வருமானம் குறைய காரணம் முதலீடுகளில் ஏற்பட்ட குறைவாகும்.

ஒப்பந்த/ செய்படுத்தல் கட்டணத்தில் குறைவு ஏற்பட காரணம் 2011 ம் ஆண்டில் அமெரிக்க டொலர் 25 மில்லியனுக்கு மேற்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பாக பொதுவான விண்ணப்ப கட்டணமாக அறவிடப்படும் அமெரிக்க டொலர் 155 ஏற்படுத்தப்பட்ட கொள்கை மாற்றமாகும்.

2007 தொடக்கம் 2011 வரை கடந்த ஐந்து ஆண்டுகளில் இயக்க வருமானம் அதிகரித்துள்ளது.






## இயக்கச் செலவு

2010 ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ல் இயக்கச் செலவு 2.41 % அதிகரித்துள்ளது. இலங்கை முதலீட்டுச் சபை 2011 ம் மதிப்பீட்டு ஆண்டில் வட்டி வருமானத்தில் வருமான வரியாக ரூபா 32.9 மில்லியனும் அதே ஆண்டில் பெறுமதி சேர் வரியாக ரூபா 137 மில்லியனையும் செலுத்தியுள்ளது.




2007 ம் ஆண்டு தொடக்கம் 2011 வரை கடந்த 5 ஆண்டுகளில் இயக்கச் செலவு அதிகரித்துள்ளது.




## மூலதனச் செலவு

ஏற்றுமதிப் பதனிடல் வலயங்களிலும் மற்றும் கைத்தொழில் பேட்டைகளிலும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதில் ரூபா 306.42 மில்லியன் மூலதனச் செலவு செலவிடப்பட்டுள்ளது. மூலதனச் செலவு முழுமையாகவே முதலீட்டுச் சபையினால் உருவாக்கப்பட்ட நிதியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



# இலங்கை முதலீட்டுச் சபை

## 31-12-2011 ல் முடிவடைந்த திகதியன்று உள்ளபடி நிதி நிலைமை பற்றிய குறிப்பு

| | 2011<br>ரூபா | 2011<br>ரூபா | 2010<br>ரூபா | 2010<br>ரூபா |
|---|---|---|---|---|
| **சொத்துகள்** | | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | |
| சொத்துப் இயந்திரங்களும் உபகரணங்களும் | 22,129,212,413 | | 22,393,533,609 | |
| மத்திய வங்கியின் தற்காலிக மேலதிக நிதி | 988,430,100 | | 430,397,379 | |
| நடைபெறும் ஆக்கப் பணிகள் | 189,445,840 | | 182,256,166 | |
| தள்ளிப்போடப்பட்ட செலவு | 437,594,339 | | 406,929,674 | |
| வலயத்தின் கொடுக்கப்பட வேண்டிய வீடுகளின் பெறுமதி | 5,401,000 | | 8,198,000 | |
| கருத்திட்டங்களின் தொடக்கச் செலவுகளுக்கான முற்பணம் | 147,747,661 | 23,897,831,353 | 414,685,630 | 23,836,000,458 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | | |
| கையிருப்புக்கள் | 12,507,390 | | 10,748,569 | |
| **கிடைக்க வேண்டியவை** | | | | |
| நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டியவை | 353,720,292 | | 382,459,356 | |
| ஊழியர் கடன்களும், முற்பணங்களும் | 474,532,730 | | 336,550,552 | |
| ஏனைய கடனாளிகள் | 53,515,522 | | 55,575,876 | |
| நிதி உதவித்திட்டம் | 63,065,244 | | 84,207,892 | |
| வட்டி மற்றும், வைப்புகள் கிடைக்க வேண்டியை | 38,961,932 | | 85,289,944 | |
| ஏற்கனவே கொடுக்கப்பட்டவை | 78,512,579 | | 11,039,973 | |
| குறுகியகால முதலீடுகள் | 105,356,765 | | 1,249,509,100 | |
| கையில் உள்ள மற்றும் வங்கியிலுள்ள பணம் | 177,230,133 | 1,357,402,587 | 244,131,099 | 2,459,512,361 |
| **மொத்தச் சொத்துகள்** | | 25,255,233,939 | | 26,295,512,819 |
| **பொறுப்புகள்** | | | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| சில்லறைக் கடனாளிகள் | 67,692,702 | | 296,223,967 | |
| ஒன்று சேர்ந்த செலவுகள் | 158,777,519 | | 339,654,311 | |
| முன்னதாகவே கிடைத்தவை | 120,357,839 | | 173,671,470 | |
| மீளளிக்கப்பட வேண்டிய இருப்புகள் | 88,196,220 | 435,024,280 | 76,067,427 | 885,617,175 |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | | |
| பணிக் கொடைக்கான ஏற்பாடு | 300,446,413 | | 279,671,634 | |
| காணிக்கான அதிகரிப்புத் தொகை | 1,706,224,292 | 2,006,670,705 | 1,480,415,557 | 1,760,087,191 |
| **மொத்தப் பொறுப்புகள்** | | 2,441,694,985 | | 2,645,704,366 |
| **மொத்தத் தேறிய சொத்துகள்** | | 22,813,538,954 | | 23,649,808,453 |
| **தேறிய சொத்துகள் / சமத்தொகை** | | | | |
| ஒன்று சேர்ந்த நிதி | 7,457,162,441 | | 8,259,677,671 | |
| நிதிகளும் ஒதுக்கப்பட்டவைகளும் | 15,356,376,513 | | 15,357,251,680 | |
| உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான விசேட நிதி | - | 22,813,538,954 | 32,879,102 | 23,649,808,453 |
| **மொத்தத் தேறிய சொத்துகள் / சமத்தொகை** | | 22,813,538,954 | | 23,649,808,453 |

இந் நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதிலும், சமர்ப்பிப்பதிலும் பணிப்பாளர் சபை பொறுப்பானது, இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபைக்காகவும் அதன் சார்பிலும் அங்கீகரிக்கப்பட்டுக் கைச்சாத்திடப்பட்டது.

M.M.C. பெர்டினாந்து
தலைவர் / பணிப்பாளர் நாயகம்
இலங்கை முதலீட்டுச் சபை

திருமதி) போலின் மத்தியாஸ்
முன்னைய பணிப்பாளர் (நிதி)
இலங்கை முதலீட்டுச் சபை

# இலங்கை முதலீட்டுச் சபை

## 31.12.2011-ல் முடிந்த காலத்துக்கான நிதிச் செயல் பற்றிய கூற்று

| நடவடிக்கை வருமானம் | 2011 ரூபா. | 2010 ரூபா. |
|---|---|---|
| நில வாடகை | 428,219,319 | 413,125,423 |
| ஆண்டுக்கட்டணம் | 421,097,317 | 413,643,910 |
| இறக்குமதி / ஏற்றுமதி சேவைக்கட்டணங்கள் | 580,307,410 | 548,239,018 |
| நிறுவனங்களுக்கு நீர் வழங்குவதிலிருந்து தேறிய வருமானம் | 240,045,374 | 226,854,682 |
| காணி அதிகக் கொடுப்பனவு | 43,917,015 | 38,832,634 |
| வைப்புகள், பதவியாளர் கடன்கள் மீதான வட்டி | 143,865,424 | 152,383,006 |
| வாடகை வருமானம் | 61,304,496 | 61,751,213 |
| 16-ம் பிரிவின் கீழான நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரக் கட்டணம் | 19,686,244 | 19,086,126 |
| நுழைவுக் கட்டண அனுமதிப் பத்திர விற்பனை | 92,393,340 | 86,593,817 |
| ஒப்பந்தம் தயாரிப்புக் கட்டணம் | 39,412,763 | 67,446,433 |
| வீடமைப்பு மற்றும் ஏனைய கருத்திட்ட லாபம் | 21,833,105 | 22,641,072 |
| பல்லின வருமானம் | 56,734,714 | 83,861,029 |
| | **2,148,816,521** | **2,134,458,363** |
| **நடவடிக்கைச் செலவு** | | |
| பணியாளர் சம்பளங்கள | 892,705,908 | 816,943,094 |
| பணியாளர் நலன்புரிச் செலவுகள | 157,977,706 | 152,299,738 |
| முதலீட்டு மேம்பாட்டு செலவுகள் | 22,295,456 | 22,789,421 |
| அச்சிடும், காகித வகையும் | 21,698,563 | 23,105,626 |
| கணணி மற்றும் அலுவலக உபகரணங்கள் பேணுகை | 33,627,058 | 12,167,991 |
| கட்டிடம் பேணுதல் | 57,672,694 | 60,286,595 |
| போக்குவரத்து தொடர்பான செலவுகள் | 71,217,499 | 70,603,728 |
| வலயங்களைப் பேணுதல் | 95,334,336 | 95,107,913 |
| அலுவலக வாடகை, மற்றும் சரிபார்த்தல் அலகு வாடகை | 34,370,337 | 33,531,080 |
| நீர் பாவணை | 5,677,192 | 6,237,595 |
| வெளிச்சமும், வலுவும் | 48,054,503 | 45,131,604 |
| தொடர்பாடல் செலவுகள | 28,157,326 | 25,755,397 |
| மாநகர சபைக் கட்டணங்கள் | 7,549,380 | 6,604,662 |
| பாதுகாப்புச் சேவைகள் | 46,306,120 | 56,177,311 |
| பத்திரிகை அறிவிப்புகள் | 2,124,369 | 967,690 |
| பதவியாளர் பயிற்சி | 5,980,862 | 6,472,566 |
| சட்ட மற்றும் உயர் கட்டணங்கள் | 8,262,382 | 44,433,548 |
| பொதுச் செலவுகள் | 26,707,503 | 29,581,461 |
| **மொத்த நடவடிக்கைச் செலவு** | | 332,500 |
| நடவடிக்கைச் செயற்பாடுகளின் வரிக்கு முந்திய மிச்சம் | 1,250,000 | |
| வட்டி வருமானத்தின் மீது வரி | 3,850,994 | 3,863,184 |
| நடவடிக்கைச் செயற்பாடுகளில் வரிக்கு பின்னரான மிச்சம் | 25,852,810 | 38,412,616 |
| சொத்து இயந்திரங்கள் மற்றும் உபகரண விற்பனை மூலம் கிடைத்தது. | 1,800,000 | 1,570,000 |
| விதிவிலக்கான விடயம் வழக்குத் தீர்வு | 47,970,747 | 34,497,402 |
| நடவடிக்கையள்ளாத வருமான மொத்தம்/(செலவுகள்) | 352,385,570 | 364,909,171 |
| **காலப்பிரிவுக்கான தேறிய மிச்சம்** | **1,998,829,314** | **1,951,781,895** |
| வரிக்கு முன்னரான இயற்கச் செயற்பாடுகளின் மிகுதம் | 149,987,207 | 182,676,469 |
| வட்டிவருமானத்தின் வரி | 32,935,760 | 40,047,528 |
| வரிக்கு பின்னரான இயக்கச் செயற்பாடுகளின் மிகுதம் | 117,051,447 | 142,628,941 |
| சொத்து இயந்திரங்களை விற்பதனால் கிடைத்தவை | (736,253) | 39,080 |
| விதிவிலக்கான விடயம் வலக்குத் தீர்வுகள் | (32,719,097) | |
| யக்கம் அள்ளாததில் வருமானம் / செலவுகள் | (33,455,350) | 39,080 |
| **இக்காலத்திற்கான தேறிய மிச்சங்கள்** | **83,596,097** | **142,668,021** |

# இலங்கை முதலீட்டுச் சபை

## 31.12.2011-ல் முடிவடைந்த காலப்பிரிவுக்கான நிதியோட்டக் கூற்று

| | 2011<br>ரூபா (மில்) | 2010<br>ரூபா (மில்) |
|---|---|---|
| **நடவடிக்கைச் செயற்பாடுகளிலிருந்து நிதி ஓட்டம்** | | |
| நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட பணம் (குறிப்பு அ) | 1,444.61 | 580.7 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (260.03) | |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (28.63) | (11.3) |
| கடந்த ஆண்டு தொடர்பான மாற்றம் | (39.48) | 0.6 |
| **தேறிய நிதியோட்டம் ∴ நடவடிக்கைச் செயற்பாடுகளிலிருந்து வெளியோட்டம்** | **1,116.48** | **569.9** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து நிதியோட்டம்.** | | |
| முதலீட்டு வருமானம் | 143.87 | 152.4 |
| பொருத்தப்பட்ட சொத்துக்கள் கொள்வனவு | (186.94) | (104.6) |
| பொருத்தப்பட்ட சொத்துக்கள் விற்பனை மூலம் கிடைத்தவை | 3.62 | 0.8 |
| மத்திய வங்கி தற்காலிக மிச்சப்பணம் | (558.03) | (406.3) |
| நகர அபிவிருத்தி | (248.08) | (27.7) |
| நடைபெறும் ஆக்க வேலை | (7.19) | 67.1 |
| கருத்திட்டங்களின் தொடக்கச் செலவுக்கான முற்பணம் | 266.94 | (59.5) |
| பின்தள்ளப்பட்ட செலவு | (64.59) | (51.2) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேசிய பண ஓட்டங்கள்** | **(650.41)** | **(429.1)** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து பண ஓட்டம்** | | |
| திறைசேரிக்கு மாற்றப்பட்ட பணம் | (500.00) | |
| உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான விசேட நிதி | (32.88) | |
| பதவியாளர் நலன் நிதி | (0.08) | (0.2) |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து தேறிய நிதியோட்டம்** | (532.96) | (0.2) |
| **தேறிய அதிகரிப்பு (குறைவு) பண மற்றும் பணச் செயற்** | | |
| **ஆண்டுத் தொடக்கத்தில்** | (66.90) | 140.6 |
| பணமும், பணத்துக்குச் சமமானவையும் | 244.1 | 103.5 |
| ஆண்டு இறுதியில் பணமும், பணத்துக்குச் சமமானவையும் (குறிப்பு ஆ) | 177.23 | 244.1 |
| | | |
| **குறிப்பு அ** | | |
| நடவடிக்கைகளிலிருந்து தேடப்பட்ட பணம் | 83.60 | 142.7 |
| தேய்மானம் | 352.39 | 364.9 |
| செலுத்திய வருமான வரி | 32.94 | |
| பணிக் கொடை ஏற்பாடு | 49.40 | 67.5 |
| அறவிடப்பட்ட முடியாத கடன்களுக்கான ஏற்பாடு (தேறியது) | 47.97 | 11.4 |
| (அதிகம்) அறவிடப்பட முடியாத கடன்கள் மீது எழுதி முடிக்கப்பட்ட குறைவு ஏற்பாடு | 25.14 | (3.1) |
| காணிக்கான அதிக கொடுப்பனவு வருமானத்துக்குச் சேர்க்கப்பட்டது. | (43.92) | (38.8) |
| (ஆதாயம்) நட்டம் நிரந்தரச் சொத்துகள் விற்பனை மூலம் முதலீட்டு வருமானம். | 0.74 | (0.0) |
| பின்தள்ளப்பட்ட செலவுகள் மீளக் கிடைத்தமை | (143.87) | (152.4) |
| செயற்பாட்டு ஆக்க மாற்றங்களுக்கு முன் செயற்பாட்டு மிச்சம் | 33.93 | 30.0 |
| **பயன்பாட்டு மூலதன மாற்றங்கள்** | **438.32** | **422.1** |
| | | |
| **செயற்பாட்டு மூலதன மாற்றங்கள்** | | |
| இருப்புகள் | (1.76) | 0.1 |
| நிறுவனங்களிலிருந்து வர வேண்டியவை | (4.00) | (25.1) |
| ஊழியர் கடன்களும், முற்பணங்களும் | (137.98) | (29.1) |
| ஏனைய கடனாளிகள் | (40.34) | (0.8) |
| நிதியுதவித் திட்டங்கள் | 21.14 | 13.9 |
| கிடைக்க வேண்டிய வட்டிகள் | 46.33 | 16.8 |
| முற்பணக் கொடுப்பனவு | (67.47) | 6.3 |
| குறுகிய கால முதலீடு | 1,144.15 | (323.0) |
| காணி தொடர்பாகக் கிடைத்தவை தேறியது | 269.73 | 283.3 |
| சில்லறைக் கடனாளிகள் | (228.53) | 186.1 |
| ஒன்றுசேர்ந்த செலவுகள் | 46.21 | (1.1) |
| முற்பணங்கள் கிடைத்தவை | (53.31) | 37.4 |
| மீளவளிக்கப்பட வேண்டிய வைப்புகள் | 12.13 | (6.3) |
| **செயற்பாட்டு ஆக்க மாற்றங்களுக்குப் பின் செயற்பாட்டு மிச்சம்** | **1,444.61** | **158.5** |
| **குறிப்பு ஆ** | | |
| **பண மற்றும் பணச் சமன்களின் பகுப்பாய்வு** | | |
| வங்கி மற்றும் நிதி மீதி | 177.23 | 244.1 |
| இருப்புகள் (கேட்டபோது கிடைப்பது ) | 0.00 | |
| | **177.23** | **244.1** |

# 31.12.2011 ல் இருந்த படி நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

## நிதிக் கொள்கைகள்

(அ) நிதிக் குறிப்புகள் வரலாற்றுச் செலவு மரபுகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கைக் கணக்குத் தரங்களின் படி சமா்ப்பிக்கப்பட்டுள்ளன. இக்கணக்குகளைப் பாதிக்கும் வீதத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டில்லை.

(ஆ) நிதிச் சொத்துகளும், பொறுப்புகளும் வெளிநாட்டு நாணயங்களில் காண்பிக்கப்பட்டு ஐந்தொகைச் சீட்டின் தினத்தில் நிலவும் நாணய மாற்று விகிதத்தின் படி இலங்கை ரூபாய்க்கு மாற்றப்பட்டுள்ளன. மாற்றப்படுவது மூலம் விளையும் எல்லா நாணய மாற்றுச் சம்பாதிப்புகளும், இழப்புகளும் நிதிச் செயற்பாட்டுக் குறிப்பேட்டுக்கு எடுக்கப்பட்டுள்ளது.

(இ) முதலீட்டுச் சபைக் காணியைப் பெரும் அளவிலான சொத்து அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காகவும் வீடமைப்புக் கருத்திட்டங்களுக்காகவும் குத்தகைக்கு விடுதல்

இவ்வுடன் படிக்கைகள் பிரதானமாக 97/4624/03/070 இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் ஏற்பாடுகளின் மீது அமைந்தவை. காணி வழங்குதல் நடைமுறைகளைத் துரிதப்படுத்துவதற்கும், பாரிய அளவிலான முதலீட்டுச் சபைக் கருத்திட்டங்களுக்கு நிவாரணம் அளிப்பதற்குமான ஆலோசனைகள், எனும் 8.10.1997 ல் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்பட்ட படி காணியின் சந்தையில் பெறுமதி தவணையடிப்படையில் குத்தகை பெற்றவரால் செலுத்தப்படுதல் வேண்டும். நிதியாண்டில் கிடைக்கப் பெற்ற அத்தகைய தவணைப் பணங்கள், காணி விற்பனைக்காகக் கிடைக்கப் பெற்ற பணமாகக் கருதப்படும்.

காணி விற்பனை மூலம் கிடைக்கப் பெற்ற பணங்கள் நிதிச் செயற்பாட்டுக் கூற்றில் வீடமைப்பு மற்றும் ஏனைய கருத்திட்டங்களின் இலாபம் எனக் காட்டப்பட்டுள்ளது.

### நிதி நிலைமை பற்றிய கூற்று

### சொத்துகளும் மதிப்பீட்டுக்கான அடிப்படையும்

### நடைமுறை அல்லாத சொத்துகள்

1. அலுவலகத் தளவாடங்கள். உபகரணங்கள், மற்றும் கணனிகளும், கணனிகள் தொடர்பான உதவி உபகரணங்களும் 01.01.2010 தினத்தன்று இருந்த படி மீளப் பெறுமதி கணிக்கப்பட்டு தொடர்பான மீளமதிப்பீட்டு அதிகத் தொகையான ரூபா 37.33 மில்லியன் மற்றும் 28.41 மில்லியன் என்பன ஒரு ஒதுக்குப் பணமாகக் காண்பிக்கப்படுள்ளன.

சபையானது 01.01.2010 தொடக்கம் நிலையான சொத்துகள் பிரிவை நிறுத்தத் தீா்மானித்து உள்ளது. அத்துடன் அவற்றின் எஞ்சிய செலவான ரூபா 1.88 மில்லியன் அலுவலகத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.

மோட்டாா் வாகனங்கள் தொகுதி மற்றும் கட்டிடங்கள் என்பன முறையே 2006 மற்றும் 2007ம் ஆண்டுகளில் மீள மதிப்பிடப்பட்டன.

காணி, கட்டிடங்கள் மற்றும் பொறிகளும் இயந்திரங்களும் 2009 ல் மீளமதிப்பிடப்பட்டன.

நிலையான சொத்துகளின் தேய்வு, ஆண்டொன்றுக்குப் பின்வரும் கணக்கீட்டின் படி நேரடியான அமைப்பு முறையில் ஏற்படுத்தியளிக்கப்பட்டுள்ளது.

| சொத்துகள் வகை | % |
|---|---|
| கட்டிடங்கள் | 5 |
| அமைப்புகள் | 5 |
| பொறிகளும் இயந்திரங்கள் | 10 |
| நிலையான பொருத்திகள் | 10 |
| அலுவலகத் தளபாடமும், கருவிகளும் | 10 |
| தனிக் கணனிகள் | $33^1/_3$ |
| வாகனங்கள் | 20 |
| தனியான உபகரணங்கள் | 25 |

கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் தேய்வு கணிக்கப்படுவதில்லையென்பதுடன், இருக்கக்கூடிய ஆண்டில் முழுமையாகக் கணிக்கப்படுகிறது.

1. குத்தகை அடிப்படையில் 15 பேரூந்து வண்டிகள் கூட்டுறவுச் சமாசங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. நோக்கம் வலயங்களில் போக்குவரத்துச் சேவைகளை அதிகரிப்பதற்காகும்.

   குத்தகைக்கு விடப்பட்ட பேரூந்துகள் உண்மையில் கூட்டுறவுச் சமாசங்களின் உடமையில் இருந்த போதிலும், சட்டரீதியான உரிமை முதலீட்டுச் சபையிடமே உள்ளது. பேரூந்து வண்டிகள் முழுமையாக முதிர்ச்சியடைந்துள்ளன.

   இப்பேரூந்துகளின் உரிமை சபையின் முடிவொன்றின் பிரகாரம் 2011 ம் ஆண்டில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு மாற்றப்பட்டுள்ளது.

2. நடைபெறக் கூடிய வேலைகள் வரலாற்றுச் செலவின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. ஆரம்பத்தில் மதிப்பிடப்பட முடியாத பெரிய கருத்திட்டங்களுக்கான தொடக்கச் செலவுகளுக்கான முற்பணக் கொடுப்பனவுகள், அளவை தேறும் வரை நீண்ட கால முற்பணங்களாகக் கருதப்படுகின்றன.

4. வத்துப்பிடிவல ஏற்றுமதி உற்பத்தி வலயத்தில் கொடுத்து முடிக்கப்பட வேண்டிய எஞ்சிய வீட்டு அலகுகள் பெறுமதி பின்வரும் முறையில் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

   - விற்பனைக்காக முடிவு செய்யப்பட்டுள்ள வீட்டு அலகுகள், இணங்கப்பட்ட விற்பனை விலை
   - இதுவரை விற்பனைக்கு முடிவு செய்யப்படாத வீட்டு அலகுகள் பிரதான மதிப்பீட்டாளரினால் வழங்கப்பட்ட பெறுமதிகளின் அடிப்படையிலானவை. 2010 ம் ஆண்டில் பிரதான மதிப்பீட்டாளரினால் மீளக்கணிக்கப்பட்டு, கணக்கில் மாற்றம் செய்யப்பட்டது.

   13-ம் இலக்கத் துண்டுக்காக விற்பனைப் பணத்தின் மீதியைத் தவணை அடிப்படையில் செலுத்துவதற்குச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. கிடைத்த தவணைப் பணங்கள் என்ற வகையில் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிலையான பொறுப்புகள் உரிமையின் கீழ் வத்துப்பிட்டிவல

5. சில சமயங்களில் கருத்திட்டங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கத்தின் சார்பாக சமூகத்தின் பயனுக்காக / நாட்டின் பயனுக்காக விரிவு படுத்துவதற்கு முதலீட்டுச் சபை நடவடிக்கையெடுத்துள்ளது. வேலை முடிந்த பின்னர் இக்கருத்திட்டங்கள் தொடர்பாக அதிகாரிகளிடம் பொறுப்பளிக்கப்படும்.

   ஏனெனில் இக்கருத்திட்டங்கள் முதலீட்டுச் சபைக்கு உரித்தானவையல்ல என்பதுடன் முதலீட்டுச் சபையின் பணிகளுடன் தொடர்புடையனவயன்று.

   எனவே அத்தகைய கருத்திட்டங்கள் தொடர்பான எல்லாச் செலவுகளும் நகரத்துறைக் கணக்குகளுடன் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ளன. ஆண்டின் இறுதியில் நகரத்துறைக் கணக்கின் மீதிகள் ஒன்றுக்காக நிதிக்கு மாற்றப்படும், இதன் காரணம் அரச உரித்து தொடர்பாக சரியான நிலைமையைத் தெரிவிப்பதாகும்.

இவ்வாறான கருத்திட்டங்கள் தொடர்பாக முதலீட்டுச் சபையினால் கிடைக்கப் பெற்ற ஏதும் நிதிகள் நகரத் துறைக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. ஏனெனில் அத்தகைய கருத்திட்டங்கள் தொடர்பான செலவு அதே கணக்கில் பொறுப்புக் காட்டப்பட்டிருந்தது.

6. காணிகள்

பின்வரும் காணிகள் இலவச வழங்குதல் அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளதுடன் அவற்றின் பெறுமதிகள் ஒன்று சேர்ந்த நிதிக் கணக்கில் காட்டப்பட்டுள்ளன.

| காணி விபரம் | பெறுமதி | மாற்றப்பட்டவர் |
|---|---|---|
| றெஜிடேல் எஸ்டேட் பிலியந்தலை | ரூபா 95,500,000 | புத்தசாசன மற்றும் மத விவகாரங்கள் அமைச்சு |
| கலேவெல, ஹீனெடிகல ஆடைத் தொழிற்சாலைக்கு வாடகை விடப்பட்டிருந்த காணி | ரூபா 768,000 | பிரதேச செயலாளர் கலேவெல |

அனுராதபுர மாவட்டத்தில் றம்பேவ மற்றும் புளியங்குளத்தில் உள்ள இருகாணிகள் விற்கப்பட்டு 1999 ல் உறுதிகள் முடிக்கப்பட்டிருந்தன. இவை ஒரு தவறு காரணமாக மீண்டும் மதிப்பிடப்பட்டுள்ளன. தொடர்பான புத்தகப் பெறுமதி மீள் மதிப்பீட்டு மிச்சத்துக்கு எதிராக எழுதப்பட்டன.

## நிலையான சொத்துகள்:

இருப்புகள் வரலாற்றுச் செலவு அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் முதலில் வந்தவை முதலில் வெளியில் எனும் அடிப்படையில் புத்தகப் பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கிடைக்க வேண்டியவை

ஆண்டுக் கணக்குகள் மற்றும் நிதியுதவித் திட்டம் தவிரக் கடனாளிகளுக்காக 7.5% ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இரத்துச் செய்யப்பட்ட மற்றும் மூடப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பாகக் கிடைக்க வேண்டியவைக்காக 100% ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் ஆண்டுக் கட்டண மீதிக்காக 15% ஏற்பாடு செய்யபட்டுள்ளது.

நிதியுதவித் திட்டத்தின் கீழ் கடனாளிகளுக்காக 20% ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தவறிழைத்தவர்களுக்கு 100% வீத ஏற்பாடான 27.42 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரு தவறாளி எனக் கணிக்கப்பட்ட ஒரு நிறுவனம் பணம் செலுத்தப் பிரயோகிக்கப்பட்டது.

குறிப்பிட்ட கடனாளிகளைப் பொறுத்த வரை 100% ஏற்பாடான ரூபா 3.34 மில்லியன் சில்லறைக் கடனாளிகளுக்காக ஒதுக்கப்பட்டுளளது.

ரூபா 40.374 மில்லியன் 31.12.2011 ல் சில்லறை கடனாளிகள் என்ற வகையில் எழுதி முடிக்கப்பட்டுள்ளது.

கிடைக்க வேண்டிய தாமத தீர்வுகளுக்காக வட்டி அறவிடப்படுவதுடன் அவை குறிப்பிட்ட வருமான மற்றும் கடனாளிகளின் மூலங்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.

## நிதிச் செயற்பாட்டக்கான குறிப்பு

1. வருமானம் ஒன்று சேர்ந்த அடிப்படையில் கணிக்கப்படுகிறது.
2. நிறுவனங்களுக்குத் தண்ணீர் வழங்குவதிலிருந்து கிடைத்த தேறிய வருமானம். இது நீர் வழங்குதல் மற்றும் நீரின் செலவு மற்றும் நீர் இயக்கம் பேணுகை, கழிவு நீரைத் துப்புரவாக்கல் என்பனவற்றின் பின் அறவிடப்படும் கட்டணங்களாகும்.
3. நித்திய சொத்துக்களைக் கொடுத்து முடிவதிலிருந்து கிடைத்த வருமானங்களும், செலவுகளும் சொத்துக்கள் இயந்திரங்கள், பொதிகள் என்பவற்றை விற்பதிலிருந்து கிடைத்த வருமானங்கள் என்பதன் கீழ் நிதிச் செயற்பாடு பற்றிய குறிப்பேட்டில் காணப்படுகிறது.

4. முதலீட்டுச் சபைக்குச் சொந்தமான, ஹொரண பேர்த் எஸ்டேட்டின் 700 ஏக்கர் இறப்பர் காணியின் முகாமை 1999 தொடக்கம் 2006 வரை அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டள்ளது. ஆய்வு செய்யப்பட்ட கணக்குகளின் பிரகாரம், புரிந்துணர்வு உடன் படிக்கையின் படி எட்டு ஆண்டுகளுக்காகப் பெருந் தோட்டம் கூட்டுத்தாபனத்திலிருந்து முதலீட்டுச் சபைக்கு வழங்கு வேண்டியிருந்தது. இந்தத் தொகையை அறவிடுவது சந்தேகம் என்பதனால் இது வருமானமாகக் கணிக்கப்படவில்லை.

5. **தன்விருப்ப ஓய்வுத்திட்டம்**

   மேற்குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் 41 பதவி உறுப்பினர்கள் ஓய்வு பெற்று உள்ளனர். ஆத்துடன் சம்பளங்களும் ஊதியங்களும் என்பதன் கீழ் செலவாக ரூபா 58.8 மில்லியன் காண்பிக்கப்பட்டள்ளது.

6. **விதி விலக்கான விடயம்**

   முதலீட்டுச் சபைக்கெதிராக 03.03.2011- ல் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பை ஏற்பதற்குச் சபை அங்கீகாரம் வழங்கியது. தீர்ப்பிலிருந்து வட்டியுடன் ரூபா 32,729,096.90 Dutch Lanka Accessories (Pvt) Ltd, தனியார் நிறவனத்துக்கு 10.06.2011 இல் வழங்கப்பட்டது இக் கொடுப்பனவு ஒரு விதிவிலக்காக் காண்பிக்கப்பட்டுள்ளது.

   AL AIN சர்வதேச பெற்றோலிய நிறுவனத்தினால் செலுத்தப்பட்ட ரூபா 17,808,402.74 முன்னைய ஆண்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டது போன்று மீள விளக்கப்பட்டள்ளது.

## பின்தள்ளப்பட்ட செலவு

(அ) சபை 2008 –ல் உலக வர்த்தக நிலையத்தில் ஒன்பது மபாடிகளைப் பெற்றுள்ளதால் உள்ளக அவங்களிப்புகளின் செலவு , கம்பளபடுதல் மற்றும் பிரிவு என்பவற்றின் செலவு 2008 – ம் ஆண்டு தொடக்கம் 10 ஆண்டுகளுக்கு எழுதி முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) வலய அபிவிருத்தி செலவு 20 ஆண்டுகளுக்கு எழுதி முடிக்கப்பட்டுள்ளது.

### ஊழியர் பயன்கள்

**(அ) விளக்கப்பட்ட பயன்பாட்டுத் திட்டங்கள்**

இலங்கைக் கணக்கீட்டுத் தரங்களின் பிரகாரம் (SLAS – 16) ஓய்வு நலன்கள் லெவைக் கணிப்பதற்கு எல்லா ஊழியர்களுக்கும் ஓய்வுப் பணிக்கொடைக்கு ஏற்பாடு செய்யப்பட்டள்ளது. எவ்வாறென்றும், 1980 – ம் ஆண்டின் 12-ம் இலக்கப் பணிக் கொடைச் சட்டத்தின் கீழ் ஐந்து ஆண்டுக்காலத் தொடர்ச்சியான சேவையின் பின்னர் ஊழியர்களுக்கு உரித்துண்டாகும்.

செலுத்த வேண்டிய பணிக்கொடை நிதியமைச்சினால் பேணப்படும் தற்காலிக மேலதிக நம்பிக்கை நிதியூடாக திறைசேரி உண்டியல்களில் உள்ள முதலீடுகளினால் இது வழங்கப்படுகின்றது.

**(ஆ) விளக்கப்பட்ட உதவுத் தொகைத் திட்டங்கள்**

எல்லா ஊழியர்களைப் பொறுத்த வகையிலும் ஊழியர் சேமலாபநிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதி என்பவற்றுக்கான உதவு தொகைக்கான கடப்பாடுகள் செலவிடப்பட்ட செலவுகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

## அவசரகால எதிர்பார்ப்புப் பொறுப்புகள்

(அ) Hepz வலயத்தில் உற்பத்தித் தொழிற் பொறியொன்றைத் தாபித்துள்ள M/S Merbok ஆனக லங்கா தனரியார் நிறுவனத்துடன் முதலீட்டுச் சபை ஓர் ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டு உள்ளது. ஒப்பந்தத்தின் படி 6.9% க்கு மேலான ஒன்றிணைந்த ஆண்டுக்கணக்குக்கு மேலான இலக்கை மினசார சபைக் கட்டணங்களுக்குப் பணம் மீள வழங்க முதலீட்டுச் சபை இணங்கியுள்ளது. தொழில் நீதிமன்றத் தீர்ப்பின் படி 2007 செப்டம்பர் வரை ரூபா 356,793,568,21 உம் தொடர்பான வட்டியும் கட்டளையிடப்பட்டுப் பணிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தொழில் மன்றின் கட்டளையினைத் தள்ளுபடி செய்யுமாறு முதலீட்டுச் சபை மேல் நீதிமன்றத்திற்கு ஓர் மேன்முறையீடு செய்துள்ளது.

(ஆ) முதலீட்டுச் சபை 21.06.2001 ல் ஒரு கருத்திட்டத்துக்காக Asia Pacific Golf Course Limited உடன் ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது. இதன் நோக்கம் ஒரு சர்வதேச தரத்திலான கால்ப் மைதானத்தை நிர்மாணித்துச் செயற்படுத்துதல், ஓட்டும் மைதானம்,க்ளப் ஹவுஸ் விளையாட்டு மற்றும் உல்லாசம் தொடர்பான செயற்பாடு மற்றும் வாசஸ் தலங்களை உருவாக்குதலாகும்.

2008 மீயுயர் மன்றத் தீர்ப்பின் படி சிங்கப்பூரின் ஓர் சட்ட அனுவாக்கியமான Acquitas Law LLP, குறிப்பிடப்பட்ட நிறுவனத்தின் சார்பாக முதலீட்டுச் சபையிடமிருந்து ரூபா 19,191,380.00 வுக்காக ஒரு கோரிக்கை விடுத்துள்ளது. மேற்குறிப்பிட்டது தொடர்பாக வழக்கு நடவடிக்கைகள் சிங்கப்பூரில் தொடங்கியுள்ளன.

## முதலீடுகள்

தற்காலிக மேலதிக நிதியில் முதலீடு நீண்ட கால முதலீடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.

## முடிவுபெறாத வழக்குகள்

(அ) முடிவு பெறாத வழக்குகளின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் உண்மையான பொறுப்புகளைச் சரியாகக் கூற முடியாது .

(ஆ) பியகம ஏற்றுமதி உற்பத்தி வலயத்தில் காசுப் பற்றாக்குறையின் கீழ் 507,650 மொத்த தொகை குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமன்ற வழக்கு நடவடிக்கை தொடர்கின்றது.

## தொடர்பாக தரப்பு வெளிப்பாடுகள்

(1) திரு. ஜயம்பதி பண்டாரநாயக, முதலீட்டுச் சபைத் தலைவரும்/பணிப்பாளர் நாயகமும், பின்வரும் முதலீட்டுச் சபை நிறுவனங்களின் சபையில் பணியாற்றினார்.

1. Hayleys PLC
2. Finlays PLC

(2) முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினரான திரு. சஞ்ஜீவ விக்ரமநாகய பின்வரும் முதலீட்டுச் சபை நிறுவனங்களுடன் கட்டுப்பாடு அல்லது/ குறிப்பிடத்தக்க செல்வாக்கு வர்த்தகத் தொடர்புகள் ஊடாகக் கொண்டுள்ளனர்.

(3) ஜனவரி 2011 தொடக்கம் டிசம்பர் 2011 வரை முதலீட்டுச் சபையுடன் 3-மேற்கொள்ளப்பட்டன.

1. E-W information Systems Ltd.,
2. EWIS Peripherals (Pvt) Ltd.,
3. Open systems integrators (Pvt) Ltd.,
4. Open systems Technologies (Pvt) Ltd.,
5. Toppan Forms (Colombo) Ltd.,

(3) முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினரான திரு. எக்ஷான டி சில்வா, பின்வரும் முதலீட்டுச் சபை நிறுவனங்களின் மீது கட்டுப்பாடு மற்றும்/அல்லது குறிப்பிடத்தக்க செல்வாக்கைப் பின்வரும் முதலீட்டுச் சபை நிறுவனங்கள் மீது கொண்டுள்ளார்.

1. Melanka Power moraketiya (Pvt) Ltd.,
2. Vidul Madugeta (Pvt) Ltd.,

(4) முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவரான திரு. அனுர ஜயசிங்ஹ, முதலீட்டுச் சபை நிறுவனங்களுடன் எதுவித தொடர்பும் இல்லையெனக் குறிப்பிட்டுள்ளார்.

# கணக்காய்வாளர் அறிக்கை

**2011.12.31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்காக இலங்கை முதலீட்டுச் சபையின்**
**நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக 1971 இல. 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 14 (2) (இ) வாசகத்துக்கு அமைய கணக்காய்வாளர் அறிக்கை**

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல / My No: ரீசீ/ஜீ/பீஓஐ/எவ்ஏ/2011

මබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2013 மார்ச் 19

தலைவர்,
இலங்கை முதலீட்டுச் சபை

**இலங்கை முதலீட்டுச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை முதலீட்டுச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, திரண்ட நிதியக் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்க தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 இன் 49 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1978 இன் 4 ஆம் இலக்க கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு கட்டளைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையிற் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 - 34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail: oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடுசெய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, இலங்கை முதலீட்டுச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (எஸ்எல்ஏஸ்) இணங்காமை**

நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 1091 ஊழியர்களிற்கான பணிக்கொடை செலவு மற்றும் பணிக்கொடைக்கான நிதி ஏற்பாடு என்பன முறையே ரூபா 49,402,310 மற்றும் ரூபா 300,446,413 ஆன தொகைகளாகும் எனினும், ஐந்தொகைத் திகதியிலுள்ளவாறான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி மற்றும் மற்றும் தொடர்புபட்ட மொத்தச் செலவுகளின் விபரங்கள் என்பன இ.க.நி 16 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை முதலீட்டுச் சபையின் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களில் வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்பட்டதாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் உத்தரவுப் பத்திரக் கட்டணங்கள் மற்றும் உடன்படிக்கை செயன்முறைக் கட்டணங்கள் என்பன காசடிப்படையில் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருந்தன.

2.2.3 கிடைக்க வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்க வேண்டிய கணக்குகள் மற்றும் ஐயக் கடன்களிற்கான ஏற்பாடு.

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை முதலீட்டுச் சபை அங்கீகாரமளித்த செயற்திட்டங்களின் நீண்ட காலமாக நிலுவையிலுள்ள கிடைக்க வேண்டிய மீதிகள் மற்றும் அதிலிருந்து பதிவழிக்கப்பட்ட நட்டக் கடன்கள் என்பவற்றின் விபரங்கள் முன்னைய ஐந்து ஆண்டுகளுடன் ஒப்பிட்டு கீழே தரப்படுகின்றது.

| விபரம் | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| பொறுப்பு முயற்சியிலிருந்து இ.மு.சபைக்கு கிடைக்க வேண்டியவைகள் | 623,861,381 | 631,911,594 | 593,483,063 | 539,768,967 | 489,179,378 | 572,994,819 |
| ஐயக்கடன்களிற்கான ஏற்பாடு | 270,141,090 | 249,452,238 | 227,775,883 | 199,355,398 | 140,704,693 | 94,017,637 |
| மொத்தக் கிடைக்க வேண்டியவற்றின் சதவீதமாக ஐயக் கடன்களிற்கான ஏற்பாடு | 43% | 39% | 38% | 37% | 29% | 16% |
| பதிவழிக்கப்பட்ட நட்டக் கடன்கள் | 73,113,266 | 8,306,417 | 9,279,995 | 8,994,408 | 45,234,172 | 26,465,290 |

இவை தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொறுப்பு முயற்சிகளிலிருந்து இ.மு.சபைக்குக் கிடைக்க வேண்டிய ஐயக்கடன்களிற்கான ஏற்பாடு மூடப்பட்ட மற்றும் இரத்துச் செய்யப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான கடன்பட்டோருக்காக 100 சதவீத ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டமை காரணமாக 2006 இல் உள்ள 16 சதவீதத்திலிருந்து 2011 இல் 43 சதவீதமாக சடுதியாக அதிகரித்திருந்தமை நலிந்த அறவீட்டுத் தன்மையைக் காட்டுகின்றது.

(ii) மூடப்பட்ட மற்றும் இரத்துச் செய்யப்பட்ட செயற்திட்டங்களைத் தவிர ரூபா 41,042,493 தொகையான நில வாடகை, ஆண்டுக் கட்டணங்கள், நீர்ப்பட்டியல்கள் மற்றும் அலுவலக வாடகைகள் தொடர்பான 4 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையிலுள்ள கடன்களிற்காக நிதிக் கூற்றுக்களில் குறித்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) பல ஆண்டுகளாக நிலுவையாக உள்ள 03 பொறுப்பு முயற்சிகளிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 27,423,101 தொகையான நிதி உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான கட்டணங்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எதனையும் இ.மு.சபை எடுத்திருக்காததுடன் அந்த தொகைக்காக 100 சதவீத ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(vi) ரூபா 623,861,381 ஆன மொத்தக் கிடைக்க வேண்டியவைகளில் ரூபா 197,445,217 அல்லது 32 சதவீதம் 4 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தன.

(v) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 229,294,809 தொகையான மொத்த ஆண்டுக் கட்டணங்களில் ரூபா 160,470,388 அல்லது 70 சதவீதமான நட்ட மற்றும் ஐயக்கடன்களிற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய கடன்பட்டோர்கள்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இ.மு.சபைக்குக் கிடைக்க வேண்டிய ஏனைய கடன்பட்டோர்களின் நீண்ட காலமாக நிலுவையான மீதிகள் மற்றும் ஐயக் கடன்களிற்கான ஏற்பாடு மற்றும் பதிவழிக்கப்பட்ட நட்டக் கடன்கள் என்பவற்றின் விபரங்கள் முன்னைய நான்கு ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு கிழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஏனைய கடன்பட்டோர்கள் | 61,204,152 | 103,810,214 | 102,967,791 | 103,349,904 | 106,259,198 |
| ஐயக் கடன்களிற்கான ஏற்பாடு | 7,688,630 | 48,234,339 | 48,171,157 | 48,199,816 | 48,418,013 |
| மொத்த கிடைக்க வேண்டியவைகளின் சதவீமாக ஐயக்கடன்களிற்கான ஏற்பாடு | 13 | 46 | 47 | 47 | 46 |
| பதிவழிக்கப்பட்ட நட்டக் கடன்கள் | 40,378,653 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஏனைய கடன்பட்டோர்களில் ஐயக் கடன்களிற்கான ஏற்பாடு முன்னைய நான்கு ஆண்டுகளில் கிட்டத்தட்ட 45 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. 2010 ஆம் ஆண்டின்இறுதியிலுள்ள மொத்த ஏனைய கடன்பட்டோர்களில் நான்காண்டுகளிற்கு மேல் நிலுவையாக உள்ள மூன்று அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 40,378,653 ஆன ஒதுக்கீட்டு தொகை அல்லது 39 சதவீதம் நி.பி 108 இற்கு முரணாக மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ii) ஏனைய கடன்பட்டோர்களின் காலப்பகுப்பாய்வின்படி, நான்கு ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாகஉள்ள தொகை ரூபா 59,206,839 ஆக அல்லது மொத்த ஏனைய கடன்பட்டோர்களின் 97 சதவீதமாக இருந்தன.

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிக்கான தொடர்பு | விபரங்கள் |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 10(3) ஆம் பிரிவு | இ.மு.சபை சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் பொதுத் திறைசேரி ஆகியவற்றின் அங்கீகாரம் பெறாது பதவியினர் நலனோம்பு நிதியத்தைப் பேணியிருந்தது. |
| (ஆ) | 2000 சனவரி 31 ஆம் திகதிய பீஎவ்/பீஈ 6 ஆம் இலக்க அரச நிதி சுற்றுநிரூபம் | இ.மு.சபை சுற்றுநிரூப அறிவுறுத்தல்களிற்கு முரணாக தனது அலுவலர்களின் சார்பில் தனது சொந்த நிதிகளிலிருந்து உழைக்கும் பொழுதே செலுத்தும் வரியை (பீஏவைஈ) செலுத்தியிருந்தது. 1997 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியில் அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 147,190,308 ஆகும். |

(இ) 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிரூபம், 2007 சனவரி 02 ஆம் திகதிய டிஎம்எஸ்/ஏ2/பீஓஜ ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களக் கடிதம் (2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிரூபத்தின் அடிப்படையிலமைந்தது) மற்றும் 2008 யூன் 26 ஆம் திகதிய 14/2008 ஆம் இலக்க அரச நிருவாக சுற்று நிருபம் அலுவலக சாரதிக்குப் பதிலாக தனிப்பட்ட சாரதியை ஈடுபடுத்துவதற்கு விரும்பத் தெரிவு செய்யத தனது நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களிற்கு ரூபா 15,000 மாதாந்தப் படி, வருகை ஊக்குவிப்பு மற்றும் தொழில்சார் படிகள் என்றவாறான படிகள் இ.மு.சபையின் ஊழியர்கள் வேண்டப்பட்ட அங்கீகாரமின்றி அனுபவித்திருந்தனர். 2010 ஆண்டிற்காக இ.மு.சபையால் அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 80,966,370 ஆகும்.

## 3. நிதிசார் மீளாய்வு

### நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் இ.மு.சபையின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 83,596,097 ஆன தேறிய மிகையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 142,668,020 ஆன நேரொத்த தேறிய மிகையுடன் ஒப்பிடுகையில் உடன்படிக்கை செயன்முறைக் கட்டணங்களிலிருந்தான வருமானத்தின் குறைவு மற்றும் பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் கணணிகள் மற்றும் அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு செலவினங்களின் அதிகரிப்பு என்ற காரணங்களினால் தேறிய மிகையில் ரூபா 59,071,923 ஆன குறைவைக் காட்டுகின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) மீளாய்வாண்டிற்கான ஏற்றுமதி செயன்முறை வலயங்கள், ஏற்றுமதி செயன்முறைப் பேட்டை, கைத்தொழில் பேட்டைகள் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் புதிய பொருளாதார வலயங்கள் என்பவற்றின் செயலாற்றல்கள் முன்னைய நான்கு ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

| ஆக்கக் கூறு | ஆண்டிற்கான தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் வரிக்கு முன்னருள்ள மிகை / (நட்டம்) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 |
| | (ரூபா.“000) | (ரூபா.“000) | (ரூபா.“000) | (ரூபா.“000) | (ரூபா.“000) |
| தலைமை அலுவலகம் | 12,735 | 45,582 | 55,205 | 3,181 | 85,555 |
| ஏற்றுமதி செயன் முறை வலயங்கள் | | | | | |
| - கட்டுநாயக்கா | 45,528 | 47,687 | 14,016 | 50,120 | 45,271 |
| - பியகம | (51,989) | (36,989) | (39,927) | (11,078) | (14,627) |
| - சீதாவாக்க | 121,715 | 108,245 | 87,203 | - | - |
| - மீரிகம | (11,418) | (11,584) | (18,720) | (22,978) | (16,624) |
| - வத்துபிட்டிவெல | (15,743) | (13,703) | (12,787) | (11,872) | (18,214) |
| - ஹொறணை | 30,578 | 27,430 | (1,439) | 4,252 | 4,665 |
| - மாவத்தகம | (7,418) | 8,412 | (20,021) | (6,986) | (4,869) |
| - பொல்காவலை | (2,170) | (4,167) | (5,308) | (4,689) | (4,977) |
| - கொக்கல | (26,980) | (17,503) | (23,149) | (23,412) | (42,364) |
| ஏற்றுமதி செய்முறை பேட்டை | | | | | |
| - மல்வத்த | (3,226) | (3,458) | (3,639) | (2,576) | (6,237) |
| கைத்தொழில் பேட்டைகள் | | | | | |
| - கண்டி | 29,388 | 16,491 | (3,082) | (2,236) | (4,929) |
| - மிரிஜ்ஜவல | 238 | 341 | 643 | (2,561) | (19,214) |
| - சீதாவாக்க | இல்லை | இல்லை | இல்லை | 100,158 | 149,401 |
| பிராந்திய அலுவலகங்கள் | | | | | |
| - வடமேல் | 22,256 | 12,112 | 14,001 | 9,285 | 3,587 |
| - வட கிழக்கு | 6,493 | 3,780 | 648 | 1,123 | (339) |
| - மத்திய | இல்லை | இல்லை | 18,698 | 13,285 | 11,971 |
| - தெற்கு | இல்லை | இல்லை | (3,546) | (1,416) | (5,310) |
| **மொத்தம்** | **149,987** | **182,676** | **58,796** | **91,600** | **162,746** |

9 ஏற்றுமதிச் செயன்முறை வலயங்கள் (ஈபீசற்) ஒரு ஏற்றுமதி செயன்முறைப் பேட்டை, (ஈபீபீ) 2 கைத்தொழில் பேட்டைகள் (ஐபீ) மற்றும் 2 பிராந்திய அலுவலகங்கள் (ஆர்ஓ) என்பவற்றினூடாக இ.மு.சபை தனது பணிகளை மேற்கொண்டிருந்தது. மேற்படி, தகவல்களின்படி, பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 8 ஏற்றுமதி செயன்முறை வலயங்களில் (சீதாவாக்கை ஈபீசற் 2009 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது) 2007 தொடக்கம் 2011 வரையான நான்காண்டு காலபகுதியில் ஒரு வலயம் மாத்திரமே தொடர்ந்து இலாபத்தை உழைத்திருந்தது.

(ii) அந்தக் காப்பகுதியில் 5 ஈபீசற்கள் தொடர்ந்து நட்டங்களையே அடைந்திருந்ததுடன் ஒரே ஒரு ஏற்றுமதி செயன்முறை பேட்டையும் இந்தக் காலப்பகுதியில் நட்டங்களையே அடைந்திருந்தது.

(iii) அதற்கு மேலாக தலைமை அலுவலகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் வரிக்கு முன்னருள்ள மிகையானது 2009 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதிக்கிடையில் ரூபா 55.2 மில்லியனிலிருந்து ரூபா 12.7 மில்லியனாக அல்லது 77% ஆல் பாராதூரமாக குறைவடைந்திருந்தது.

(iv) மேலும், பியகம ஈபீசற்றின் தொடர் நட்டம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 15 மில்லியன் அல்லது 41% ஆல் அதிகரித்திருந்தது.

(v) இரண்டு பிராந்திய அலுவலகங்களின் இலாபகத் தன்மை முன்னேற்றத்தைக் காட்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் வரிக்கு முன்னரான மொத்த இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 32.7 மில்லியன் அல்லது 17.9% ஆல் குறைவடைந்திருந்தது.

எனினும், முகாமைத்துவத்தின் கருத்துரைகளின் படி, அதிகமான ஈபீசற்கள் வேலைவாய்ப்பு உருவாக்கத்தைப் பெருக்குவதற்கும் பிராந்திய வளர்ச்சிக்காகவும் உருவாக்கப்பட்டனவே தவிர இலாபத்தை உழைப்பதை மட்டும் நோக்கமாக கொண்டமைந்தவை அல்ல என்பதாகும்.

**(ஆ) இ.மு.சபை செயற்திட்டங்களின் முன்னேற்றம்**

2011 ஆம் ஆண்டில் இ.மு.சபைக் கட்டளைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டவை மற்றும் இரத்துச் செய்யப்பட்ட மற்றும்

மூடப்பட்ட அல்லது இடை நிறுத்தப்பட்ட செயற்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை முன்னைய 10 ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | உடன்படிக்கை கைச்சாத்திட்ட செயற்திட்டங்கள் v1 | இரத்துச் செய்யப்பட்ட செயற்திட்டங்கள் v2 | மூடப்பட்ட அல்லது இடை நிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள் v3 | இரத்துச் செய்யப்பட்ட மற்றும் மூடப்பட்ட அல்லது இடை நிறுத்தப்பட்ட செயற்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | எண்ணிக்கை | |
| 2001 | 185 | 78 | 1 | 79 |
| 2002 | 202 | 68 | 3 | 71 |
| 2003 | 272 | 55 | 3 | 58 |
| 2004 | 274 | 75 | 7 | 82 |
| 2005 | 208 | 121 | 8 | 129 |
| 2006 | 258 | 113 | 14 | 127 |
| 2007 | 310 | 119 | 18 | 137 |
| 2008 | 252 | 107 | 22 | 129 |
| 2009 | 182 | 93 | 33 | 126 |
| 2010 | 269 | 124 | 61 | 185 |
| 2011 | 161 | 46 | 30 | 76 |
| மொத்தம் | 2,573 | 999 | 200 | 1,199 |

குறிப்பு :- செயற்திட்டங்களின் தற்போதைய நிலைமைகளின் படியான தகவல்கள்

v1 உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டவை / மூடப்பட்டவை / தொழிற்பாடு இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் விரிவாக்ககல் உள்ளடங்கலாக

v2 வியாபார தொழிற்பாடு ஆரம்பித்த பின்னர் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டவை (விரிவாக்கல் இரத்துச் செய்யப்பட்டவை நீங்கலாக)

v3 வியாபார தொழிற்பாடு ஆரம்பித்த பின்னர் மூடப்பட்டவை /இடைநிறுத்தப்பட்டவை (மூடப்பட்டவை / விரிவாக்கல் இடைநிறுத்தப்பட்டவை நீங்கலாக)

மூலம்:- எம்ஜஎஸ் பீஓஜ

2001 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியில் இ.மு.ச செயற்திட்டங்களிற்காக 2,573 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2007 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கை 310 இலிருந்து 161 ஆக பெருமளவில் குறைந்திருந்தது. 2001 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியில் இரத்துச் செய்யப்பட்ட மற்றும் மூடப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை 1,199 ஆக இருந்தது. மேலும், 2001 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட செயற்திட்டங்களில் இரத்துச் செய்யப்ப்பட்ட அல்லது மூடப்பட்ட மற்றும் இடைநிறுத்தப்பட்ட செயல் திட்டங்களின் எண்ணிக்கை 322 ஆக அதாவது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட செயற்திட்டங்களின் மொத்த எண்ணிக்கையில் 12.5 சதவீதமாக இருந்தது.

(ii) இ.மு.சபையின் எம்ஜஎஸ்தில் உள்ளடக்கப்பட்டவாறான செயற்திட்டங்களின் நடைமுறை தொழிற்பாட்டு நிலைவரத்தின்படி 1978 இன் ஆரம்பத்திலிருந்து 2011 திசெம்பர் 31 வரை, இ.மு.சபை கட்டளைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை (விரிவாக்கல் தவிர) அங்கீகாரம் வழங்கப்பட்டவை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டவை வியாபார தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டவை பற்றிய விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | அங்கீகாரம் வழங்கப்பட்டவை | | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டவை | | வியாபார தொழிற்பாடு ஆரம்பிக்கப்பட்டவை | | உடன்படிக்கை கைச்சாத்திட்ட செயற்திட்டங்களின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டில் | திரண்ட | ஆண்டில் | திரண்ட | ஆண்டில் | திரண்ட | ஆண்டில் | திரண்ட | |
| 2005 வரை | | 6151 | | 5554 | | 3623 | | 2529 | 70 |
| 2006 | 512 | 6663 | 350 | 5904 | 258 | 3881 | 129 | 2658 | 68 |
| 2007 | 609 | 7272 | 652 | 6556 | 310 | 4191 | 149 | 2807 | 67 |
| 2008 | 472 | 7744 | 460 | 7016 | 252 | 4443 | 189 | 2996 | 67 |
| 2009 | 448 | 8192 | 384 | 7400 | 182 | 4625 | 126 | 3122 | 67 |
| 2010 | 456 | 8648 | 364 | 7764 | 269 | 4894 | 140 | 3262 | 67 |
| 2011 | 218 | 8866 | 160 | 7924 | 161 | 5055 | 86 | 3348 | 66 |

- மேற்படி திரண்ட தகவல்களின்படி இ.மு.சபை கட்டளைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் இ.மு.சபை செயற்திட்டங்களிற்காக 8866 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் 1978 ஆம் ஆண்டின் ஆரம்பித்திலிருந்து 2011 திசெம்பர் 31 வரை 7924 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. எனினும், 5,055 செயற்திட்டங்களிற்கு மட்டுமே உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன.

உடன்படிக்கை கைச்சாத்தான செயற்திட்டங்களில் 3,348 செயற்திட்டங்கள் அல்லது 66 சதவீதம் மாத்திரமே வியாபார தொழிற்பாடுகளை ஆரம்பித்திருந்தன.

- மேலும் இ.மு.சபையின் நடைமுறை தொழிற்பாட்டு நிலைவரத்தின்படி, செயற்திட்டங்களின் மேற்படி 4 வகைகளும் அதாவது விண்ணப்பங்கள் கிடைத்தவை, அங்கீகாரம் வழங்கப்பட்டவை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டவை மற்றும் வியாபார தொழிற்பாடுகளை ஆரம்பித்த செயற்திட்டங்கள் என்பவை 2008 இலிருந்து படிபடியாகக் குறைவடைந்திருந்தன.

(iii) 2005 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியில் இ.மு.சபையினூடாக மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் உள்நாட்டு தேறிய முதலீடுகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (எவ்டிஐ) | உள்நாட்டு தேறிய முதலீடுகள் |
|---|---|---|
| | ஐ.அ.டொலர் (மில்) | ஐ.அ.டொலர் (மில்) |
| 2005 | 287.2 | 350 |
| 2006 | 603.7 | 400 |
| 2007 | 734.4 | 490 |
| 2008 | 888.9 | 226 |
| 2009 | 601.3 | 151 |
| 2010 | 516.3 | 433.4 |
| 2011 | 1066.1 | 426.6 |

மீளாய்வாண்டில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 106 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் உள்நாட்டு முதலீடுகளில் எதுவித முன்னேற்றமும் இருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ திறமையின்மைகள்

2010 ஆம் ஆண்டிற்கான இ.மு.சபையின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் விடயங்கள் 2011 திசெம்பர் 31 வரையிலும் கூட தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(அ) 2000 திசெம்பர் 29 இல் நிலவிய விலை வீதங்கள் ஆண்டிற்கு 6.9 சதவீதத்திற் மேல் அதிகரித்திருந்தால் மின்சார விலைப்பட்டியலை மீளளிப்புச் செய்வதென ஹோறண ஏற்றுமதி செயன்முறை வலயத்திலுள்ள ஒரு இறப்பர் உற்பத்திக் கம்பனியுடன் இ.மு.சபை உடன்பட்டிருந்தது. இந்த ஒழுங்கிற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டதுடன்,

இந்த அடிப்படையில் கம்பனியானது 2002 யூனியிலிருந்து 2007 செப்தெம்பர் வரையான காலப்பகுதியில் அதிகரிக்கப்பட்ட மின்சார விலைப்பட்டியல் வீதங்கள் தொடர்பாக ரூபா 356,793,568 தொகையை கோரிக்கை செய்திருந்தது. மேலும், சர்வதேச வர்த்தக குழுவின் மத்தியஸ்தத்திற்கான சர்வதேச நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட இறுதித் தீர்மானத்தின் பிரகாரம் இழப்பீட்டுத் கொடுப்பனவின் தாமதத்திற்கான வட்டி மற்றும் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட மத்தியஸ்த கிரயம் என்பவை தொடர்பாக ரூபா 388,161,877 ஆன தொகையும் கோரப்பட்டிருந்தது. மத்தியஸ்த மன்றம் கம்பனிக்குச் சாதாகமான தீர்ப்பை வழங்கியிருந்தது. இந்த விடயம் இன்னமும் நீதிமன்ற வழக்கின் கீழ் உள்ளது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இ.மு.சபை இது சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களில் எவ்வித நிதி ஏற்பாட்டையும் மேற்கொள்ளவில்லை.

(ii) இந்த செயற்திட்டத்திற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு முன்னர் இந்த பிரதேசத்தில் பயன்பாட்டிற்குத் தேவையான இறப்பர் மரங்கள் இருக்கின்றனவா என்பதை இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் என்பவற்றிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கையை இ.மு.சபை பெற்றிருக்கவில்லை.

(iii) இ.மு.சபையானது, இ.மு.சபைக்கு சாதகமற்ற உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்ததுடன் அதற்கு மேலும் இ.மு.சபையின் அக்கறையைப் பாதுகாக்காது கம்பனிக்கு விதிவிலக்கான சலுகைகளையும் வழங்கியிருந்தது. இ.மு.சபை கம்பனிக்கு மேலதிக காணிகளையும் குத்தகைக்கு வழங்கியிருந்தது. ஆனால் காணியின் குறிப்பிடத்தக்க பரப்பளவு பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்தது.

(iv) அதன் பிரகாரம் இந்தக் கம்பனியிடமிருந்து இ.மு.சபைக்கு கிடைக்க வேண்டிய நில வாடகை, நீர்ப்பட்டியல்கள், மற்றும் பங்களா வாடகை முதலியன இந்தக் காலப்பகுதிக்கு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேர்த் தோட்டம் இ.மு.சபையால் கொள்வனவு செய்யப்பட்டதுடன் தோட்டத்தின் ஒரு பகுதி 5 ஆண்டுகள் காலத்திற்கு முகாமைத்துவத்திற்காக அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தோட்டத்திலுள்ள கட்டிடங்கள், பெறுமதிமிக்க மரங்கள் போன்ற சொத்துக்கள் கூட கொள்வனவிற்குப் பின்னர் செவ்வை பார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) காலப்பகுதி முடிந்த பின்னர் உடன்படிக்கை மீளாய்வு செய்யப்பட்டிருக்காததுடன் 5 ஆண்டுகள் முடிந்ததும் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கவோ அல்லது முடிவுறுத்தவோ அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நிறுவனத்தின் கணக்குகள் 2006 இலிருந்து இ.மு.சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(vi) 2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 10 மில்லியன் தொகையைத்தவிர இ.மு.சபைக்கு கூட்டுத்தாபனம் ஒழுங்காக இலாபங்களை அனுப்பியிருக்கவில்லை.

(v) பேர்த் தோட்டத்தின் இலாபத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட நிலையான வைப்புக்களை ஈடாக வைத்து இ.மு.சபையிடமிருந்து கூட்டுத்தாபனம் பணத்தை கடனாக பெற்றிருந்தது.

(vi) இலாபத்தின் பங்கான ரூபா 40.4 மில்லியனில் நிதி முகாமைத்துவத்தின் நலிவுற்ற கண்காணிப்பின் விளைவாக ரூபா 30 மில்லியனை இ.மு.சபை சேகரிக்க முடியாமற் போய்விட்டது.

(vii) அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் (எஸ்எல்எஸ்பீசீ) பெற்ற தகவல்களின்படி, பெருந் தோட்ட நடைமுறைக் கணக்கிலுள்ள மீதியில் ரூபா 22,232,590 தொகை நிலையான வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் சொல்லப்பட்ட அந்த நடைமுறைக் கணக்கில் ரூபா 16,321,251 ஆன மீதித் தொகை இருந்தது. எனினும், இ.மு.சபை இந்த விடயத்தை 2011 நொவம்பர் 15 மற்றும் 2012 நொவம்பர் 14 இல் நடைபெற்று பொது முயற்சிகள் குழுவினால் அறிவுறுத்தப்பட்டவாறு தீர்ப்பதற்கு 2013 பெப்ரவரி இறுதி வரை தவறியிருந்ததுடன் அதற்குப் பதிலாக எட்டு ஆண்டு காலத்திற்காக எஸ்எல்எஸ்பீசீ இடம் இருந்து இ.மு.சபைக்கு ரூபா 16.4 மில்லியன் தொகை கிடைக்க வேண்டியுள்ளதாக மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(viii) முகாமைத்துவக் கட்டணம் ஒப்பந்தக்காரால் ஒரு தலைப்பட்சமாக 15 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

(ix) போர்த் தோட்டத்தின் முகாமைத்துவத்திற்காக ஒரு புறம்பான வங்கிக் கணக்கு பேணப்பட வேண்டுமென்று தேவைப்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனைக்கு முரணாக போர்த் தோட்டத்தின் வருமானத்தின் ஒரு தலைப் பட்ச பயன்படுத்தலைத் தடுக்க தவறியமை

(x) போர்த் தோட்டத்திலிருந்து உருவாக்கப்பட்ட ரூபா 20 மில்லியன் தொகையான வருமானத்தின் முதலீடு ஒப்பந்தக்காரரின் பெயரில் நிலையான வைப்பிலிடப்பட்டதுடன் வைப்புச் சான்றிதழ்கள் வங்கி மேலதிகப் பற்று பெறப்பட்டதற்காக பிணை வைக்கப்பட்டிருந்தன.

(xi) ஒப்பந்தக்காரரின் நடைமுறைக் கணக்கினூடாக ரூபா 12.42 மில்லியன் தொகையான மோட்டார் வாகனங்களின் வாடகை மற்றும் பங்களா வாடகை என்பவற்றின் அங்கீகார மற்ற மாற்றம்

(xii) போர்த் தோட்டத்தில் பேணப்பட்ட அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நடைமுறைக் கணக்கில் தோன்றிய ரூபா 16 மில்லியனின் முதலீடு கூட்டுத்தாபனத்தின் பெயரில் நிலையான வைப்புக்களிலிருந்ததுடன் ரூபா 1,576,978 தொகையான அதன் மீதான வட்டியை தனது சொந்தத் நோக்கங்களிற்காக பயன்படுத்தியமை.

(xiii) 1999 திசெம்பர் 09 இன் 278 ஆம் இலக்க உறுதி மாற்றத்தின் பட்டோலையிலுள்ளவாறான காணியின் பரப்பு மற்றும் 1997 யூன் 17 இன் 980/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலிலுள்ள காணியின் பரப்பு மற்றும் காணிகளின் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட காணியின் பரப்பு என்பவற்றிக்கிடையில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க குறைபாடுகள் அதற்கான காரணங்களை உறுதிப்படுத்தி சீராக்கும் நடவடிக்கை எடுக்கும் நோக்கில் புலனாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. 241 ஏக்கர் காணியின் குறைந்த மதிப்பீடு அந்தக் காணியை பயனுறுதிமிக்தாகப் பயன்படுத்தப்பட்டதா என்பதை உறுதி செய்வதற்காக முறையாக புலனாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) போர்த் தோட்டத்தின் காணியின் பரப்பளவு (700 கெக்டெயர்கள் (1,729 ஏக்கர்கள்) சுவீகரிக்கப்பட்டது) 1999 திசெம்பர் 09 இன் 278 ஆம் இலக்க உறுதி மாற்றத்தின் மூலம் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 120 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட காணி 2009 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட நில அளவையின் படி குறிப்பிடப்பட்டளவுக்கு குறைத்திருந்தது.

மேலும், காணியின் சில பகுதிகளின் பரப்பளவு மற்றும் பெறுமதிகள் காணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அத்தகைய காணித்துண்டுகள் தொடர்பான அளவைப் படங்கள் கிடைத்திருக்கவில்லை.

| விபரம் | உறுதியின்படி காணியின் மொத்தப் பரப்பு | இடையில் வித்தியாசம் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | | மாற்றிய உறுதி | மாற்றிய உறுதியின் பட்டோலை | |
| | கெக்டயர் | கெக்டயர் | கெக்டயர் | |
| காணி சுவீகரிக்கப்பட்டதை அடுத்து இ.மு.சபையினால் நடாத்தப்பட்ட முதலாவது நில்அளவை (2000 ஏப்ரல் 03 இன் 1786 ஆம் இலக்க அளவைப்படம்) | 692.52 (1,711 ஏ.1றூ. 0 பே) | 7.48 (18ஏ - 1றூ - 37 பே) | 123.45 (305ஏ - 0றூ. 8பே) | இ.மு.சபை சுவீகரித்த காணியின் உண்மையான பரப்பிலும் பார்க்க அதிகம் செலுத்தியிருந்தது. |
| இ.மு.சபையின் தொழில் நுட்ப சேவைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அடுத்த நிலஅளவை | 645.08 (1,594 ஏ – 0றூ - 4பீ) | 54.92 (135ஏ – 2றூ – 34பே) | 170.89 (422 ஏ – 1றூ – 4பே) | காணிகளில் பாரிய குறைவுகள் இருந்தது |
| 2009 இல் மேற்கொள்ளப்பட்ட இ.மு.சபையின் காணியின் ஆய்வு மற்றும் மீள் மதிப்பீட்டின் அடிப்படையில் தகைமை பெற்ற விலை மதிப்பீட்டாளரால் தயாரிக்கப்பட்ட இ.மு.சபையின் காணிப் பதிவேடு | 593.54 (1,466 ஏ – 2றூ – 27பே) | 106.46 (263 ஏ – 0றூ – 11பே) | 222.43 (549ஏ – 2றூ – 22பே) | இ.மு.சபைக்கு சொந்தமான காணியின் மொத்தப் பரப்பு மேலும் குறைந்திருந்தது. |

## 4.3 தொழிற்பாட்டு திறமையின்மைகள்

2011 ஆம் ஆண்டிற்காக முதலீட்டு மேம்பாட்டு செலவினமாக இ.மு.சபை ரூபா 22,295,456 ஆன தொகையை செய்திருந்தது. இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## (அ) முதலீட்டு மேம்பாட்டு திட்டமிடல்

நல்லாளுமைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டின் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிரூபத்தின் 9.2 ஆம் பிரிவின் படி ஒவ்வொரு பொது முயற்சியும் அந்த நிறுவனத்தின் சபையின் அங்கீகாரத்துடனான முதலீட்டு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நடவடிக்கைத் திட்டம் என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்கான முதலீட்டு மேம்பாட்டுத்திட்டமோ அல்லது நடவடிக்கைத் திட்டமோ தயாரிக்கப்பட்டு முறையாக அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 ஆம் ஆண்டிற்கான முதலீட்டு மேம்பாட்டு செலவினம் முறையாகப் பாதீடு செய்யப்பட்டிருக்காததுடன் அதன் பிரகாரம் மேம்பாட்டு மற்றும் ஊடக திணைக்களத்தால் வேண்டிக்கொள்ளப்பட்ட ரூபா 72 மில்லியன் பாதீட்டில் அந்த நோக்கத்திற்காக ரூபா 27.5 மில்லியன் மாத்திரமே ஒதுக்கப்பட்டதுடன் அதில் மீளாய்வாண்டில் ரூபா 22.3 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

## (ஆ) முதலீட்டு மேம்பாட்டு நடவடிக்கைகள் மீதான கட்டுப்பாடு

2011 ஆம் ஆண்டில் சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்ற ''சர்வதேச மகளிர் தின வைபவத்தை'' ஒழுங்கு செய்யும் நோக்கில் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்திற்கு இ.மு.சபையால் ரூபா 3 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், இந்த நிகழ்ச்சித் திட்டம் ஒரு முதலீட்டு மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டமாக இனங்கானப்பட்டிருக்கவில்லை. மேலும் இ.மு.சபை முதலீட்டு மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றை முதலீட்டு மேம்பாட்டு இலக்குகளை அடையும் நோக்கில் முறையாக வடிவமைத்து பேணியிருக்கவில்லை.

(இ) இலங்கை முதலீட்டுச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட இ.மு.சபை முயற்சிகளின் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் அத்தகைய முயற்சிகளின் செயலாற்றல் சபையால் தாக்கமான முறையில் கண்காணிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

இ.மு.சபை 2007 திசெம்பர் 31 இல் ரூபா 530 மில்லியன் கிரயத்தில் உலக வர்த்தக மையத்தின் (டபிள்யூரீசீ) மேற்குக் கோபுரத்தில் 04 மாடி அலகுகளைக் கொள்வனவு செய்திருந்ததுடன் பின்னர் குத்தகை அடிப்படையில் 2000 செப்தெம்பரிலிருந்து இ.மு.சபை இருக்கும் அதே கோபுரத்தில் இன்னொரு 5 அலகுகளை 2008 மார்ச் 05 இல் 625 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்திருந்தது. இவை தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 128 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆறாம் கட்டம் வாடகைக்குக் கொடுப்பதற்காக 2011 யூலை 01 இலிருந்து அமுலாகுமாறு முற்றாக வெற்றிடமாக்கப்பட்டது. எனினும் அந்தத் தளப் பரப்பு இது வரை எதுவித பொருளாதார நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்படாது 2013 பெப்ரவரி வரை பயன்பாடின்றியிருந்தது. அதன் பிரகாரம் தாக்கமற்ற முகாமைத்துவம் காரணமாக இ.மு.சபைக்கு சொந்தமான ஆதனத்தில் அண்ணளவாக ரூபா 11.4 மில்லியன் மதிப்பிடப்பட்ட நட்டம் 2011 யூலை 01 தொடக்கம் திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக இ.மு.சபைக்கு ஏற்பட்டிருந்தது.

(ஆ) உலக வர்த்தக மையத்தின் மேற்குக் கோபுரத்திலுள்ள 09 மாடிகளில் 2781 ச.அடி, பரப்பளவு வரிசை அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 6,318 ச.அடி தளப்பரப்பு பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கும் உடன்படிக்கை எதுவும் கைச்சாத்திடப்படாமலும் அந்தத் தளப்பரப்பை பயன்படுத்துவதற்கான வாடகை எதுவும் தாக்கல் செய்யாமலும் ஒதுக்கப்பட்டிருந்தது. அத்தகைய வசதியை ஏற்பாடு செய்வதற்கான சபை அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்படி அமைச்சுக்களின் சார்பில் தனது சொந்த நிதிகளிலிருந்து அலுவலக வாடகையாக ரூபா 18,141,499 தொகையும் மின்சாரக் கட்டணங்களாக ரூபா 832,882 தொகையும் இ.மு.சபையால் செலவிடப்பட்டிருந்தது.

## 4.5 மனிதவள முகாமைத்துவம்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

### (அ) ஆளணி முகாமைத்துவம் மீதான கட்டுப்பாடு

மாற்றங்களிற்கான தேவையை ஈடுசெய்வதற்காக விரைவுபடுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் நடைமுறைமைகளுடன், ஆளணி முகாமைத்துவம் மீது

தாக்கமான கட்டுப்பாடு பிரயோகிக்கப்பட வேண்டிய போதிலும், இ.மு.சபையானது 2003 யூன் 02 ஆம் திகதிய பீ‌ஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.3 ஆம் பிரிவின் பிரகாரம் அந்தத்த தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முறையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் பருவகால மீளாய்வுடன் கூடிய ஆளணி மட்டங்களில் யதார்த்தமற்ற முகாமைத்துவம் காரணமாக மிளாய்வாண்டில் வித்தியாசமான வகைகளில் 122 வெற்றிடங்கள் இருந்தன. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான நிறைவேற்றுப் பதவியினரில் 70 (உள்ளகக் கணக்காய்வுப் பணிப்பாளர் பதவி உள்ளடங்கலாக) எழுதுனர் மற்றும் இணைந்த தர பதவியினரில் 34 மற்றும் பொதுச் சேவைப் பதவியினரில் 18 என்பன உள்ளடங்கலாக பதவியினரில் பல்வேறு வகைகளிலிருந்த 122 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டன.

(ii) குறிப்பாக முகாமைத்துவ மட்டங்களில் அத்தகைய பதவி வெற்றிடமாகும் போது பொறுப்பெடுப்பதற்காக பதவி நிலைப்படுத்தப்பட்ட கற்கையுடன் கூடிய முறையான தொடர் திட்டம் இ.மு.சபையால் நிறுவப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) 2003 யூன் 02 ஆம் திகதிய பீ‌ஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.3.9 ஆம் பிரிவின் படி, வரிசை அமைச்சின் சார்பில் எந்தச் சந்தர்ப்பத்திலும் செலவினங்களைச் செய்வதோ அல்லது தனது வளங்களை ஈடுபடுத்துவதோ (மனிதவளங்கள் உட்பட) பொது முயற்சிகளுக்கு அனுமதிக்கப்பட்டிருக்காததுடன் மேற்படி சுற்றுநிருபத்தின் 9.4 ஆம் பிரிவின் படி, பொது முயற்சியின் ஊழியர் ஒருவர் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி அமைச்சிற்கு விடுவிக்கப்படக்கூடாததுடன் அத்தகைய காலத்திற்காக விடுவிக்கப்பட்ட ஊழியரிற்கு வேதனங்களெதனையும் பொது முயற்சி செலுத்தக் கூடாது. மேலும், 2004 சனவரி 08 ஆம் திகதிய 21 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் படி சகல அமைச்சுக்களின் செயலாளர்களும் அமைச்சின் நோக்கங்களிற்காக பொது முயற்சிகளின் வளங்கள் பயன்படுத்தக் கூடாதுதென்பதை உறுதி செய்யும்படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எனினும், இ.மு.சபையின் 10 ஊழியர்கள் முன்னைய அமைச்சுடன் இணைக்கப்பட்டிருந்ததுடன் இ.மு.சபை பதவியினரில் 5 ஊழியர்கள் முறையான அங்கீகாரம் பெறப்படாது தற்போதைய அமைச்சுடனும் இணைக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. இ.மு.சபை, 2009 ஆம் ஆண்டிலிருந்து அந்த ஊழியர்களிற்காக சம்பளங்கள் மற்றும் ஏனைய படிகளாக ரூபா 10,615,864 ஆன தொகைகளைச் செலுத்தியிருந்தது.

(ஆ) **தன்னார்வ இளைப்பாறும் திட்டம் (வீஆர்எஸ்)**

இ.மு.சபை தனது ஊழியர்களிற்கு, அவர்களின் வெற்றிடங்கள் நிரப்படவோ அல்லது அந்த நோக்கத்திற்காக விடுவிக்கப்பட முடிந்த இன்னொருவரால் அந்த வெற்றிடம் நிரப்பப்படக் கூடுமென்ற ஏற்பாட்டில் முதிர்ச்சிக்காலத்திற்கு முன்னர் இளைப்பாற விரும்புகிறவர்களிற்கு தன்னார்வ இளைப்பாறல் திட்டத்தை (வீஆர்எஸ்) வழங்கியிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டில் நட்டஈடாக ரூபா 58,836,386 தொகையைச் செலுத்தியிருந்தது. 2003 மே 28 ஆம் திகதிய பீஈடி/10 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின்படி நட்டஈட்டைக் கணிப்பிடும் நோக்கத்திற்கான இளைப்பாறும் வயது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் நியமனக் கடிதத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு 55 ஆண்டுகள் அல்லது 60 ஆண்டுகளாக இருக்க வேண்டும் நியமனக் கடிதத்தின்படி, அரச கூட்டுத்தாபனங்களிலுள்ள ஊழியர்களின் இளைப்பாறுதலைத் தீர்மானிக்கும் அரசாங்கக் கொள்கையுடன் ஒத்ததாக இளைப்பாறும் வயது கட்டாயமாக இருக்க வேண்டும். மேலும் 2011 ஏப்ரல் 29 ஆம் திகதிய பீஈடி/60 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிரூபத்தின்படி பாராளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட அதிகாரச் சட்டத்தின் மூலம் இளைப்பாறும் வயது குறிப்பாக தீர்மானிக்கப்பட்டாலன்றி ஏனைய அரச முயற்சிகளின் ஊழியர்களும் கால நீடிப்புக்கான வேண்டுதலை செய்யாதவிடத்து அவர் 57 ஆண்டுகள் வரை சேவையாற்ற முடியும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்படி, சுற்றுநிரூப அறிவுறுத்தல்களின்படி, தன்னார்வ இளைப்பாறலுக்கு விருப்பம் தெரிவித்த இ.மு.சபை ஊழியர்களிற்கான இழப்பீட்டுக் கொடுப்பனவின் நோக்கத்திற்காக இளைப்பாறும் வயது 57 ஆண்டுகளாகக் கருதப்பட வேண்டும். எனினும், மேற்படி தேவைப்பாட்டிற்கு முரணாக 57 வயதைக் கடந்த 10 உத்தியோகத்தர்களை மேற்படி, இளைப்பாறல் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, இழப்பீடாக ரூபா 10,466,523 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மேலே சொல்லப்பட்ட உத்தியோகத்தர்கள் 57 ஆண்டுகள் வயதைக் கடந்து 60 வயது வரை சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தால், இளைப்பாறும் சமயத்தில் எடுக்கப்பட்ட மாதாந்த திரட்டிய சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட செலுத்தப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 8,127,805 மாத்திரமாக இருக்க வேண்டும். அதன் பிரகாரம், 57 ஆண்டுகள் வயதைக் கடந்த உத்தியோகத்தர்களிற்கு வீஆர்எஸ் கோரப்பட்டதன் விளைவாக எதுவித சேவையும்

பெற்றுக்கொள்ளாது ரூபா 2,338,718 ஆன மேலதிக கிரயத்தை இ.மு.சபை செலுத்தியிருந்ததென்று அவதானிக்கப்பட்டது.

(iii) ஏனைய இடைக்காலப் படிகள் நீங்கலாக இளைப்பாறும் நேரத்தில் எடுத்த திரட்டிய மாதாந்த சம்பளத்தின் அடிப்படையில் இழப்பீடு கணிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் இ.மு.சபை வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் அடிப்படைச் சம்பளத்தின் 5% விசேடபடி என்பன உள்ளடங்கலாக திரட்டிய மாதாந்த சம்பளத்தின் அடிப்படையில் இழப்பீட்டைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க பொது முயற்சிகள் திணைக்களத்தினூடாக மனித வள முகாமைத்துவம் மீதான நடைமுறைக் கைநூலிற்காக திறைசேரிச் செயலாளரின் ஒத்திசைவு, பெறப்பட்டிருக்கவில்லை.

## 4.6 மோட்டார் வாகனங்களின் பயன்பாடு

---

### வரிசை அமைச்சிற்கு வாகனங்கள் விடுவித்தமை

---

மேன்மை தங்கிய சனாதிபதியினால் வழங்கப்பட்ட 2006 சனவரி 04 ஆம் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இணக்கக் கடிதம் மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.3.9 ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளிற்கு முரணாக 2011 ஆம் ஆண்டில் வரிசை அமைச்சிற்கு இரண்டு மோட்டார் வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்தன. வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பிற்காக 2005 தொடக்கம் 2011 வரையான காலத்திற்காக ரூபா 7,847,130 தொகையை இ.மு.சபை செலவிட்டிருந்தது.

## 5. கணக்களி தகைமை மற்றும் நல்ல ஆளுகை

---

## 5.1 கூட்டுத் திட்டம்

---

2007 – 2013 இற்கான கூட்டுத்திட்டம் நாட்டின் பொருளாதார நன்மைகளிற்கான பிரதான நோக்கங்களை அடைவதற்கான குறிக்காட்டுதலில் அமைக்கப்பட்டிருந்தது எனினும், 2011 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பட்ட பின்வரும் பிரதான இலக்குகள் அடையப்பட்டிருக்கவில்லை

| துறை | ஆண்டு இலக்குகள் | உண்மையானது | இலக்குகளின் சதவீதமாக எய்துகை |
|---|---|---|---|
| | | | % |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (ஐ.அ.டொலர் மில்லியன்) | 1,290 | 1,066 | 83 |
| வேலை வாய்ப்பு உருவாக்கல் (எண்ணிக்கை) | 13,000 | 6,555 | 50 |

## 5.2 நடவடிக்கைத் திட்டம்

ஒரு நடவடிக்கைத் திட்டம் புறம்பாகவோ அல்லது கூட்டுத்திட்டத்துடனினைந்தோ தயாரிக்கப்பட்டிருக்காததுடன் ஒவ்வொரு நடவடிக்கைக்குமான பொறுப்பான அலுவலரை இனங்கானப்பட்டிருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் 16 பதவிகளிற்கான மொத்த ஆளணியில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆறு பதவிகள் வெற்றிடமாக இருந்தன. உள்ளகக் கணக்காய்வுப் பணிப்பாளர் 2009 ஆம் ஆண்டில் இளைப்பாறியிருந்த போதிலும், அந்தப் பதவியை நிறைவு செய்வதற்கான அவசிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இரண்டு சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் பதவிகள் நீண்டகாலமாக வெற்றிடமாக இருந்தன.

## 5.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.12 ஆம் பிரிவின்படி குறைந்தது மூன்று மாதங்களிற்கொரு முறையாவது பிரதம உள்ளகக் கணக்காய்வாளருடன் ஒழுங்கான அடிப்படையில் கணக்காய்வுக் குழு கூடி அதன் அவதானிப்புக்களை அவசிய நடவடிக்கைகளிற்காக சிபார்சுகளுடன் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்ற போதிலும் மீளாய்வாண்டில் அந்தக் குழு இரண்டு முறை மட்டுமே கூடியிருந்தது.

5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் செலவினத்தின் பாதீடு மற்றும் உண்மையானவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதைக் காட்டுகின்றது.

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

மீளாய்வாண்டிற்கான கணக்காய்வின் பொழுது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக்காலம் இ.மு.சபை தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சட்டங்கள், விதிகள், மற்றம் பிரமாணங்களுடன் இணங்குதல்
(ஆ) பதவியினர் கடன்களின் அறவீடு
(இ) செயற்திட்டங்களைக் கண்காணித்தல்
(ஈ) தொழில் முயற்சிகளிடமிருந்து வரவேண்டியவற்றை சேகரித்தல்
(உ) ஆளுக்குரிய வேதனங்கள்

ஒப்பம் :- எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

S/y

# 2011.12.31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்காக இலங்கை முதலீட்டுச் சபை

# நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக 1971 இல. 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 14 (2) (இ) வாசகத்துக்கு அமைய கணக்காய்வாளர் அறிக்கைக்கான பதில்கள்

**<u>1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2)(இ) பிரிவுக்கமைய 2011 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை முதலீட்டுச் சபையின் நிதி அறிக்கைகள் தொடர்பான கணக்காய்வாளர் அறிக்கை</u>**

## 2.2 நிதி அறிக்கைகள் தொடர்பான தெளிவுபடுத்தல்கள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டுத் தரம் (SLAS) உடன் ஒவ்வாமை

இலங்கை நிதி அறிக்கையின் தரம் (SLFRS) இற்கு அமைவாக 2012 ஆம் ஆண்டு தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் தீர்மானிக்கப்பட்ட பிரதிலாபங்களின் தற்போதைய பெறுமதி வெளிப்படுத்தப்பட்டுளளது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

- 16 ஆவது பகுதிக்காக அனுமதிப் பத்திரக் கட்டணம், நிதி அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அது 2012 ஆம் ஆண்டு தொடக்கம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

- உடன்படிக்கை செயற்பாட்டுக் கட்டணம் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னரும் உடன்படிக்கை ஒப்பமிடப்பட்ட முன்னரும் சேகரிக்கப்பட்டுள்ளன. எனவே இவ் வருமானம் / நிதி மேற்கூறப்பட்ட காலத்துக்குள் ஈட்டப்பட்டுள்ளன.

  தொடர்ந்தும் உடன்படிக்கை செய்து கொள்ளாத போதிலும், உடன்படிக்கைகளை தயாரிக்கும் கட்டணம் செலுத்தப்படமாட்டாது. அதேபோன்று நிதி அடிப்படையில் உடன்படிக்கைகளைத் தயாரிக்கும் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்படமாட்டாது.

### 2.2.3 கிடைக்க வேண்டிய நிதி :

(அ) <u>கிடைக்க வேண்டிய கணக்கு மற்றும் ஐயக் கடனுக்கான ஏற்பாடுகள்</u>

(i) 2008 தொடக்கம் 2011 வரையான ஆண்டுக்கான நிலக்கூலி மற்றும் வருடாந்தக் கூலியினை அறவிட்டு கணிக்கப்பட்ட பெறுமதி 95% என்பதுடன் நீர் மற்றும் கூலி 98% அளவாக (2012.06.30 ஆந் திகதியன்று) கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு காணப்பட்டது.

| வருமானம் | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|
| நில வரி மற்றும் வருடாந்த அறவீடு (VAT நீங்கலாக) | மி. 849 | மி.826 | மி.759 | மி.767 |
| நிலக்கூலி மற்றும் வருடாந்த அறவீடு (VAT அடங்கலாக) | மி.950 | மி.926 | மி.851 | மி.883 |
| நீர் மற்றும் வாடகை | மி.883 | மி.850 | மி.774 | மி.755 |

**கடன்படுநர் - (2011.12.31 ஆந் திகதியன்று மேற்கூறப்பட்ட கணிக்கப்பட்ட பெறுமதியில் அறவிட வேண்டிய நிலுவை)**

| | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|
| நிலக்கூலி மற்றும் | | | | |
| வருடாந்த அறவீடு | மி.51 | மி.34 | மி.46 | மி.34 |
| நீர் மற்றும் வாடகை | மி.105 | மி.21 | மி.12 | மி.19 |
| | (2012.06.30 ஆந் திகதியன்று ரூ. மி. 22) | | | |
| | | | | |
| நிலக்கூலி மற்றும் வருடாந்தக் | | | | |
| கூலிக் கடன் | 95% | 96% | 96% | 95% |
| (நிலவரி மற்றும் வருடாந்தக் கூலிப் பெறுமதியின் மீது கணிக்கப்பட்ட பெறுமதி %) | | | | |
| | | | | |
| நீர் மற்றும் கூலி | | | | |
| அறவீட்டு விகிதாசாரம் | 88% | 98% | 98% | 97% |
| (நீர் மற்றும் கூலிப் பெறுமதிக்கமைய கணிப்பீடு செய்யப்பட்ட %) (2012.06.30 இல் 98%) | | | | |

எனவே வர்த்தகத்தினை இரத்துச் செய்யபாடுகளை துரிதப்படுத்தியதன் பயனாக 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்துக்குள் அறவிட முடியாக் கடனுக்காக வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் 16% தொடக்கம் 43% வரை அதிகரித்துள்ள போதிலும் கடன் மீள அறவீட்டு மட்டம் உயரிய மட்டத்தில் காணப்பட்டது. இக்கமன் ஒதுக்கீடுகள் அதிகரித்தமை, மூடப்பட்ட மற்றும் இரத்துச் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் நீர் கூலி மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கடன்படுநபருக்காக 2007 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்ட 100% ஒதுக்கீடு உதவியாக அமைந்தது.

தொடர்ந்தும் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு இலங்கை முதலீட்டுச் சபையினால் ஐயக் கடன் மற்றும் நிச்சமயற்ற கடன்களுக்கான ஏற்பாடுகளை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையாகும்.

| | | |
|---|---|---|
| விசேட ஏற்பாடுகள் | - | இரத்துச் செய்யப்பட்ட மற்றும் மூடப்பட்ட செயற்றிட்டங்களுக்காக 100% |
| பொதுவான ஏற்பாடுகள் | - | கிடைக்க வேண்டிய வருடாந்த நிதியின் அடிப்படையில் 15% (இரத்தச் செய்யப்பட்ட மற்றும் மூடப்பட்ட செய்றறிட்டங்களைத் தவிர) |

நிலக்கூலி, நீர் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகளுக்கு அமைய 7.5% (இரத்துச் செய்யப்பட்ட மற்றும் முடிவுறுத்தப்பட்ட செயற்றிட்டங்களைத் தவிர)

இது எவ்வாறாக இருப்பினும் முன்னாயத்தக் கொடுப்பனவாக மீளச் செலுத்தாத காணிப் பணிக்கொடை அறவீடு வலயத்துக்குள் அமுலில் உள்ள செயற்றிட்டங்கள் மூலம் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிடுவது பொருத்தமானது என்பதனைப் போன்று

அவ்வாறான வர்த்தகம் குத்தகைக் காலத்துக்குள் நில வாடகைக் கொடுப்பனவினைச் செலுத்தாத பட்சத்தில் செலுத்த வேண்டிய நிதியினைத் தீர்ப்பதற்காக முதலீட்டுச் சபையில் உள்ள காணி பணிக்கொடை நிலுவை பேணப்படுவதுடன் அதற்கிணைவாக வர்த்தகத்தினால் தாபிக்கப்பட்ட கட்டமைப்பு / கட்டிடங்களும் காணப்படுகின்றன.

நிலக்கூலி மற்றும் வருடாந்த நிதிக்காக சகல ஆண்டுகளிலும் ஜனவரி 01ம் திகதி அளவில் சகல வர்த்தகத்திற்காகவும் சபையினால் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. உடன்படிக்கைகளுக்கு அமைய சகல ஆண்டுகளிலும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதியன்று முதலாவது ஆண்டின் நிதி மற்றும் நில வாடகை செலுத்தப்படுதல் வேண்டும்.

கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு தொடர்ந்தும் பல சந்தர்ப்பங்களில் நினைவூட்டல்கள் வழங்கி வர்த்தகர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிதியினைச் சேகரிக்க சகல முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன.

1. பெப்ரவரி 28 ஆந் திகதியன்று செலுத்தி முடிக்காதபட்சத்தில் பெப்ரவரி 28 ஆந் திகதி தொடக்கம் சேவைகள் இடைநிறுத்தப்படும் என அறிவித்து பெப்ரவரி முதல் வாரத்திற்குள் முதலாவது நினைவுகூரல் அனுப்பப்படும்.

2. நிலக்கூலி மற்றும் வருடாந்தக் கட்டண கொடுப்பனவுகளின் இறுதித் தினமாக பெப்ரவரி 28 ஆந் திகதி வழங்கப்படுவதாக வலய அலுவலகங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன.

3. மார்ச் 02 ஆந் திகதியளவில் முதலீட்டுச் சபையின் நிதி திணைக்களத்தினால் கொடுப்பனவினை செலுத்தத் தவறிய வர்த்தகங்களுக்கு வழங்கப்படும் சகல சேவைகளையும் இடைநிறுத்துமாறு உரிய திணைக்களங்களுக்கு அறிவிக்கப்படும்.

4. வலய / கோட்ட அலுவலகங்களின் பணிப்பாளர் / கணக்காளர் / முகாமையாளர்களுக்கு சகல மாத இறுதியிலும் செலுத்த வேண்டிய நிலுவையின் அறிக்கை அனுப்பப்படுவதுடன் அறவிட வேண்டிய நிதி தொடர்பான செயற்பாடுகளுக்கு அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

5. ஜூன் 30 ஆந் திகதியன்று இரண்டாவது நினைவுகூரல் அனுப்பப்படும்.

6. 2011 ஆம் ஆண்டு தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் செப்டம்பர் முதலாம் வாரம் அளவில் 3வது நினைவுகூரல் அனுப்பப்படும்.

7. 2007 ஒக்டோபர் 01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் செலுத்த வேண்டிய நிதிக்கான தாமதங்கள் தொடர்பில் வட்டி அறவிடப்படும். இதற்கமைய ஜனவரி 10 ஆந் திகதி முடிவடைந்ததன் பின்னர் வட்டி அறவிடப்படும்.

8. சகல ஆண்டின் ஆரம்பத்திலும் முன்னைய ஆண்டின் நிதி / நில வாடகை செலுத்தப்படாத வர்த்தகங்களின் பட்டியலின் உடன்படிக்கைகளை இரத்துச் செய்வதற்காக முதலீட்டுச் சபையின் உரிய முதலீட்டுப் பிரிவுக்குச் சமர்ப்பித்தல்.

9. செலுத்த வேண்டிய நிதி கொண்ட செயற்றிட்டங்களுக்கு அவற்றை இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் உரிய முதலீட்டுக் குழுவினால் ஒப்பீடாகக் காணப்படாமை / இரத்துச் செய்வதற்கான வெளிப்பாடுகள் அனுப்பப்படும்.

10. 2012 ஆம் ஆண்டு தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் வர்த்தகத்தின் நிலைமைகள் தொடர்பாகக் கருத்திற் கொள்ளாது சகல கடன்களைச் செலுத்தத் தவறுபவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சட்டத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படும். 2012 ஆம் ஆண்டுக்கு முன்னர் அழைப்பானை அனுப்பப்பட்டது இரத்துச்செய்யப்பட்ட வர்த்தகங்களுக்கு மாத்திரம் ஆகும்.

மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக வலயப் பணிப்பாளர்களுக்கு அவர்களது மேற்பார்வையின் கீழுள்ள வர்த்தகங்களின் செயற்பாடுகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தும் வகையில் அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளதுடன் கடனினை மீள அறவிடுவதனை ஊக்குவிப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுக்க அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

முதலீட்டுச் சபையினால் கடன் சேகரிப்பதற்கு தனியான பிரிவினைத் தாபித்து அறவிட வேண்டிய நிதியினை அறிவிடுவதற்குத் தொடர்ந்தும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

எமது அறிக்கைகளுக்கு அமைய கணக்குகளுக்காக கிடைக்க வேண்டிய இருந்த போதிலும் அறவிடமுடியாக் கடனாக கழிக்கப்பட்ட நிதி ரூபா 32,734,612/47/- என்பதுடன் அது கணக்காய்வாளர் அறிக்கையில் ரூபா 73,113,266.00/- எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ரூபா 73,113,266.00/- இல் வேறு கடன்படுநரின் கீழ் ரூபா 40,378,653/- அறவிடமுடியாக் கடன் நிதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ii) அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக் கடனுக்கான ஒதுக்கீட்டுக்காக இலங்கை முதலீட்டுச் சபையினால் தயாரிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மூலம் இரத்துச் செய்யப்பட்ட மற்றும் மூடப்பட்ட செயற்றிட்டங்களில் இருந்த அறவிடப்பட வேண்டிய நிதிக்காக 100% அளவு வழங்குவதற்கு மாத்திரம் ஆகும்.

(iii)

- 2011 இல. 43 கொண்ட குறை செயற்றிறன் மற்றும் குறை வளர்ச்சி கொண்ட சொத்துச் சட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்பட்ட,

  டைனமிக் குளோதிங் (தனியார்) கம்பனி - ரூ. 12,249,330/-

  யொபீடா அசோசியேட் - ரூ. 3,871,625/73

  2011 இல. 43 கொண்ட குறை செயற்றிறன் மற்றும் குறைவளர்ச்சி கொண்ட சொத்துச் சட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட வர்த்தகங்களுக்குரிய தொடர்ந்தும் கிடைக்க வேண்டிய காணப்படும் நிதி சொத்துக்காக செலுத்தப்பட்டுள்ள நட்டஈடுகளில் இருந்து அறவிடப்படும். (காணி தவிர)

- **STY சர்வதேச ஆடைத் தொழிற்சாலை (தனியார்) கம்பனி - ரூ. மி. 11.3**

  கொக்கல ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தில் தாபிக்கப்பட்டுள்ள STY சர்வதேச ஆடைத் தொழிற்சாலை (தனியார்) கம்பனி பலாத்காரமாகத் தொடர்ந்து வேறு முதலீட்டாளருக்கு வழங்கப் பட்டுள்ளது. இதன் அளவு ஏற்கனவே முதலீட்டுச் சபையினால் பெறப்பட்டுள்ள கட்டிடங்களின் பெறுமதிக்கு பதிலீடு செய்யப்பட்டுள்ளது. பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைய கட்டிடத்தின் பெறுமதி ரூபா. 24 மில்லியன் ஆகும்.

மேற்கூறப்பட்டவாறு செலுத்தவேண்டிய நிதியினை அறவிடுவதற்கு முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு அமைய நீண்ட காலம் செலுத்த வேண்டியுள்ள நிதி குறைக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(iv) மற்றும் (v)

சகல ஆண்டின் ஆரம்பத்திலும் செயற்பாட்டுத் திணைக்களம் / முதலீட்டுச் சபைப் பிரிவிற்குத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள மற்றும் உடன்படிக்கைகளை முடிவுறுத்துவதற்காக வருடாந்தம் நிதி செலுத்தப்படாத வர்த்தகப் பெயர்ப்பட்டியல் வழங்கப்படுகின்றது.

நீருக்காக செலுத்த வேண்டிய ரூபா 79 மில்லியன் நிதி, ரூபா 70 மில்லியன் மற்றும் ரூபா 2.1 மில்லியன் நிதி மேர்பொக் எம்.டீ.எப். லங்கா (தனியார்) கம்பனியிடமிருந்து அறவிட வேண்டிய கூலியாகும்.

(ஆ) <u>ஏனைய கடன்படுநர்</u>

(i) அறவிட வேண்டிய நிதியில் நிதி அமைச்சின் அங்கீகாரத்தின் எதிர்பார்ப்புடன் கணக்கினை முடிவுறுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் கழிக்கப்பட்டது. இது எவ்வாறாக இருப்பினும் முதலீட்டுச் சபையினால் அமைச்சின் தழுவல் அங்கீகாரம் கோரி அது கிடைக்கும் வரை இருத்தல்.

(ii) கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

### 2.2.4 <u>சட்டங்கள், ஒழுங்குகள், கோவைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு ஒவ்வாமை</u>

(அ) <u>மேற்பார்வை ஒதுக்கீடுகளுக்குப் புறம்பாக பணியாளர் சபையின் நலன்புரி நிதியத்தினை முன்னெடுத்தல்</u>

நோக்கம் - நிதியம் பயன்படுத்தும் வட்டியின் ஒரு பகுதியினை தழுவி நிவாரண வட்டி விகிதாசாரத்திற்கு அமைப்பின் பணியாளர் சபைக்காக ஆறு

மாத காலம் சம்பளக் கடன் வழங்கும் சந்தர்ப்பங்களின் ஏற்பாடுகளின் நிதி நிலைமைக்கு ஏற்படக் கூடிய அழுத்தங்களைக் கட்டுப்படுத்தல்

பங்களிப்பு - நிதியம் அங்கத்துவப் பங்களிப்பின் மற்றும் முதலீட்டுச் சபையின் நிதிப் பங்களிப்பு ஆகிய இரண்டினையும் கொண்டமைந்துள்ளன.

அங்கீகாரம் - 1994.10.10 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

(ஆ) <u>உழைக்கும் போது செலுத்தப்படும் வரி</u>

2012.11.12 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் செயலாளரினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைய 2012 நவம்பர் மாதம் தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் முதலீட்டுச் சபையினால் ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து அறவிட வேண்டிய உழைக்கும் போது செலுத்தும் (PAYE) வரியினைக் குறைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

(இ) <u>ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள்</u>

**தொழில்சார் கொடுப்பனவு**

நோக்கம் - தொழில்சார் ரீதியில் தகைமை பெற்றவர்களை சபையின் சேவைக்கு கவர்ச்சிக்கு உட்படுத்துவதற்காக மற்றும் அவ்வவ் உரிய தொழில்களில் ஈடுபடுவோர் தற்போது சேவையாற்றும் ஊழியர்கள் உயரிய தொழில் தகைமைகளைப் பெறுவதற்கு ஊக்குவித்தல் மற்றும் அதனூடாக அமைப்பின் இலக்கினை எட்டுவதற்கு அவர்களது பங்களிப்பினை விருத்தி செய்தல்.

அங்கீகாரம் - பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் 1991.09.13 ஆம் திகதி வழங்கப்பட்டது.

**சாரதிக் கொடுப்பனவு**

நோக்கம் - பணிப்பாளர் சபையினால் வாகனங்கள் ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவினை மேற்கொள்ளல் மற்றும் முதலீட்டுச் சபையினால் சாரதி வழங்காதிருத்தல். இவ்வாறு கொடுப்பனவினை மேற்கொள்வது முதலீட்டுச் சபைக்கு நிதி அடிப்படையில் மற்றும் நிர்வாக ரீதியில் சாரதி ஒருவரை சேவையில் ஈடுபடுத்துவதனை விட பயன்மிக்கது என்பதனால் அது பரிந்துரை செய்யப்பட்டது.

அங்கீகாரம் - பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் 2003.01.14 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**சமூகமளிப்பு ஊக்குவிப்பு**

நோக்கம் - சமூகமளிப்பு ஊக்குவிப்புக்கு அடிப்படையாக அமைந்திருப்பது ஊழியர் நேரத்திற்கு கடமைக்குச் சமூகமளித்தல் மற்றும் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்வதற்காக முதலீட்டுச் சபைக்கு இயலுமையினை ஏற்படுத்தும் பொருட்டு விடுமுறை பெறும் அளவினைக் குறைப்பதாகும்.

அங்கீகாரம் - பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் 1990.11.06 ஆந் திகதி வழங்கப்பட்டது.

சபையின் ஊழியர்களின் பயன்பாடுகளுக்காக நலன்புரி யோசனைத் திட்டத்தினை முன்னெடுப்பதற்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள முதலீட்டுச் சபைக்கு அவசியமில்லை. முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 13 ஆவது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபை தடுக்கும் ஏதேனும் பொது / அரச வர்த்தகம், அரச நிதி அல்லது ஏனைய சுற்றறிக்கைகள் காணப்படவில்லை.

எனவே, முதலீட்டுச் சபையினால் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தும் போது அதனைத் தடுக்கும் அரசின் எந்தவொரு பொதுத் திறைசேரி ஆலோசனைகள், ஆலாசனைக் கோவைகள், சட்டங்கள் அல்லது ஏனைய சுற்றறிக்கைகள் இல்லாத சந்தர்ப்பங்களில் சபைக்கு நலன்புரி யோசனைத் திட்டம் மற்றும் நலன்புரி நிதியத்தினைப் பேணுவதற்கும் தொழில்சார் கொடுப்பனவு, சமூகமளிப்பு ஊக்குவிப்புக் கொடுப்பனவு உட்பட சாரதி ஊக்குவிப்புக் கொடுப்பனவினைச் செலுத்துவதற்கும் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் காணப்படுகின்றது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

வெளிப்பாடுகள் இல்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்சாதனைகள்

(அ) ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயம், ஏற்றுமதி செயற்பாட்டு பூங்கா, தொழில்நுட்பப் பூங்கா, வலய அலுவலகங்கள் மற்றும் புதிய பொருளாதார வலயங்களின் செயற்சாதனைகள்.

அநேகமான ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்கள் தாபிக்கப்பட்டிருப்பது தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் மற்றும் வலய விருத்தியினை இலக்காகக் கொண்டு நாட்டின் குறைந்த அபிவிருத்தி கொண்ட பிரதேசங்கள் உருவாக்கப்பட்டுள்ளதேயன்றி பயன்பெறும் மத்திய நிலையங்களாக பேணுவதற்கான அடிப்படை நோக்கத்திற்காக அல்ல.

(i) கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.
2009 ஆம் ஆண்டில் சீதாவாக்கை ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயத்தினை ஆரம்பிக்கப்பட்டதாக அறிக்கயைில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் சீதாவாக்கை தொழில்நுட்பப் போட்டி 1999 ஆம் ஆண்டில் கைத்தொழில் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் பின்னர் 2001 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் உட்படுத்தப்பட்டு. 2009 ஆம் ஆண்டில் வலயத்தின் பெயர் சீதாவாக்கை ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

(ii) கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(iii) கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(iv) கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

நட்டம் அதிகரிப்புக்கான பிரதான காரணமாக அமைந்தது தேய்மான அளவு அதிகரித்தல் மற்றும் சம்பள அளவு, நிர்வகிக்கக் கூடிய வேறு செலவின வகைகளில் அதிக மாற்றங்கள் இன்றி காணப்பட்டமையாகும்.

(v) கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயம், கைத்தொழில் பேட்டைகள் மற்றும் ஏற்றுமதிச் செயற்பாட்டுப் பூங்காக்கள் தாபிக்கப்பட்டிருப்பது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புக்களைப் பெறும் பிரதான நோக்கத்துடன் ஆகும். ஏற்றமதிச் செயற்பாட்டு வலயம் அமைந்துள்ள இடம், காணிப் பயன்பாட்டின் அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் உட்கட்டமைப்பு வசதிகளின் தன்மை மற்றும் தேய்மானம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். முதலீட்டாளர்கள் மற்றும் அவர்களது ஊழியர்களுக்கு சிறந்த செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கும் நட்டங்களைக் குறைப்பதற்கும், பண்புசார் தரமிக்க சேவையினை உறுதிப்படுத்து வதற்குமான பொறுப்புக்களைக் கொண்டுள்ள உத்தியோகத்தர் குழுவினால் சகல வலயங்களிலும் முகாமைத்துவங்கள் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு சில வலயங்களின் நிலைமைகள் நட்டமீட்டும் வலயங்களாகக் காணப்பட்ட போதிலும் அவர்கள் முடியுமான அளவு உயர்ந்தபட்சம் நட்டத்தினைக் குறைத்து முன்னெடுத்து சபையின் மேற்பார்வையின் கீழ் தமது கடமைகளை மேற்கொள்ளும் வலயப் பணியாளர் சபை தொடர்பில் வலய முகாமைத்துவம் திருப்தியடைந்துள்ளது.

(ஆ) முதலீட்டுச் சபையின் செயற்றிட்டங்கள்

(i) 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்ட வரையான காலத்துக்குள் இலங்கையில் உள்நாட்டுப் போர் நிலவிய காலப் பகுதியாக இருந்தமையினால் உள்நாட்டு முதலீட்டு ஊக்குவிப்புக்களுக்கு பாரிய தடைகள் காணப்பட்டது. இது எவ்வாறாக இருப்பினும் பாரிய சிரமத்திற்கு மத்தியில் 2008 ஆம் ஆண்டு, 2011 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட அளவினை விட நேரடி வெளிநாட்டு முதலீட்டின் பெறுமதி 889 மில்லின் அமெரிக்க டொலரினை விடக் கூடிய பெறுமதியினைப் பெற்றுக்கொள்ள முதலீட்டுச் சபைக்கு முடிந்தது. இக்காலத்துக்குள் முதலீட்டுச் சபையினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது கூடுதலான பெறுமதி கொண்ட முதலீடுகளை கவர்ச்சிக்கு உட்படுத்துவது அன்றி முதலீட்டுச் செயற்றிட்டங்களை கவர்ச்சிக்கு உட்படுத்துவதற்கு அல்ல. மேலும் 2011 வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னர் 3 – 5 ஆண்டுகளுக்காக வரியானது மட்டுப்படுத்தப்பட்ட காலத்தினை நீக்கி முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்படவில்லை என்பதனைக் குறிப்பிடுகிறேன். இது எவ்வாறு

இருப்பினும் வியூக அபிவிருத்தி செயற்றிட்டச் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து நிலம், சூழல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பிலான பிரச்சினைகளுக்கு மத்தியிலும் 2011 ஆம் ஆண்டில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் இது வரையில் பெற்றுக் கொண்ட அதிகூடுதலான நேரடி வெளிநாட்டு முதலீட்டுப் (FDI) பெறுமதியினை எட்ட முதலீட்டுச் சபைக்கு முடிந்தது.

இலங்கை முதலீட்டுச் சபையின் முகாமைத்துவத் தகவல் முறைமை (MIS) அறிக்கைகளுக்கு அமைய 2001 – 2011 இற்கிடைப்பட்ட காலத்தில் 2573 உடன்படிக்கைகள் (தற்போது சமகாலப்படுத்த பெறுமதியின் எண்ணிக்கை 2578) கைச்சாத்திடப்பட்டதுடன் அக்காலத்துக்குள் 1199 செயற்றிட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டு மூடப்பட்டு அல்லது இடைநிறுத்தப்பட்டன.

- இது எவ்வாறாக இருப்பினும் 1199 இற்கு 2001 இற்கு முன்னர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட (அவ்வாறாயின் 1978) தொடக்கம் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களும் அடங்குகின்றன. எனினும் கணக்காய்வாளர் நாயகத்தின் வெளிப்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட மொத்த செயற்றிட்டங்களின் எண்ணிக்கையில் இரத்துச் செய்யப்பட்ட, மூடப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 47% எனக் குறிப்பிடுவது சரியானதல்ல.
